Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் – 32 | வி 30 ரூபா செய்தி : 021 493 0000 விளம்பரம் : 021 493 1111

சுடர் :35 கதிர் :36 ஆம் நாள் புதன்கிழமை 01 ஜனவரி 2020 வள்ளுவர் ஆண்டு 2050






"வாசகர்கள், விநியோகஸ்தர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் உதயனின் புத்தாண்டு நல்வாழ்த்துகளுங்கோ...!"

## வடக்கில் கடமையாற்றும் தமிழ் பொலிஸாருக்கு கூண்டோடு மாற்றல்

### தமிழ் மக்களுக்கு அரசின் 'புத்தாண்டுப் பரிசு'

யாழ்ப்பாணம், ஜனவரி 01

வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் 200க்கும் மேற்பட்ட தமிழ்ப் பொலிஸாருக்குத் திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவி விஜேயகுணவர்த்தனவால் இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவர் இன்று இடமாற்றம் பெற்றுச் செல்லவுள்ள நிலையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 29 ➤



## ராஜபக்ஷ அரசு ஏமாற்ற முடியாது

### உதயனுக்கு சம்பந்தன் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.1

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் வெளிநாடுகளினதும் சர்வதேச அமைப்புகளினதும் தீவிர கண்காணிப்புக்குள் இந்த நாடு உள்ளது. ஜனாதிபதி 29 ➤

## தமிழ் மக்களை பழி வாங்காதீர்

### புதிய அரசிடம் கோருகிறார் ரணில்

கொழும்பு, ஜன.1

ஆட்சிக்கு வந்துள்ள ராஜபக்ச அரசு ஐக்கிய தேசியக் கட்சியினரைப் பழி வாங்குவதைப் போல் தமிழ் மக்களையும் பழிவாங்கும் நடவடிக் 29 ➤

## வெட்டுக் காயத்துடன் ஆணின் சடலம் !

கிளிநொச்சி, ஜன.1

கிளிநொச்சி, மலையாளபுரம், புதுஐயன் குளம் அணைக்கட்டின் அருகே ஆண் ஒருவரின் சடலம் நேற்று 29 ➤




## ஏட்டிக்கு போட்டி சோதனை!

முல்லைத்தீவு, ஜன.1

முல்லைத்தீவு, வட்டுவாகலில் கடற்படையினர் சோதனைச் சாவடி அமைத்துச் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுத்து வரும் நிலையில் நேற்று அதேபகுதியில் ஏட்டிக்குப் போட்டியாக இராணுவத்தினரும் சோதனைச் சாவடிகளை அமைத்துள் 29 ➤

## சுடுகஞ்சியால் குழந்தை சாவு

யாழ்ப்பாணம், ஜன.1

குக்கரில் இருந்த சுடு கஞ்சி மேலே தவறுதாகக் கொட்டியதால் இரு வயதுப் பெண் குழந்தை ஒன்று உயிரிழந்து 29 ➤

## எலிக் காய்ச்சல் அவதானம்!

கொழும்பு, ஜன.1

தற்போது நிலவுகின்ற மழையுடன் கூடிய காலநிலையால் எலிக்காய்ச்சல் பரவும் வாய்ப்பு 29 ➤

## 'கோத்தா' பேரில் கப்பம்: யாழில் ஒருவர் கைது!

### சூத்திரதாரி சிறையில் உள்ளாராம்

யாழ்ப்பாணம், ஜன.1

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவித்து அச்சுறுத்திப் பணம் பெற்ற குற்றச்சாட்டில் அளவெட்டியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சிறைச்சாலையில் உள்ள ஒருவரும் இந்தச் சம்பவத்தில் தொடர்புபட்டுள்ளார் என்று தெரியவந்துள்ள நிலையில் அது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று காங்கேசன்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். காங்கேச 29 ➤

## முதல் நாளில் கோணல்

யாழ்ப்பாணம், ஜன.1

புத்தாண்டு இன்று பிறக்கும் நிலையில், பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு விடுத்துள்ள அறிவித்தல் கடும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

'ஒரே நாட்டில் , ஒரே கொடியில் , ஒரே இனத்தில் ஒற்றுமையாக வாழ்வோம்' என்று உறுதியுரை ஏற்குமாறு அமைச்சின் அறிவிப்பில் பணி 29 ➤




புத்தாண்டை முன்னிட்டு தேவாலயங்களில் நள்ளிரவு சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. யாழ்ப்பாணம் பாசையூர் புனித அந்தோனியார் தேவாலயத்திலும் சிறப்பு ஆராதனை நடத்தப்பட்டு, திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இப்பொழுது 75% 4G போனஸ்
ரூ. 49 500MB 825MB
ரூ. 99 1200MB 1650MB
4G
Google play App Store
Sri Lanka Telecom Mobitel

# 'லைசென்ஸ்' பெற புதிய நடைமுறை

கொழும்பு, ஜன.1

**கனரக வாகனச் சாரதி அனுமதிப் பத்திரத்துக்கு முழு மருத்துவ பரிசோதனையையும், குறைந்த வலுக் கொண்ட வாகனச் சாரதி அனுமதிப் பத்திரங்களுக்கு கண் பரிசோதனையையும் மட்டுமே பெற்றுக்கொள்ள அதிகாரிகளுக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ச அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.**

பயணிகள் போக்குவரத்து அமைச்சின் மூத்த அதிகாரிகளுடன் நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது ஜனாதிபதி இந்த அறிவுறுத்தலை விடுத்தார்.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலகம் அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கனரக வாகனங்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு மட்டுமே முழுமையான மருத்துவ பரிசோதனைச் சான்றிதழ் பெறப்படவேண்டும். ஆனால் இலகுரக வாகனங்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு கண் பார்வைப் பரிசோதனை சான்றிதழ் மட்டும் போதுமானது என ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

சாரதி அனுமதிப்பத்திரமொன்றை வழங்கும்போது மேற்கொள்ளப்பட வேண்டிய மருத்துவ பரிசோதனை தொடர்பிலும் ஜனாதிபதி இதன்போது கவனம் செலுத்தினார். இலகுரக வாகனங்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு கண் பார்வைப் பரிசோதனை சான்றிதழை அரச வைத்தியசாலைகளில் பெற்றுக்கொள்வதற்கு வசதி ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த முறையில் நிலவும் சிக்கல் நிலையை தெளிவுபடுத்திய ஜனாதிபதி, இலகு ரக வாகனங்களுக்கு கண் பரிசோதனை மாத்திரம் போதுமானது என்பதை சுட்டிக்காட்டினார். இதற்கான பரிசோதனையை வைத்தியசாலையில் பெற்றுக் கொள்வது தொடர்பாக கண்டறியவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது. முழுமையான மருத்துவப் பரிசோதனை கனரக வாகனங்களுக்கு சாரதி அத்தாட்சிப் பத்திரங்களுக்காக மாத்திரம் மட்டுப்படுத்தப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பிரச்சினைகளை மிகக் குறுகிய காலத்திற்குள் இனங்கண்டு மக்கள் எதிர்பார்க்கும் சிறந்த சேவையை வழங்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றுமாறு ஜனாதிபதி மோட்டார் வாகன திணைக்கள அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்- என்றார். (எ)

# சிங்களம் திணிக்கப்பட்டால் தேசிய நிகழ்வு புறக்கணிப்பு

*சிவாஜிலிங்கம் தெரிவிப்பு*

சிங்களத்தில் தேசிய கீதத்தை பாடுமாறு வலியுறுத்தினால் தேசிய நிகழ்வுகளைப் புறக்கணிப்போம் எனத் தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக்கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் மாகாணசபை உறுப்பினருமாகிய எம்.கே. சிவாஜி லிங்கம். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

1948ஆம் ஆண்டிலிருந்து இலங்கையின் சுதந்திர தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. 1949 ஆண்டு முதன் முறையாக சுதந்திர சதுக்கத்தில் சுதந்திர தினத்தைக் கொண்டாடிய போது தமிழிலும் பாடப்பட்டது. அதன் பின்னர் நீண்ட காலமாக சிங்களத்தில் பாடப்பட்டு வந்தது. 1972ஆம் ஆண்டு புதிய அரசமைப்பு நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டு சிங்களத்தில் பாடப்பட்டபோது தொடர்ந்து 3 நாட்கள் தமிழ்ப் பேசும் பகுதிகள் எங்கும் கடையடைப்பு இடம்பெற்றது. போராட்ட காலத்திலும் இந்தப் பகிஷ்கரிப்பு நிலை தொடர்ந்தது.

கடந்த அரசின் காலத்தில் இது தளர்த்தப்பட்ட போதும் மீண்டும் தனிச் சிங்கள கீதம் என்கின்ற குரல்கள் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியுள்ளன. எங்களைப் பொறுத்தவரையில் இந்த நாடு இரண்டு தேசங்கள் இணைந்த நாடு. பல்லின பன்மொழி பலமதங்கள் கொண்ட நாடு. இந்த நாட்டில் தனிச் சிங்களம் என்பது பிரிவினையை ஏற்படுத்துமே தவிர நல்லிணக்கத்தைக் கொண்டு வராது. நிர்வாக ரீதியாக அரச அலுவலகங்கள் பாடசாலைகளில் தனிச் சிங்களத்தில் தான் தேசிய கீதம் பாடவேண்டும் என வற்புறுத்தப்பட்டால் அரச உத்தியோகத்தர் மற்றும் மாணவர்கள் மூலம் நிகழ்வுகளை நாம் புறக்கணிக்கச் செய்வோம்- என்றார். (எ-104)

# கல்வியங்காடு பொதுச் சந்தை இன்றிலிருந்து பழைய இடத்தில்

கல்வியங்காட்டு பொதுச் சந்தை புதுவருடமான இன்று தொடக்கம் நிரந்தரக் கட்டடத்தில் இயங்கவுள்ளது என்று மாநகர சபை பிரதி மேயர் து.ஈசன் தெரிவித்தார்.

இந்தச் சந்தை முன்னர் இருந்த இடத்திலிருந்து தற்காலிகமாக ஆடியபாதம் வீதியிலுள்ள தனியார் காணிக்கு மாற்றப்பட்ட பின்னர் சந்தைக்குரிய இடத்தில் சந்தைக்கான கட்டடம் பல மில்லியன் ரூபாவில் அமைக்கப்பட்டது. புதிய சந்தையை மாநகர முதல்வர் சம்பிரதாயபூர்வமாக அண்மையில் திறந்துவைத்திருந்தார். தற்போது இந்தச் சந்தைக் கட்டடத்தில் மரக்கறி மற்றும் மீன் விற்பனைகள் யாவும் அதற்கென்று ஒதுக்கப்பட்ட இடங்களில் வைத்து இன்று தொடக்கம்விற்பனைஇடம்பெறும். (து-17-104)

## படங்களை பகிர்ந்தவர்கள் சிறையில்

கொழும்பு, ஜன. 1

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான புகைப்படங்களை சமூக ஊடகங்களில் பகிர்ந்த 3 இலங்கையர்களுக்கு டுபாய் நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்துள்ளது. மட்டக்களப்பை சேர்ந்த இளைஞன் ஒருவரும் தண்டனை பெற்றுள்ளார்.

மட்டக்களப்பு சீயோன் தேவாலய தாக்குதலில் உறவினரை இழந்த மட்டக்களப்பு இளைஞன் மற்றும் இரண்டு சிங்கள இளைஞர்களே சிறைத்தண்டனை அனுபவிக்கின்றனர்.

தாக்குதலுடன் தொடர்புடைய புகைப்படங்களை அவர்கள் பகிர்ந்ததாக குற்றம் சுமத்தப்பட்டது. மட்டக்களப்பை சேர்ந்த குணதாஸ்டிரான் மற்றும் ரமேஷ் பெர்னாண்டோ, விஸ்வா டி சில்வா ஆகியோரே தண்டனைக்குள்ளாகியுள்ளனர்.

ஹோட்டலொன்றின் பாதுகாப்பு அதிகாரியாகவும், பாதுகாவலராகவும் இருந்த மூவரே கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த நவம்பர் 4ஆம் திகதி ஹோட்டலில் வைத்து அவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். தமது கையடக்கத் தொலைபேசியின் வழியாக, சமூக ஊடகங்களில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்புடைய படங்களை பகிந்ததாக அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

டிசெம்பர் 22ஆம் திகதி அவர்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு, நேற்றுமுன்தினம் வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். வழக்கு விசாரணையின்போது, அவர்களுக்கு தண்டம் செலுத்த உத்தரவிடப்பட்டது. எனினும், அந்தப்பணத்தைசெலுத்த வசதியில்லையென அவர்கள் குறிப்பிட்டதைடுத்து, அவர்களுக்கு மூன்றரை வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ஒ.5)



## இன்றைய நாள்

**மேடம்:** உங்கள் செயல் திறன் கண்டு புதியவர் நட்பு பாராட்டுவார். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். தாராள பண வரவு கிடைக்கும். உறவினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி பெருகும்.

**இடபம்:** உறவினர்களிடம் அதிக அன்பு, பாசம் கொள்வீர்கள். உங்கள் மீதான மதிப்பு, மரியாதை கூடும். தொழில், வியாபாரம் செழிக்க தேவையான பணி புரிவீர்கள்.

**மிதுனம்:** முக்கியமான பணி ஒன்று அவசர கதிக்கு மாறலாம். நல்லோரின் ஆலோ சனை நன்மை பெற உதவும். தொழில், வியாபாரத்தில் இலக்கு கால அவகாசத்தில் நிறைவேறும்.

**கடகம்:** சிலர் உங்களை புகழ்ந்து பேசி சொந்த காரியம் சாதிக்க முயற்சி செய்வர். தொழில், வியாபாரம் அதிக உழைப்பால் வளர்ச்சி பெறும். புதிய இனங்களில் பண செலவு ஏற்படலாம். வாகனத்தில் மித வேகம் பின்பற்ற வேண்டும்.

**சிம்மம்:** உங்கள் ஞாபக சக்தி சிறப்பாக இருக்கும். வாழ்வில் குறுக்கிடும் சிரமம் வெல்லும் திறன் அறிவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி பணி இனிதாக நிறைவேறும்.

**கன்னி:** உங்கள் மனம், செயலில் புத்துணர்வு பிறக்கும். தொழில், வியாபார நடைமுறை திருப்திகரமாகும். ஆதாய பண வரவு கிடைக்கும். வீட்டு உபயோக பொருள் வாங்குவீர்கள். பெண்கள் நகை இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.

**துலாம்:** விட்டு கொடுக்கும் மனபாங்குடன் செயல்படுவதால் பல நலமும் பெறலாம். தொழில், வியாபார நடைமுறை சுமாரான அளவில் இருக்கும். பண வரவு கிடைப்பதில் தாமதம் இருக்கும்.

**விருச்சிகம்:** சிலர் உங்களுக்கு உதவுவது போல பாசாங்கு செய்வர். சுய முயற்சியால் பணி நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சிக்கு அதிக உழைப்பு தேவைப்படும்.

**தனுசு:** குடும்ப உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி நிறைவேறும். தாராள பண வரவு கிடைக்கும்.

**மகரம்:** மாறுபட்ட நிகழ்வு மனதில் பாதிப்பு தரலாம். தொழில், வியாபார குளறுபடியை தாமதமின்றி சரி செய்யவும். அளவான பண வரவு கிடைக்கும்.

**கும்பம்:** பணிகளை சுறுசுறுப்பாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க அனுகூல காரணி பலம் பெறும். ஆதாய பண வருமானம் கிடைக்கும்.

**மீனம்:** நண்பருக்காக பரிந்து பேசுவீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணி சுமை ஏற்படும். பண வரவுக்கேற்ப செலவுகளை திட்டமிடுவீர்கள்.



# 5 நாள்களில் சிக்கிய 500 கிலோ கஞ்சா

*யாழ்ப்பாணம்,ஜன.1*

**கடந்த 5 நாள்களில் மன்னார் வளைகுடா கடல் பிராந்தியங்கள் வழியாக இலங்கைக்குக் கடத்த முயன்ற 500 கிலோ கஞ்சா மற்றும் பீடி இலைகள் பாதுகாப்பு அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.**

இந்தியாவின் இராமநாதபுரம் கடற்கரையில் 24 மணி நேர தீவிர கண்காணிப்பையும் மீறி கடந்த 5 தினங்களில் கடத்தப்பட முயன்ற கோடிக் கணக்கான ரூபா மதிப்பிலான போதைப் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இராமநாதபுரம் எஸ்.பி. பட்டிணம் கடற்கரைப் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் கடற்கரை மணலில் புதைத்து வைக்கப் பட்டிருந்த சாக்கு மூடையை எடுத்து சோதனை செய்த போது, அதில் 11 பொதிகளில் 380 கிலோ கஞ்சா இருப்பது தெரிய வந்தது. இதனையடுத்து கஞ்சாவை மீட்ட சுங்கத் துறை அதிகாரிகள் அவற்றை இராமநாதபுரம் சுங்கத்துறை அலுவலகத்தில் ஒப்படைத்தனர்.

அத்துடன் கஞ்சா வாங்குவதற்கு இலங்கையில் இருந்து எவரேனும் கடல் வழியாக தமிழகம் ஊடுருவியுள்ளனரா அல்லது தமிழகத்தைச் சேர்ந்த கடத்தல்காரர்கள் கஞ்சாவை படகில் ஏற்றும் போது சுங்கத்துறை அதிகாரிகளை கண்டதும் கஞ்சா பொதிகளைக் கடற்கரையில் விட்டு சென்றனரா? என்ற கோணத்தில் சுங்கத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.(சு-105)

# படையலில் மதுபானம்

## சாயி மந்திருக்கு எச்சரிக்கை

*யாழ்ப்பாணம்,ஜன.1*

நல்லூர் நாவலர் வீதி சீரடி சாயி மந்திரில் படையலின் போது மதுபானம் வைக்கப்பட்டமை மத நம்பிக்கைக்கும் , விழுமியத்துக்கும் முரணான செயற்பாடாகும் என்று ஆலய நிர்வாகத்துக்கு யாழ்ப்பாணம் பிரதேச செயலர் கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மதுபானங்களை சமய நிறுவனங்களில் பயன்படுத்தப் படலாகா என்ற சட்ட உட்பிரிவுக்குக் கீழ் தவறானதும், சட்டத்துக்கு முரணானதுமான நிகழ்வாகும். ஆலய ஆச்சாரத்துக்கு முரணாக ஒரு புனிதமான இடத்தில் நடைபெற்ற இந்தச் செயலானது ஒரு துன்பகரமானதாகவே கருதப்படுகின்றது.

மதங்கள் மனித மணங்களில் நல்ல சிந்தனைகளையும், அன்பையும், அமைதியையும், சமாதானத்தையும் உருவாக்குவதற்கு ஆலயங்கள் அறப்பணி நிலையங்களாக செயற்பட வேண்டும். மனிதர்களுக்குச் சேவை செய்யும், மனித விழுமியங்களையும் மேம்பாட்டையும் போதிக்கும், வழிகாட்டும் ஆற்றுப்படுத்தும் நிலையங்களாக இருக்க வேண்டும்.

எனவே இந் நிலையத்தில் எதிர்காலத்தில் எந்தக் காரணம் கொண்டும், எந்த வடிவங்களிலும், எந்த வகையான மதுபானங்களையும் ஏனைய மத நம்பிக்கைகளுக்கு முரணான பொருள்களையும் படையல் செய்யக் கூடாது என்று அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

மத நம்பிக்கைகளுக்கு முரணாக, பக்தர்களைப் புண்படுத்தும் சமூகங்களை பிழையான வழியில் திசைதிருப்பும் மதுபானம் போன்ற பொருள்களை படையல் மேற்கொள்ளாது சாயி மந்திர் நிர்வாகத்தினர் பொறுப்புணர்வோடு செயற்பட வேண்டும் என்று கண்டிப்பாக அறியத்தருகின்றேன். தவறும் பட்சத்தில் இலங்கைச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படக்கூடிய ஓர் குற்றமாகவே இந்த விடயம் இருப்பதால், அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை நினைவுபடுத்துகின்றேன்- என்றுள்ளது.

கடிதத்தின் பிரதிகள் மாவட்டச் செயலர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர், மாநகர சபை ஆணையாளர், மதுவரித் திணைக்கள உதவி ஆணையாளர், பொலிஸ் அத்தியட்சகர், தலைமைப்பீடப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளன. (சு-105)

## பனை அபிவிருத்தி சபைக்கு தலைவரை நியமிக்க கோரிக்கை

*யாழ்ப்பாணம்,ஜன. 1*

பனை அபிவிருத்தி சபைக்கு இதுவரைக்கும் தலைவர் ஒருவர் நியமிக்கப்படாதமையால், நெருக்கடிகள் சில வற்றை அந்தச் சபையினர் எதிர் கொள்கின்றனர். எனவே விரைந்து தலைவர் ஒருவரை நியமிக்குமாறு கோரிக்கைவிடப்பட்டுள்ளது. பனை அபிவிருத்திச்சபையில் ஏற்கனவே தலைவராக இருந்த இராஜேந்திரம் கடந்த நவம்பர் மாதம் 26 ஆம் திகதி தலைவர் பதவியில் இருந்து விலகிச்சென்று, ஒரு மாதம் கடந்த நிலையிலும் தற்போதைய அரசு புதிய தலைவரை சபைக்கு நியமிக்கவில்லை. நடுத்தர சிறு கைத்தொழில் அபிவிருத்தி முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் பனை அபிவிருத்தி சபையும் உள்ளதால் சம்பந்தப்பட்ட அமைச்சுத் தலைவரை நியமிக்க வேண்டும் என்றும், அந்த அமைச்சு விரைந்து நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (ஐ-17)



*கோப்புப்படம்*

# ஆழ்கடல் மீன்பிடி யாழில் ஆரம்பம்

*யாழ்ப்பாணம், ஜன.1*

தற்போது காலநிலை சீரடைந்துள்ளதை அடுத்து, யாழ்.குடாநாட்டு மீனவர்கள் ஆழ் கடல் சென்று மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர். குடாக் கடற்பரப்பு மற்றும் தீவுப்பகுதி, வடமராட்சிக் கிழக்கு போன்ற ஆழ் கடல்பகுதிக்கு மீனவர்கள் சென்று தொழிலில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

இந்தக் கடற்பகுதிகளில் ஒட்டி மீன்கள் அதிகளவில் பிடிபடுகின்றன. அதனை விட வடமராட்சிக் கிழக்குக் கடற்பகுதியில் சூரை மீன்கள் அதிகளவில் வலைகளில் சிக்குகின்றன என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

கடந்த வாரங்களுக்கு முன்னர் நிலவிய சீரற்ற காலநிலையால் ஆழ் கடல் மீன்பிடி பாதிக்கப்பட்டிருந்தது. மீனவர்கள் ஆழ் கடல் சென்று மீன்பிடிப்பதையும் தவிர்த்து வந்தனர். தற்போது மீண்டும் ஆழ்கடல் மீன்பிடி ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து, கடலுணவுகளின் வருகை சந்தைகளில் அதிகரித்துள்ளன. (க-17)

## மதிப்பீட்டுத் தயாரிப்புக்கு மக்களின் ஆலோசனை

*கொடிகாமம், ஜன.1*

மதிப்பீடு தயாரிக்கும்போது மக்கள் பிரதிநிதிகளாகிய சபை உறுப்பினர்களினதும், மக்களினதும் ஆலோசனைகளும் அபிப்பிராயங்களும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று சாவகச்சேரி பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

“சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட எந்த வேலைத் திட்டமாக இருந்தாலும் மதிப்பீடு தயாரிக்கும்போது மேற்குறித்த இரண்டுதரப்பினருடையதும் ஆலோசனை, அபிப்பிராயங்களை உள்ளடக்கி தொழில்நுட்ப அலுவலர்கள் மதிப்பீடுகளைத் தயாரிக்கவேண்டும். ஏனெனில் தொழில்நுட்ப அலுவலர்களால் சரியான முறையில் இனங்கண்டு மதிப்பீடு தயாரிக்கப்படுவதில்லை என்ற கருத்து உறுப்பினர்களால் பலமுறை சுட்டிக் காட்டப்பட்டது. எனவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக பிரதேச சபை உறுப்பினர்கள் தெரிவித்தனர். (து-159)

# ‘வெற்றிக்கு வலிகள் தேவை’ நூல் அறிமுக நிகழ்வு

வள்ளியம்மை சுப்பிரமணியம் எழுதிய ‘வெற்றிக்கு வலிகள் தேவை” நூல் அறிமுக நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில், நூல்நயவுரையை எழுத்தாளர் திருமதி கோகிலா மகேந்திரன், கருத்துரைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஓய்வுபெற்ற பேராசிரியர் நாச்சியார் செல்வநாயகம், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் வ.ஸ்ரீகாந்தன், பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய அதிபர் திருமதி சுலபாமதி கணேசமூர்த்தி, கலாபூசணம் மு. சடாச்சரம், தமிழ் ஆசிரியர் அ. முருகதாஸ், ஆசிரியர் பொ. சுதாகரன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (ஐ)


# கடந்த வருடம் டெங்குக்கு 239 பேர் மன்னாரில் இலக்காகினர்

மன்னாரில் 2019ஆம் ஆண்டு 239 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று மன்னார் பிராந்திய சுகாதாரப் பணிமனையினர் தெரிவித்தனர்.

எட்டு வயதுச் சிறுமியே உயிரிழந்துள்ளார். மன்னார் மாவட்டத்தில் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு துண்டறிக்கைகள் வெளியிடப்பட்டன. டெங்கு ஒழிப்பு என்பது வெறுமனே மரத்தை வெட்டிப்போடுவதோ குப்பை அள்ளிப் போடுவதோ அல்ல. அதற்குரிய மாற்று நடவடிக்கைகளைச் செய்யவேண்டும்.

மன்னாரில் டெங்குப் பிரச்சினை அதிகமாகவுள்ள இடங்களாக பெரியகரிசல் புதுக்குடியிருப்பு சென். சேவியர் பெண்கள் பாடசாலைப் பகுதிகள் உள்ளன என்று அறிக்கை தெரிவிக்கின்றது.

எனவே டெங்கைக் கட்டுப்படுத்துதல் தொடர்பாக மன்னார் பிராந்திய சுகாதாரப் பணிமனையின் அறிவுறுத்தல்களை அனைத்து மக்களும் கடைப்பிடித்து தங்களுடைய வீட்டு வளவுகள், அலுவலகங்கள், கல்வி நிலையங்களை தூய்மையாக வைத்துக் கொள்வதுடன் காய்ச்சல் ஏற்படும் சந்தர்ப்பங்களில் மருத்துவமனைகளில் அல்லது தகுதிவாய்ந்த மருத்துவரின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். காய்ச்சல் காலங்களில் வலி நிவாரணிகள் மற்றும் அஸ்பிரின் போன்றவற்றைத் தவிர்த்து மருத்துவர்களின் ஆலோசனைகளைப் பெறவேண்டும் என்றும் தெரிவித்தார். (த-213)



# டெங்கு அபாயம் குறைவடைந்தது

யாழ்ப்பாணம், ஜன.1

வடக்கு மாகாண மக்களை அச்சுறுத்தி, உயிராபத்துக்களை ஏற்படுத்தியிருந்த டெங்குத் தொற்று தற்போது ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவினர் தெரிவித்தனர்.

கடந்த நவம்பர் மாதம் நாடு முழுவதும் பெருந்தொகையான மக்கள் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டிருந்தனர்.

மழையுடன் டெங்கு நுளம்புப் பெருக்கமும் அதிகரித்து, மக்களை அச்சமடையச் செய்திருந்தது. முதியவர்கள், குழந்தைகள், கர்ப்பிணிகள் என வேறுபாடுகளின்றி பலரும் பாதிக்கப்பட்டிருந்தனர். உயிரிழப்புக்களும் ஏற்பட்டிருந்தன.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் மாவட்டம் டெங்குத் தொற்றாளர்கள் கூடிய மாவட்டங்களில் இரண்டாவது நிலையில் இருந்தது. அதனால் டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்தும் வேலைத்திட்டங்களில் சுகாதாரத் துறையினர் ஈடுபட்டனர். அவர்களுடன் பொதுமக்கள், மற்றும் அரச பணியாளர்களும் இணைந்திருந்தனர். பொது மக்களுக்கான விழிப்புணர்வுகளும் வழங்கப்பட்டன.

கடந்த நவம்பர் மாதம் 2ஆயிரத்து 641 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்ட யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்று முன்தினம் வரையான காலப்பகுதியில் ஆயிரத்து 960 டெங்குத் தொற்றாளர்களே இனங்காணப்பட்டுள்ளனர். கடந்த மாதம் 99 டெங்குத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது 89 பேரே இனங்காணப்பட்டுள்ளனர். கடந்த மாதம் 99 டெங்குத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட மன்னார் மாவட்டத்தில் இந்த மாதம் 89 பேரே இனங்காணப்பட்டுள்ளனர். நவம்பர் மாதம் 262 டெங்குத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட வவுனியா மாவட்டத்தில் இந்த மாதம் 161பேரே இனங்காணப்பட்டுள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த நவம்பர் மாதம் 56 டெங்குத் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டிருந்தனர். அந்த எண்ணிக்கை நேற்று முன்தினம் வரை 42 ஆகக் குறைவடைந்துள்ளது.

இது தவிர நாடு முழுவதுமாக டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. கடந்த நவம்பர் மாதம் 21 ஆயிரத்து 561 பாதிக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த மாதம் 12 ஆயிரத்து 322 பேரே பாதிக்கப்பட்டுள்ளனர் என்று பிரிவினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-21)

## மஸ்தான் எம்.பி. மீது தாக்குதல் முயற்சி

வவுனியா, ஜன.1

வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கே. கே. மஸ்தான் மீது நேற்று முன்தினம் இரவு தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்றும் அதைத் தடுத்த அவருடைய பாதுகாவலர் காயமடைந்து வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா பாவற்குளம் பகுதியில் மக்கள் சந்திப்பை முடித்துவிட்டுச் சென்றுகொண்டிருந்த போது வாகனத்தை சிலர் வழிமறித்து வாள்களால் நாடாளுமன்ற உறுப்பினரை தாக்க முயற்சித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தாக்குதல் நடத்த முயற்சித்த னர் என்று குற்றஞ்சாட்டப்படும் நபர்களைப் பொலிஸார் தேடி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-110)

## பொது மக்களுக்கு அறிவிப்பு பலகை

வடமராட்சி, ஜன.1

பருத்தித்துறை நகர பஸ் நிலையப் பகுதியில் பொது அறிவித்தல்களை மக்கள் பெற்றுக்கொள்வதற்கு வசதியாக விளம்பரப் பலகை நகர சபையால் வைக்கப்பட்டுள்ளது.

இதே போன்று மேலும்

இரண்டு விளம்பரப் பலகைகள் நகர மத்தியிலும், தும்பளை வீதி மெத்தைக் கடைச் சந்தியிலும் வைக்கப்படும் என்று நகர சபைத் தவிசாளர் யோசப் இருதய ராஜா தெரிவித்தார்.

நகரங்களில் உள்ள சுவர்களில் சுவரோவியங்கள் வரையப்பட்டுள்ளன. அதனால் பொது அறிவித்தல்களை சுவரொட்டிகள் மூலம் வெளிப்படுத்துவோருக்கும், பொது மக்களுக்கும் வசதி ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடன் இந்த விளம்பரப் பலகைகள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சு-173)

## சீருடை வவுச்சரை இன்று பெறவும்

சாவகச்சேரி, ஜன.1

சாவகச்சேரி ட்ரிபேக் கல்லூரி மாணவர்களுக்கு இலவச சீருடைக்கான வவுச்சர்கள் இன்று புதன்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரை விநியோகிக்கப்படும்.

கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் வவுச்சர்களை அவர்களின் பெற்றோர்களிடமும், ஏனைய மாணவர்களின் வவுச்சர்கள் அவர்களிடமே விநியோகிக்கப்படும் என்று அதிபர் செ.பேரின்ப நாதன் அறிவித்துள்ளார். (ஜ-9)

## மரண அறிவித்தல்



### கலாநிதி ஜெயராமநாதன்

சாவகச்சேரி சங்கத்தானை, கண்டுவில் வீதியை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட கலாநிதி ஜெயராமநாதன் கடந்த **(30-12-2019)** திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குழந்தைவேலு மற்றும் கனகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், நல்லூரை சேர்ந்த காலஞ்சென்றவர்களான செல்லத்துரை ரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகளும், ஜெயராமநாதன் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற கஜேந்தினி(கீதா) மற்றும் சங்கர்லால், மதன்லால், பிறேம்லால், ரஜீவ்லால் ஆகியோரின் அன்புத் தாயாரும், கார்த்திகா, ஜெயபிரபா, நிஷாலினி,சங்கீதா ஆகியோரின் மாமியும் காலஞ்சென்ற குலேந்திரராஜன் மற்றும் குணானந்தசீலன், கமலாகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் வேதநாயகி, சகுந்தலா, திருச்செல்வம் ஆகியோரின் மைத்துனியும், வியாஸ்வி, அட்சயா, ஆதவி, இனியன், சாக்ஷி ஆகியோரின் பேர்த்தியும், கிஷோர்குமார், ஷோபிகா, நிலக்ஷன், கோபிகா, தீபிகன் ஆகியோரின் அத்தையும், கஜலக்ஷி, கிருஷாந், நவஜினி, டினோஜன் ஆகியோரின் பெரியம்மாவும், காலஞ்சென்ற வீரவாகு மற்றும் லட்சுமி தம்பதிகளின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை **(02-01-2020)** வியாழக்கிழமை அன்று மு.ப **11** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:- குடும்பத்தினர்**

**0778281116(ஜெயராமநாதன் (ரவி)), 0776758566(பிறேம்லால்)**

**0773556342(சீலன்), 0750362819(செல்வம்)**

## கல்லூரி ஆரம்பம்

*யாழ்ப்பாணம், ஜன.1*

யாழ். இந்துக் கல்லூரியின் புதிய ஆண்டுக்கான கற்றல் நடவடிக்கைகள் நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகும்.

தரம் 6 தொடக்கம் 11 வரையான வகுப்புகளுக்குக் கற்றல் நடவடிக்கைகள் நாளையும், உயர்தர வகுப்புகள் எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமையும் ஆரம்பமாகும் என்றும் அதிபர் அறிவித்துள்ளார். (க)

## சீருடை வவுச்சரை இன்று பெறவும்

*கொடிகாமம், ஜன.1*

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையில் இதுவரை சீருடைக்கான வவுச்சர்களை பெற்றுக் கொள்ளாதவர்கள் இன்று புதன்கிழமை பெற்றுக் கொள்ள முடியும் என்று அதிபர் தெரிவித்துள்ளார்

முற்பகல் 10.45 மணியிலிருந்து 12 மணிவரைக்குள் மாணவர்களின் பெற்றோர்கள் வருகை தந்து வவுச்சர்களை பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-159)

## ஒரு வழிப்பாதை

*யாழ்ப்பாணம், ஜன.1*

யாழ். வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலைக்கு முன்பாகச் செல்லும் முதலாம் குறுக்கு வீதி பாடசாலை நாள்கள் மற்றும் நேரங்களில் ஒரு வழிப்பாதையாக மாற்றப்படவுள்ளது.

ஆஸ்பத்திரி வீதி, பருத்தித்துறை வீதி ஆகிய வீதிகளால் வரும் வாகனங்கள் பாடசாலைக்கு முன்பாக உள்ள முதலாம் குறுக்கு வீதியூடாகப் பயணிக்கலாம்.

பிரதான வீதியில் இருந்து வரும் வாகனங்கள் சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி வீதியூடாக பயணிக்கலாம்.

நாளை 2 ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் பாடசாலை நாள்களில் காலை 7 மணி தொடக்கம் 8 மணி வரையும், மதியம் 1 மணி தொடக்கம் 2 மணி வரையும் ஒரு வழிப்பாதை நடைமுறையில் இருக்கும் என்று யாழ். மாநகர சபை ஆணையாளர் அறிவித்துள்ளார். (க)

*ஆசிரிய இடமாற்றத்தில்*

# அரசியல் அழுத்தம்

## தமிழர் ஆசிரிய சங்கம் குற்றஞ்சாட்டுகிறது

*யாழ்ப்பாணம், ஜன. 1*

வடக்கு மாகாணத்திலும் இடமாற்றங்கள் வழங்குவதற்கு இடமாற்ற சபைகள் கூடி முடிவெடுக்கின்ற அதேவேளை சில அரசியல்வாதிகள் தமது சுயநலன்களுக்காக அந்த இடமாற்றங்களை இரத்துச்செய்ய உயர் அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுப்பது அதிகரித்துள்ளது என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

தாபனவிதிக்கோவை, அமைச்சரவை அங்கீகாரம் பெற்ற சுற்றறிக்கைகளின்படி நாட்டில் அனைத்துப் பாகங்களிலும் வருடந்தோறும் அரச அலுவலர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படுகின்றது.

எனினும் சில அரசியல்வாதிகள் காலத்துக்குக் காலம் மாறுகின்ற அரசுகளில் பதவிகளைப் பெற்றுக் கொண்டு முறையற்ற செயற்பாடுகளைச் செய்து இலாபம் பெற நினைப்பது முட்டாள்தனமானது.

இத்தகைய செயற்பாடுகளால் பலர் பாதிப்படைந்துள்ளனர். என்று சங்கம் செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது. (து)

*ஒரு கோடி ரூபா –*

# ஹெரோய்ன் கடத்தல்

## பூநகரி நபர் கைது



*வவுனியா, ஜன.1*

ஒரு கோடி ரூபா பெறுமதியான ஹெரோய்ன் போதைப்பொருளை பஸ்ஸில் கடத்திச் சென்ற குற்றச்சாட்டில், நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து மன்னார் நோக்கிச் சென்ற பஸ் நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் செட்டிகுளம் நகர் பகுதியில் அமைந்துள்ள சோதனை சாவடியில் பொலிஸாரால் வழிமறிக்கப்பட்டது.

செட்டிகுளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதீப்குமார தலைமையிலான பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் பஸ்ஸில் சோதனை மேற்கொண்டனர்.

ஒரு கிலோ ஹெரோய்ன் போதைப்பொருளைத் தனது உடைமையில் வைத்திருந்த நபர் ஒருவரைப் பொலிஸார் அடையாளம் கண்டனர்.

முழங்காவில் பூநகரியைச் சேர்ந்த 24 வயதுடைய அந்த நபரைக் கைது செய்தனர். அவர் கடந்த நான்கு தினங்களுக்கு முன்னரே மத்திய கிழக்குப் பகுதியில் இருந்து இலங்கை வந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அவர் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்.

மீட்கப்பட்ட ஹெரோய்ன் போதை பொருளின் பெறுமதி ஒரு கோடி ரூபா என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-110)

## திருவெம்பாவை ஆரம்பமும் விநாயகர் விரத நிறைவும்

*யாழ்ப்பாணம், ஜன.1*

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் இன்று புதன்கிழமை காலை 6 மணிக்கு திருவெம்பாவை பூசை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

தொடர்ந்து காலை 8.30 மணிக்கு விநாயகர் விரத நிறைவு வழிபாடும் பிள்ளையார் கதை படிப்பும் இடம் பெறும்

*****

நீர்வேலி அரசசேகரிப் பிள்ளையார் கோவிலில் இன்று பதன்கிழமை காலை திருவெம்பாவை பூசை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறும்.

விநாயகர் விரத நிறைவு உற்சவத்தை முன்னிட்டுச் சிறப்புப் பூசைகள் வழிபாடுகள் இடம்பெறும் தொடர்ந்து மாலை இலட்சார்ச்சனையும் நடைபெறும்.

*****

நீர்வேலி கந்தசுவாமி கோவிலில் இன்று புதன் கிழமை காலை 5 மணிக்குச் சிறப்பு அபிஷேக வழிபாடுகளுடன் திருவெம்பாவை பூசை ஆரம்பமாகி நடைபெறும்.

தொடர்ந்து காலை 11 மணிக்கு விநாயகர் விரத வழிபாடு நிறைவை முன்னிட்டுச் சிறப்புப் பூசை வழிபாடுகள் மற்றும் பெருங்கதை படிப்பு என்பன நடைபெறும்.

*****

கோப்பாய் வடக்கு இலுப்பையடி விநாயகர் ஆலயத்திலும் இன்று காலை திருவெம்பாவை பூசை வழிபாடுகள் ஆரம்பமாகி நடைபெறும் தொடர்ந்து விநாயகர் விரத வழிபாடு நிறைவு உற்சவம் இடம்பெறும்

*****

நீர்வேலி தெற்கு ஞான வைரவர் ஆலயத்தில் இன்று புதன்கிழமை காலை 6 மணிக்குச் சிறப்பு அபிஷேகத்துடன் திருவேம்பாவை பூசை ஆரம்பமாகும். (ஐ-17)

# வடக்கில் பணியாற்ற அனுமதியுங்க

## கேட்கிறார் செயலர்

*யாழ்ப்பாணம், ஜன. 1*

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் முன்னாள் செயலர் திருவாகரன் மீண்டும் வடக்கு மாகாணத்தில் பணியாற்ற தனது விருப்பத்தைத் தெரிவித்து விண்ணப்பித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் நீண்டகாலம் பணியாற்றிய நிலையில் முன்னாள் ஆளுநரால் இடமாற்றப்பட்ட குறித்த செயலர், வடக்கிலேயே பணிபுரிய விரும்புகின்றேன் என்று தற்போது மீண்டும் விண்ணப்பித்துள்ளார்.

இது தொடர்பில் பொதுச் சேவை ஆணைக்குழு வடக்கு மாகாண சபையிடம் அதற்கான தேவை குறித்து எழுத்தில் வினவியுள்ளது. வடக்கு மாகாண சபையில் தற்போது ஆளுநர் இல்லாத நிலையில் புதிய ஆளுநர் பணியேற்றதும் இது தொடர்பான முடிவு அனுப்பி வைக்கப்படும் என்று பதிலளிக்கப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்படு கின்றது. (து-105)

# பயிற்சி பட்டறை

*ஊர்காவற்றுறை, ஜன.1*

இளையோருக்கு தொழில் வழிகாட்டல் மற்றும் சுயவிவரக் கோவை தயாரித்தல் தொடர்பான பயிற்சிப் பட்டறை நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப் பயிற்சிப் பட்டறையில் ஆர்வமுள்ள தீவக பிரதேசத்தில் வசிக்கும் இளையோர் பங்குபற்றலாம் என்று வெளிச்சம் கல்வி நிறுவனத்தின் நிறுவுனர் இ. ஜெயால்ட் அன்ரனி தெரிவித்துள்ளார். (ஐ-50)

## பெயர்மாற்றத்திற்கான அறிவித்தல்

தாரிக்கப்பற்று, நெல்லியடி கிழக்கு, கரவெட்டியில் வசிக்கும் நாகராசா **"மங்கையற்கரசி"** ஆகிய நான் **ரஞ்சிதம்** என்கின்ற எனது பெயரை இன்றைய தினத்தில் இருந்து **"மங்கையற்கரசி"** என மாற்றம் செய்துள்ளேன். இன்றைய தினத்திலிருந்து **மங்கையற்கரசி** என்ற பெயரையே சகல ஆவணங்களிலும் பாவித்து வருவேன் என்பதை இத்தால் அனைவருக்கும் அறியத்தருகிறேன்.

**நா. மங்கையற்கரசி**

## கண்ணீர் அஞ்சலி



மண்ணில் 01.01.1935 விண்ணில் 30.12.2019

மந்திகை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச்சங்க உப செயலாளர் **இ.இராகவன்** (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்களது பாசமிகு தாயார்

திருமதி
**இளையதம்பி வள்ளிப்பிள்ளை**

அவர்களது மறைவை அறிந்து நாம் ஆற்றொணாத் துயருறுகின்றோம். அவர் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் எமது கண்ணீர் அஞ்சலியையும் செலுத்துகின்றோம். அவர் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

நோயாளர் நலன்புரிச்சங்கம் மந்திகை ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை — தலைவரும் உறுப்பினர்களும் அங்கத்தவர்களும்

## இறுதிக்கிரியைகள் பற்றிய அறிவித்தல்

### கந்தையா சண்முகசுந்தரம்

[இளைப்பாறிய இரசாயனவியல் ஆசிரியர். உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி. யாழ் இந்துக்கல்லூரி. ஹாட்லி கல்லூரி. பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை]



கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சண்முகசுந்தரம் (இளைப்பாறிய இரசாயனவியல் ஆசிரியர்) கடந்த **(29.12.2019)** ஞாயிற்றுக் கிழமை அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(01.01.2020)** புதன்கிழமை முற்பகல் **10.00** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவரசம்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


"அரவிந்தம்"
கரணவாய் தெற்கு, கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு:- இலங்கை: 0212263562, முகுந்தன்- (வாட்ஸ்அப் இல.): +14168303102 அபிராமி - (வாட்ஸ்அப் இல.): +14168389575 இளவேந்தன் - (வாட்ஸ்அப் இல.): +4917640594034

## மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 04 . 1934



மறைவு 29 . 12 . 2019

### முத்து குணசிங்கம்

*(இளைப்பாறிய இயந்திர இயக்குநர் - நீர்ப்பாசனத் திணைக்களம்)*

காலையடி. பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் 35/7. குமாரசாமி வீதி. கந்தர்மடத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட முத்து குணசிங்கம் 29.12.2019 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்து - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் குகனேஸ்வரி. சிவகுமாரன் (கோட்டக் கல்விப்பணிப்பாளர் மாந்தை மேற்கு பிரிவு மடுவலயம்). ஜெகதீஸ்வரன் (சுவிஸ்). ஜெயராணி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பத்மநாதன். விஜயராகினி (ஆசிரியை - இளவாலை கென்றிஸ் கல்லூரி). கலாமதி (சுவிஸ்). முரளிதரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிசாந்தன் (நோர்வே). நிறிஜா (நோர்வே). நிஜிந்தன். அபிநயா (உடுவில் பெண்கள் கல்லூரி மாணவி). பிரவீன் (சுவிஸ்). ஜக்சியன் (கனடா). கேசியன் (கனடா). கிரீசியன் (கனடா) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.01.2020) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS 30290)(14.17)

**தகவல் : குடும்பத்தினர்.**

### வருடத்தின் முதல் நாளில்

# மரங்கள் நடுங்கள்



*யாழ்ப்பாணம், ஜன.1*

நாடு முழுவதும் இன்று முதலாம் திகதி புதன்கிழமை தேசிய மரம் நடுகைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு பணிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதுமுள்ள மாகாண சபைகளுக்கு இந்த அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

2020 புது வருட ஆரம்ப தின கடமை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு இணையாக இன்றையதினம் தேசிய மரம் நடுகைத்திட்டத்தையும், நடைமுறைப்படுத்துமாறு பணிப்பட்டுள்ளது.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எஸ்.ஹெட்டியாராச்சி இந்துப் பணிப்புரையை வழங்கியுள்ளார்.

"முன்னேறும் நாட்டுக்கு வளர்கின்ற மரம்" எனும் தொனிப்பொருளில், இந்த விசேட மரம் நடுகைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. சுற்றாடல் மற்றும் வனஜீவராசிகள் அமைச்சால் தேசிய மாகாண மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-9)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கடற்கரை வீதியில் (பழைய பூங்கா வீதிக்கு அண்மையில்) காணி விற்பனைக்குண்டு.

(IH 14.532)(4.17)

071 447 5133/ 077 765 4598

## பகிரங்க அறிவித்தல்

யாழ் மாநகரசபைக்கு உட்பட்ட அபிவிருத்தி செய்யப்படாத, நுளம்பு பெருகும் வகையில் உள்ள தனியார் காணி உரிமையாளர்கள் தங்கள் காணிகளை உடன் துப்புரவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். அவ்வாறு துப்புரவு செய்யப்படாது உள்ள காணி உரிமையாளர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**கௌரவ முதல்வர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

### அமிர்தகுலசிங்கம் நிரோஜன்



கோவில்வாசல் இணுவில் மேற்கு இணுவிலைச் சேர்ந்த அமிர்தகுலசிங்கம் நிரோஜன் (அலுவலக உதவியாளர், பிரதிப்பிரதம செயலாளர் அலுவலகம், வடமாகாணசபை) நேற்று (31.12.2019) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோவில் வாசல்,
இணுவில் மேற்கு, இணுவில்

தகவல்: குடும்பத்தினர்
077 9352370, 076 571 7524

## உலர் உணவு பொதிகள் கையளிப்பு

மழையால் பாதிக்கப்பட்ட சாவகச்சேரி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர்கள் 206 பேருக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

சாவகச்சேரி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் இந்த உதவிகள் அண்மையில் வழங்கப்பட்டன.

சங்கத் தலைவர் வ. தெய்வேந்திரம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேச கூட்டுறவுஅபிவிருத்தி அலுவலர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஜ-9)

## மாணவர்கள் புதிய அனுமதி

### சிவபூமி பாடசாலை

**(சிறுவர் மனவிருத்திப் பாடசாலை - கோண்டாவில் - யாழ்ப்பாணம்)**

**2020 ஆம் ஆண்டுக்குரிய புதிய மாணவர் அனுமதி** நடைபெறுகின்றது எமது பாடசாலை நேரத்தில் அனுமதியை பெற்றுகொள்ளலாம்.

**முகவரி: சிவபூமி பாடசாலை, கோண்டாவில், யாழ்ப்பாணம்..**

### சிவபூமி பாடசாலை

**(சிறுவர் மனவிருத்திப் பாடசாலை - கனகபுரம் - கிளிநொச்சி)**

**2020 ஆம் ஆண்டுக்குரிய புதிய மாணவர் அனுமதி** நடைபெறுகின்றது எமது பாடசாலை நேரத்தில் அனுமதியை பெற்றுகொள்ளலாம்.

**முகவரி: சிவபூமி பாடசாலை, 1 ஆம் ஒழுங்கை, கனகபுரம், கிளிநொச்சி.**

### சிவபூமி அறக்கட்டளைக்கு நிர்வாக உத்தியோகத்தர் தேவை

**ஆங்கிலம், கணினி** அறிவுள்ளவர் விரும்பத்தக்கது. விண்ணப்பங்களை **சிவபூமி அறக்கட்டளை, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்** என்னும் முகவரிக்கு **10.01. 2020** இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

(cs.30289) (13.170)

**தலைவர், சிவபூமி, அறக்கட்டளை.**

## திருவாசக முற்றோதல்

*யாழ்ப்பாணம்,ஜன.1*

திருவாசக முற்றோதல் நிகழ்வு யாழ்ப்பாணம் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இன்றுபுதன்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஜ)

# சம்பிக்கவின் கைது சட்டப்படியே!

## பதில் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 1

முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக ரணவக்க சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டுத்தான் கைது செய்யப்பட்டிருக்கிறார் என பதில் பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன தேசிய பொலிஸ் ஆணைகுழுவுக்கு அறிவித்துள்ளார்.

கடந்த 27ஆம் திகதி தேசிய பொலிஸ் ஆணைக்குழு கூடியது. பதில் பொலிஸ் மாஅதிபர் இவ்வாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளதாக ஆணைக்குழுவின் செயலர் நிசாந்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் கைது விடயத்தில் நாடாளுமன்ற உறுப்பினரைக் கைது செய்வதற்கான நடைமுறைகள் பின்பற்றப்பட வில்லையென பிரதி சபாநாயகர் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு கடிதமொன்றை கடந்த 20ஆம் திகதி அனுப்பியிருந்தார்.

பிரதி சபாநாயகரின் கருத்துக்கு விளக்கம் கோரும் வகையில் சம்பிக்க ரணவக்கவின் கைது விவகாரத்தில் மேற்படி நடைமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளதா? என்பது தொடர்பாக பொலிஸ் மாஅதிபரிடம் தேசிய பொலிஸ் ஆணைக்குழு அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு கோரியிருந்தது டன், கடந்த 27 ஆம் திகதி தேசிய பொலிஸ் ஆணைக்குழு கூடவுள்ளதாகவும் அதில் அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் பதில் பொலிஸ் மாஅதிபருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன் அடிப்படையிலேயே பதில் பொலிஸ் மாஅதிபர் சம்பிக்க ரணவக்கவின் கைது விவகாரத்தில் சட்டத்திட்டங்கள் பின்பற்றப்பட்டுள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக் குழுவுக்கு அறிவித்துள்ளார்.


இந்த விடயம் தொடர்பில் சபாநாயகர் கரு ஜயசூரியவுக்குப் பதில் பொலிஸ் மாஅதிபர் விளக்கமளிக்கவுள்ளார். (ஒ.5,24)

# புதிய ஆண்டில் புதிய சர்ச்சை!

யாழ்ப்பாணம், ஜன. 1

**அரச பணியாளர்கள் இன்று தமது கடமைகளை ஆரம்பிப்பதற்கு முன்னதாக உறுதிமொழி எடுக்கவேண்டும் என்று அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.**

அந்த உறுதிமொழியில், 'இன்று ஆரம்பமாகும் புத்தாண்டினுள் ஒரே நாட்டின், ஒரே இனத்தின், ஒரே கொடியின் நிழலில்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரே இனத்தின் என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளமை புதிய சர்ச்சையைத் தோற்றுவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.



அரசாங்க சேவை சத்தியப் பிரமாணம் / உறுதி மொழி

இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு சனவரி மாதம் கடமைகளைத் தொடங்கும்
முதல் நாளான இன்றைய தினம்,
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
இந் நாட்டு மக்களின் எதிர்பார்ப்புக்களை யதார்த்தமாக மாற்றியமைக்கும்
புதியதோர் ஆண்டின் ஆரம்பத்தில் காலடிவைக்கின்றோம்.
இன்று ஆரம்பமாகும் புத்தாண்டினுள்
ஒரே நாட்டின், ஒரே இனத்தின், ஒரே கொடியின் நிழலில்
ஐக்கியமாகவும், ஒரே மனப்பான்மையுடனும் மலர்ச்சியடைகின்ற
பாதுகாப்பான நம் நாட்டினுள்
நாட்டைக் கட்டியெழுப்பும் கட்டத்தின் நோக்கினை முன்னிறுத்தி
ஒழுக்க விழுமியமிக்க, சட்டத்திற்கு அடிபணிகின்ற மற்றும் சிறந்த பண்புகளைக்
கொண்ட சமூகத்தை உருவாக்குவதும்
நிலைபேறான சுற்றாடல் முகாமைத்துவத்தை முன்னிலைப்படுத்தி
பௌதிக வளங்களை விருத்தி செய்வதன் மூலம்
மக்கள் மயப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தை ஏற்படுத்துவதும்
நவீன தொழில்நுட்பத் திறன் கொண்ட மனித வளத்தை வழிநடத்தும்
தூய்மையான அரச ஆளுகையின் பங்காளியான நான்,
பொதுமக்களின் பணத்தில் சம்பளம் பெறுகின்ற அரசாங்க ஊழியனாக,
அரசாங்க கொள்கைகள் மற்றும் நோக்கங்களை நடைமுறைப்படுத்தும்
பொருட்டு என்னிடம் ஒப்படைக்கப்படுகின்ற கடமைப் பொறுப்புக்களை
வினைத்திறனாகவும்,
பயனமிக்கதாகவும்,
திடசங்கற்பத்துடனும்,
உரிய அர்ப்பணிப்புடனும்,
நேர்மையாகவும்,
மக்களுக்கு பக்கச்சார்பின்றியும்,
நிறைவேற்றுவேன் என்று சத்தியப்பிரமாணம் செய்கின்றேன் / உறுதிமொழிகின்றேன்

புத்தாண்டை முன்னிட்டு அரச பணியை ஆரம்பிப்பது தொடர்பான நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தில் இன்று நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட அமைச்சர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

புதுவருடத்தில் தேசியக் கொடியை ஏற்றி தேசிய கீதத்தை இசைக்குமாறும், படையினர் உள்ளிட்ட நாட்டுக்காக உயிரைத் தியாகம் செய்த அனைவரையும் நினைவுகூருவதற்காக 2 நிமிடம் மௌனம் செலுத்துமாறும் அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு ஆலோசனை வழங்கியுள்ளது.

அரச நிறுவனங்களில் உள்ள அனைத்து ஊழியர்களும் தமக்கு வசதியான மொழியில் அரச சேவை உறுதி மொழியை வழங்க வேண்டும்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் நாட்டை மேம்படுத்துவதற்கான தொலைநோக்கு என்ற கொள்கை அறிக்கைக்கு அமைவாக இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக அரச நிர்வாகம் உள்நாட்டலுவல்கள் மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இலங்கையின் சுதந்திர தினத்தில் சிங்கள மொழியில் மாத்திரம் தேசிய கீதம் இசைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்துள்ள நிலையில், அரச பணியாளர்களின் உறுதிமொழியில் 'ஒரே இனத்தின்' என்ற வாசகமும் பெரும் சர்ச்சையை உருவாக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ.5-105)

## சிறைவைக்கப்பட்டார் ராஜிதவின் சகா

கொழும்பு, ஜன. 1

கைது செய்யப்பட்டுள்ள அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் ரூமி மொஹமட் விளக்கமறியலில்வைக்கப்பட்டுள்ளார். அவருக்குப் பிணை வழங்க சட்டமா அதிபர் திணைக்களம் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் ரூமி மொஹமட் நேற்று குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் சரணடைந்தார். வெள்ளை வான் தொடர்பான தகவல்களை வெளியிட்ட ஊடக சந்திப்புக்கு பணம் வழங்கியதாக அவர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்த நிலையில் சரணடைந்திருந்தார். அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்த பின்னர் கைது செய்தனர்.

ஜனாதிபதி தேர்தலின்போது இரு நபர்களை வைத்து முன்னாள் அமைச்சர் ராஜிதவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வெள்ளை வான் கடத்தல் விவகாரம் தொடர்பாக கருத்துக்கள் வெளியிடப்பட்டன. ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட வெள்ளை வான் சாரதிகள் என்று கூறப்பட்ட இருவர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது, ராஜிதவின் வேண்டுகோளுக்கு இணங்கவே ஊடக சந்திப்பு இடம்பெற்றதாக சந்தேகநபர்கள் சாட்சியம் வழங்கினர் எனக் குற்றப் புலனாய்வு துறை தெரிவித்தது. இந்த விவகாரத்தில் அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் ரூமி மொஹமட் 20 இலட்சம் பணம் கொடுத்துள்ளார் எனவும் அவர்கள் வாக்குமூலம் அளித்திருந்தனரென்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

## மஹோற்சவம்

வடமராட்சி, ஜன.1

குரும்பசிட்டி முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 8ஆம் திகதி புதன்கிழமை சப்பறத் திருவிழாவும், 9ஆம்திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

சிவஸ்ரீ பா.சோமசுந்தரக் குருக்கள், மஹோற்சவ பிரதம குருவாக இருந்து மஹோற்சவத்தை நடத்தி வருகின்றார். (கு-173)

# தமிழர்களைத் தாக்கிய சிங்களக் குண்டர்கள்

## பண்டாரவளையில் சம்பவம்

பதுளை, ஜன. 1

பண்டாரவளை பெருந்தோட்ட நெடுங்குடியிருப்புத் தொகுதிக்குள் நுழைந்த சிங்களக் குண்டர்கள், தோட்ட இளைஞர்கள் மற்றும் மாணவர்கள், பெண்கள் ஆகியோர் மீது தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

பண்டாரவளைப் பகுதியின் ஊவா ஹைலண்ட்ஸ் பெருந்தோட்ட எல்லவெல பிரிவிலேயே, இந்தக் கொடூரம் அரங்கேறியுள்ளது.

இந்தத் தாக்குதலில் ஐவருக்கு காயங்கள் ஏற்பட்டுள்ளன. அவர்கள் அட்டாம்பிட்டிய கிராமிய அரச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவில் எல்லவெல தோட்டப் பிரிவுக்குள் புகுந்த கிராமிய சிங்கள இளைஞர்கள் சிலர், தோட்ட மக்கள் மீது கடுமையாக நடந்து கொண்டு, இனவாதமிக்க வார்த்தைப் பிரயோகங்களையும் மேற்கொண்ட பின்னரே, அவர்கள் தாக்குதல்களை நடத்தினர்.

எதிர்பாராத விதமாக இந்தச் சம்பவம் இடம் பெற்றதால், தோட்ட மக்கள் பெரும் பதற்றத்துடனும், பீதியுடனும் காணப்படுகின்றனர்.

இது குறித்து, தோட்ட மக்கள், பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஸிடம் தகவல்களை வழங்கினர்.

இதையடுத்து, நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் குறிப்பிட்ட தோட்டத்துக்கு விரைந்து, தோட்ட மக்களிடம் சம்பவம் குறித்த விடயங்களை அறிந்து, தோட்ட முகாமையாளர் மற்றும் அந்தப் பகுதி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியையும் குறிப்பிட்ட எல்லவெல தோட்டப் பிரிவுக்கு வரவழைத்து, தோட்ட மக்களின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தும்படியும், தாக்கியவர்களைத் தராதரம் பார்க்காமல் கைது செய்யும்படியும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியைக் கேட்டுக் கொண்டார்.

இதற்கமைய செயற்பட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் மூன்று இளைஞர்களைக் கைது செய்துள்ளனர். (ஒ.5,22)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## புதிய வருடம் பழைய வேண்டுதல்

புதிய வருடத்தின் உதயத் தருணத்தில் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள். 2019 விடைபெற்றுவிட, புதிய வரவாக 2020 வலது காலை எடுத்து வைத்துள்ளது.

உலகளவில் அரசியல், பொருளாதாரம், சூழலியல் எனப் பல மாற்றங்களையும், சாதனைகளையும், சோதனைகளையும் தந்துவிட்டுச் சென்ற ஆண்டாக 2019 பதிவாகியிருக்கிறது. குறிப்பாக கடந்த வருடம் உலகின் நுரையீரல் என்று வர்ணிக்கப்படும் அமேசன் காடுகளிலும், இப்போது அவுஸ்திரேலியக் காடுகளிலும் பற்றிக் கொண்ட நெருப்பு மிகப்பாரதூரமான வகையில் சூழலியலை குலைத்துப் போட்டுள்ளது. இதன் தாக்கங்களை அடுத்து வரும் ஆண்டுகளில் ஏற்படப்போகும் காலநிலை மாற்றங்கள் உணர்த்தக் கூடும். பல நாடுகளில் அரசியல் மாற்றங்களையும் உண்டுபண்ணிய, 2019 இலங்கையிலும் அதேபோன்ற தடங்களை விட்டுச் செல்லத் தவறவில்லை.

கிட்டத்தட்ட ஒரு தசாப்தமாக கந்தகப் புகையின் சுவாசத்தில் இருந்து விடுபட்டு கொஞ்சம் ஆசுவாசமாக இருந்த இலங்கையை, ஏப்ரல் 21 ஆம் திகதி நிகழ்ந்த உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல்கள் ஒரே நொடியில் மீண்டும் போர்ச்சூழலுக்குள் தள்ளிவிட்டன. அடையாள அட்டைகள் தூசு தட்டப்பட்டு, இலங்கையர்களின் உடலில் ஒரு அங்கமாக மாறியது: கறையான் புற்றுப்போல காவலரண்கள் எழுந்தன. இலங்கை மீண்டும் இராணுவச்சீருடைக்கு மாறிக்கொண்டது.

ஒரே நாளில் 259 உயிர்களைக் காவு கொண்ட அந்தத் தாக்குதல், சிங்கள – முஸ்லிம் இனமுறுகலுக்கான வாசலை அகலத் திறந்துவிட்டது. கூடவே, நாட்டின் பாதுகாப்புக்காக எந்தப் பேயையும் தம் காவலராக ஏற்றுக் கொள்ளும் மனோநிலையையும் ஈஸ்டர் தாக்குதல்கள் சிங்கள மக்களிடத்தே உருவாக்கியிருந்தன. விளைவு, பேரினவாத நெருப்பைக் கக்கியவர்களை சிங்கள மக்கள் தம் வாக்குகளால், அரியணையில் அமர்த்தினார்கள். 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ராஜபக்ஷ குடும்பத்தின் அரசியல் வாழ்வே அஸ்தமித்து விட்டதாக நினைத்தவர்களுக்கு, மரண அடியைக் கொடுத்தது 2019. இலங்கையின் பெரும்பான்மையினரிடத்தே இனவாதத்தை அதிகரிக்கச் செய்ததோடு, ஆட்சி மாற்றத்தையையும் ஏற்படுத்தி விட்ட திருப்தியோடு 2019 உதிர்ந்துள்ளது.

2019 இல் இலங்கையில் நடந்தேறியவற்றின் அறுவடைகளை இப்போது பிறந்திருக்கும் 2020 இல் தான் நாம் அனுபவிக்கப்போகின்றோம். யார்கண்டது, சிலவேளைகளில் நாம் எதிர்மறை விளைவுகள் வருமென நினைக்கும் சில விடயங்கள், அதற்கு மாறாக எதிர்பாரா வகையில் நன்மைகளையும் செய்துவிட்டுப் போகக்கூடும். காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், அரசியல் கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு என்பவற்றுக்காக ஏங்கிக் கொண்டிருப்பவர்கள் நாம்.

"இதுவரை காலமும் பட்ட துன்பங்களுக்கு பிறந்திருக்கும் புதிய வருடத்திலாவது தீர்வு கிடைக்க வேண்டும்" என்பதே ஒவ்வொரு புது வருடத்தின் போதும் தமிழ் மக்களினதும் வேண்டுதலாக இருப்பதுண்டு. அதேபழைய பல்லவியையே மீண்டுமொருமுறை 2020 பிறந்துள்ள இந்த வேளையிலும் பாடுவதைத் தவிர வேறுவழியில்லை. நம்பிக்கை தானே வாழ்க்கை!

# அரச பணியாளரின் சம்பளம் அதிகரிப்பு

*கொழும்பு, ஜன. 1*

**அரச பணியாளர்களின் அடிப்படைச் சம்பளம் இன்று முதல் அதிகரிக்கப்படும் என்று நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு தெரிவித்துள்ளது.**



2016 ஆண்டு வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைவாக அரசு பணியாளர்களின் அடிப்படை சம்பளம் அதிகரிக்கப்படும். இந்த அதிகரிப்பு காரணமாக 2015ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது சம்பளம் 107 சதவீதமாக அதிகரிக்கும் என்று நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.
அரசு பணியாளர்களின் அடிப்படை சம்பளத்தை, ஆண்டுக்கு தலா இரண்டாயிரம் ரூபா வீதம் 10 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்பதற்கு 2016ஆம் ஆண்டு சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
அரசு பணியாளர்களின் அடிப்படைச் சம்பளம் 2016ஆம் ஆண்டு தொடக்கம், முதல் நான்கு சந்தர்ப்பங்களில் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், ஐந்தாம் கட்ட சம்பள உயர்வு இன்று மேற்கொள்ளப்படவுள்ளது. (ஒ,5)



## 20,000 ஹோட்டல்கள் பதிவு செய்யப்படவில்லை

*கொழும்பு, ஜன. 1*
20 ஆயிரம் சுற்றுலா ஹோட்டல்கள் நாட்டில் பதிவு செய்யப்படவில்லை என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாடு முழுவதுமுள்ள சுற்றுலா ஹோட்டல்கள் மற்றும் வாடி வீடுகள் பதிவுசெய்யப்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் மூன்று மாதகாலப்பகுதிக்குள் இந்தப் பதிவுகள் முன்னெடுக்கப்படவேண்டும்.
பதிவு செய்யப்படும் ஹோட்டல்களின் தரம் பற்றி உரிய கவனம் செலுத்தப்படவுள்ளதுடன், ஹோட்டல்களை நடத்திச் செல்ல வேண்டிய நடைமுறைகள் தொடர்பிலும் ஹோட்டல் உரிமையாளர்களுக்கு விளக்கமளிக்கப்படவுள்ளது.
தற்போதைய சூழலில் பதிவுசெய்யும் நடைமுறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. மாவட்ட மட்டத்தில் இந்தச் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ,5,24)



## டெங்கு விழிப்புணர்வு

டெங்குக் காய்ச்சலை இல்லாது ஒழிப்பதற்கு ஒரே ஒரு வழி நுளம்பு பெருகும் இடங்களை இல்லாது செய்வதாகும். எனவே நுளம்புப் பெருக்கத்துக்கு ஏற்ற இடங்களைக் கொண்டிருக்கும் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு.

## கோர விபத்து!

## விமானப் படையினர் 4பேர் நசியுண்டு சாவு

*வரக்காபொல, ஜன. 1*
கொழும்பு கண்டி பிரதான வீதியின் வரக்காபொல, தும்மலதெனிய பகுதியில் இடம்பெற்ற விபத்தில் விமானப் படையினர் நால்வர் உயிரிழந்துள்ளனர்.
நேற்று அதிகாலை 4 மணியளவில் முச்சக்கர வண்டியும் கன்டெய்னர் ரக வாகனமும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் விபத்து இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
விபத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த விமானப் படையினர் நால்வரும் சம்பவ இடத்திலேயே நசியுண்டு உயிரிழந்துள்ளனர். முச்சக்கர வண்டிச் சாரதிக்கு நித்திரை ஏற்பட்டதன் காரணமாக விபத்து இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் கன்டெய்னர் ரக வாகன சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். (ஒ,5,22)



## ராஜிதவுக்கு எல்லா பக்கமும் சிக்கல்கள்

*கொழும்பு, ஜன. 1*
முன்னாள் அமைச்சர் ராஜிதவுக்கு எதிராக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளது.
ராஜித சுகாதார அமைச்சராக இருந்த காலத்தில் மருந்துக் கொள்வனவில் மோசடிகள் இடம்பெற்றுள்ளது என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலர் மருத்துவர் ஹரித் அளுத்கே, இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.
கணக்காளர் நாயகத்தின் சிறப்பு அறிக்கை, தேசிய கொள்முதல் ஆணைக்குழுவின் அறிக்கை உட்பட பல அறிக்கைகளின் தரவுகளின் பிரகாரம் அவருக்கு எதிராக முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது, என்றும் அவர் தெரிவித்தார். (ஒ,5,24)

# திருவெம்பாவை

## மார்கழி நீராடி சிவபிரான் புகழைப் போற்றுவோம்

இராமநாதபுரத்தூர் நிஷாந்தன்



இந்து மக்களின் இறைவழிபாட்டிற்குரிய சிறப்பான மாதமாக விளங்குவது மார்கழி மாதமாகும். ஏனெனில் இறை வழிபாடுகள் அதிகளவில் இயற்றப்படுவது இம் மாதத்திலேயாகும். அது மட்டுமன்றி இந்த மார்கழி மாதமே, தேவர்கள் தம் உறக்கத்தில் இருந்து விழித்தெழும் மாதமாகும். ஆகவே இம் மாதம் தேவர்களின் மாதம் எனவும் அழைக்கப்படுகின்றது. ஆகவேதான் இம் மாதத்தில் இறை வழிபாடுகள் மட்டுமே செய்ய வேண்டும் என்பதனால் இந்து மக்கள் பெரும்பாலும் தங்களது இல்லங்களில் மங்கலகரமான சுப நிகழ்வுகள் எதனையும் நடத்துவதில்லை. மாறாக இறைவனது சிறப்பு வழிபாடுகள் மட்டுமே இந்த மாதத்தில் கடைப்பிடிக்கப்படுகின்றன. அதிலும் இந்த மார்கழி மாதத்தில் அதிகாலைப் பொழுதில் இறை வழிபாடுகள் செய்யப்படுகின்றமையால் அதிக நன்மை கிடைக்கின்றது என்பது கருதியே பாவை நோன்புகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. மாணிக்கவாசகர் மற்றும் ஆண்டாள் ஆகிய இருவரும் இந்தப் பாவை நோன்பின் சிறப்பினைப் பற்றி பாடியிருப்பதனை நாம் காண முடிகின்றதல்லவா?

### திருவெம்பாவை வழிபாடு

மார்கழியில் வரும் ஒரு முதன்மையான விரதம் திருவெம்பாவை. மாணிக்கவாசகர் இவ்விரத மகிமை பற்றிப் பாடுகின்றார். அதாவது, கன்னிப் பெண்கள் எல்லோரும் ஒன்று கூடி அதிகாலையில் எழுந்து நீர் நிலையில் சென்று நீராடி பாவைப் பொம்மையினை மண்ணினால் செய்து தம் உள்ளத்தில் பொங்கும் இறை அன்பினால் சிவபெருமான் புகழையும், பெருமையையும் பாடி அவன் அருளைப்பெற முனைவதனை இந்த நோன்பு எடுத்துரைக்கின்றது. ஆக இந்த நோன்பின் சிறப்பை மாணிக்கவாசகர் தனது திருவெம்பாவைப் பாடல்களின் ஊடாக அழகுற எடுத்துரைத்துள்ளார். திருவண்ணாமலையில் இறைவனைத் தரிசிக்கும் போது இந்த திருவெம்பாவைப் பாடல்களை மாணிக்கவாசகர் பாடியருளியுள்ளார்.

### நோன்பிற்காக மங்கையரை துயில் எழச் செய்தல்

பாவை நோன்பினைக் கடைப்பிடிப்பதற்கு கன்னிப் பெண்கள் எல்லோரும் ஒன்று கூடி நீர் நிலைக்குச் செல்ல முற்படுகின்றனர். அதன் காரணத்தால் அனைத்து கன்னிப் பெண்களையும் அழைத்துச் செல்வதற்காக ஒவ்வொரு சிறுமியரின் இல்லங்களுக்கு சென்று அவர்களைத் துயில் எழுப்புகின்றனர். திருவெம்பாவைப் பாடல்களில் ஒன்று தொடக்கம் எட்டு வரையான பாடல்களில் இவ்வாறு மங்கையரைத் துயில் எழுப்புவதை மாணிக்க வாசகர் அழகுறப் பாடியருளியுள்ளார். இப் பாடலைக் காணுங்கள்,

ஒண்ணித் தில நகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளி மொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக் கொடுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம் மாட்டோம் நீயே
*வந்தெண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய்*

ஒளியுடைய் முத்துப் போன்ற பற்களை உடையவளே, இன்னும் உனக்கு பொழுது புலரவில்லையோ? அழகிய கிளியின் சொல்லின் இனிமை போன்ற சொற்களை உடைய தோழியர் எல்லோரும் வந்து கூடிவிட்டனர். நீ அதனை நம்ப மறுத்தால் எழுந்து வந்து பார்ப்பாய், அல்லது நாம் இங்கிருந்து சென்று விடுவோம், ஆனால் அத்தனை காலமும் கண்ணுறங்கி வீணாகக் காலத்தைக் கழித்து விடுவாய். தேவர்களுக்கு ஒப்பற்ற அமுதம் போன்றவனை அறம், பொருள், இன்பம், வீடு எனும் வேதத்தில் சொல்லப்பட்டுள்ள மேலானபரம்பொருளைப் புகழ்ந்து பாடி பெறும் பயனை நீ அடைய முடியாமல் போய்விடும். ஆகவே விரைந்து எழுந்து வந்து எம்மோடு கலந்திடுவாய்.

மேலும், பெண்ணே நீ நேற்று எம்மிடம் நாளையதினம் வந்து எம்மை எழுப்புவேன் என்று சொல்லுக்கும், வெட்கப்படாமல் நீ போன திசையைச் சொல்லுவாய், இன்னும் உனக்கு பொழுது விடியவில்லையோ? வானுலகத்தவரும், நிலவுலகத்தவரும், ஏனைய உலகத்தவரும், அறிவதற்கு அருமையான இறைவனது கழல் அணிந்த திருவடிகளைப் பாடி, இங்கு வந்துள்ள எங்கள் அழைப்பிற்கு நீ உன் வாய் திறந்து பதில் எதுவும் கூறாது இருக்கின்றாய், உடலும் உருகப் பெறாது இருக்கின்றாய், எமக்கெல்லாம் தலைவனாக இருப்பவனை எழுந்து வந்து பாடுவாயாக என மாணிக்கவாசகர் தன்னையும் ஒரு பெண்ணாகப் பாவனை செய்து பாடி நிற்கின்றார்.

### சிவபிரானிடத்தில் பாவையரின் விண்ணப்பம்

பாவை நோன்பினை அனுஷ்டிக்கின்ற மங்கையர்கள் சிவபெருமான் புகழையும், பெருமைகளையும் பாடிப் போற்றித் தம் விருப்பங்களை முன்வைக்கின்றனர். முற்பட்டவனாகிய பழமையான பொருளே, உன்னை ஆண்டவனாகப் பெற்ற உன் சிறப்பு மிக்க அடியவர்களான உன் தொண்டர்களின் திருவடிகளை வணங்குவோம், அங்கே அவர்களுக்கு உரிமை உடையவர்களாவோம், அவர்களே எங்களது அன்புற்குரிய கணவராவார். அவர்கள் விரும்பிக் கட்டளையிட்ட வண்ணமே அவர்கட்கு அடிமையாய் நின்று ஏவல் செய்வோம். எங்கள் பெருமானே, எங்களுக்கும் இம்முறையே கிடைக்குமாறு அருள் புரிவாராயின் எவ்வகையான குறைபாடுகளும் இல்லாதவர்களாக வாழ்ந்திட அருள்புரிவாய் இறைவனே.

இவை தவிர, எங்கள் தலைவனே, எங்கள் தனங்கள் உன்னடியவர் அல்லாதார் தோள்களைத் தழுவாதிருக்கட்டும், எம் கைகள் உனக்கன்றி பிற தேவர்களுக்கு எவ்வகையான தொண்டும் செய்யாதிருக்கட்டும், இரவும், பகலும் எம் கண்கள் உன்னையன்றி வேறு எந்தப் பொருளையும் காணாதிருக்கட்டும்,

இந்த நிலவுலகில் இம் முறையே எங்கள் தலைவனே, நீ எங்களுக்கு அருளுவாயாயின் கதிரவன் எந்தத் திசையில் உதித்தால் எங்களுக்கு என்ன?

### சிவபெருமான் பெருமைகளை புகழ்ந்துரைத்தல்

மாணிக்கவாசகர் அருளிய திருவெம்பாவைப் பாடல்களில் எம்பெருமான் சிவபிரானது பெருமைகளையும், சிறப்புக்களையும் புகழ்ந்துரைக்கின்றார். ஆதி அந்தம் இல்லாத ஜோதி வடிவானவன், தில்லையின் குடிகொண்டுள்ள இறைவன், தேவர்களுக்கு ஒப்பற்ற அமுதம் போன்றவன், வேதங்கள் புகழ்கின்ற மேலான பொருளானவன், நீண்ட கழலணிந்த திருவடிகளைக் கொண்டவன், உமையம்மை சேர்ந்திருக்கும் மேனியுடையவன், அனைத்து உலகத்தவரும் போற்றிப் புகழுகின்ற இறைவன், நெருப்புப் போன்ற செந்நிறம் உடையவன், வெண்மையான திருநீற்றுப் பொடியில் மூழ்கியிருப்பவன், அழகிய தில்லையில் அனலேந்தி ஆடுகின்ற கூத்தபிரான், திருவண்ணாமலை அண்ணல், திருமாலும் பிரம்மனும் காண முடியாத கமலப் பாதங்களை உடைய இறைவன் என்றவாறு சிவபெருமானது பல சிறப்புக்கள் இழையோடியுள்ளன.

### மார்கழியில் நீராடி பக்தியில் சிறப்போம்

இத்தகைய சிறப்புப் பொருந்திய திருவெம்பாவை விரதம் சிவன் விஷ்ணு ஆலயங்களில் சிறப்புற அனுஷ்டிக்கப்படுகின்றன. இவ்விரதம் குறிப்பாக கன்னிப் பெண்கள் கடைப்பிடித்து பயன் பெற்ற தன்மையினை மாணிக்கவாசகர் பாடியுள்ளார். ஆக இவ்விரத காலத்தில் அதிகாலையில் எழுந்து நீராடி பக்திச் சிரத்தையோடு சிவன் ஆலயம் சென்று இவ் விரதத்தை அனுஷ்டிப்பது சிறப்பு. மேலும் இந்த விரத காலங்களில் அடியவர்கள் ஒன்று கூடி சங்கு ஊதி, மணி ஒலித்து நாமங்களை கூறியவாறு அதிகாலை வேளையில் அனைவர் இல்லங்களுக்கும் வருவது வழக்கமாகும். அத்துடன் இந்த திருவெம்பாவை விரத காலத்தில் பஜனை, நாமசங்கீர்த்தனங்கள் என்பவற்றுடன் திருவெம்பாவைப் பாடல்களும் இசைக்கப்படுகின்றன. ஆகவே மார்கழியின் இந்த திருவெம்பாவை விரத காலத்தில் வழிபாடியற்றி கங்கையை சடையில் தரித்துள்ள எம்பெருமான் சிவபிரானது திருவருளைப் பெற்று இன்புற்று வாழ்ந்திடுவோம்.

## குண்டு வெடிப்பு ▪ அவலம் ▪ ஆட்சி மாற்றம்

# 'குட் பை' 2019 விட்டுச் செல்லும் நினைவுகள்



### ஜனவரி

1.1.2019
- வடக்கிலும் தெற்கிலும், ஏராளமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகிய, முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரேமதாச உடுகம்பொல உயிரிழப்பு.
- வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தெற்கிலிருந்து உதவிப்பொருள்கள் கிளிநொச்சிக்கு ரயிலில் எடுத்து வரப்பட்டன.

2.1.2019
- 23 ஆவது கட்டளைத் தளபதியாக றியர் அட்மிரல் பியல் டி சில்வா கடமையேற்பு.
- ஐரோப்பிய நாடாளுமன்றின் இலங்கை நட்புக்குழுவின் உறுப்பினர் ஜெப்ரிவான் ஓர்டன் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை கொழும்பில் சந்தித்தார்.

3.1.2019
- சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலராக தயாசிறி ஜயசேகர நியமனம்.

4.1.2019
- 5 மாகாணங்களுக்கு புதிய ஆளுநர்கள் நியமனம்.



7.1.2019
- மாத்தளை - பெலியத்த இடையே சுரங்கத் தொடருந்துப் பாதை வெள்ளோட்டம்.
- வடக்கு மாகாண ஆளுநராக சுரேன் ராகவன் நியமனம்.

10.1.2019
- வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் உதயன் பத்திரிகை நிறுவனத்துக்கு வருகை.



15.1.2019
- வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான கல்வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல் தென்மயிலை, மயிலிட்டி வடக்கு கிராமங்களில் நடுகை.

23.1.2019
- முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் புத்தர் சிலை திறப்பு.
- மன்னார் மனிதப் புதைகுழியின் மீட்கப்பட்ட எலும்புக் கூடுகளின் மாதிரிகள் கார்பன் பரிசோதனைக்கு அமெரிக்கா அனுப்புவதற்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் கையளிப்பு.

29.1.2019
- கோட்டை - காங்கேசன்துறை இடையே உத்திரதேவி ரயில் சேவை ஆரம்பம்.

### பெப்ரவரி



1.2.2019
- இலங்கையின் சுதந்திர தினம் தமிழர் தாயகத்தில் கரி நாளாகக் கடைப்பிடிப்பு.

5.2.2019
- 2019ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்துக்கான நிதி ஒதுக்கீட்டு சட்டவரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பு.

6.2.2019
- வடகிழக்கில் பாதிக்கப்பட்ட பெண்களிடம் பாலியல் லஞ்சம் கோரப்படுவதாக ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் தெரிவிப்பு.

7.2.2019
- மீளவும் கூட்டு அரசு அமைக்கும் யோசனையை நாடாளுமன்றத்தில் முன்வைத்த அரசு, உடனேயே அதனை மீளப் பெற்றுக் கொண்டது.

8.2.2019
- வவுனியாவில் இறப்பர் உற்பத்தி வெற்றியடைந்ததாக அறிவிப்பு.

10.2.2019
- மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாத சூழலில் புதிய அரசமைப்பு சாத்தியமில்லை என்று பிரதமர் ரணில் அறிவிப்பு.

12.2.2019
- முல்லைத்தீவு நாயாறு குருகந்த விகாரை 2 ஆயிரம் ஆண்டுகள் பழைமையானது என்று வவுனியா நீதிமன்றில் தொல்பொருள் திணைக்களம் தெரிவிப்பு.

13.2.2019
- உலக வங்கியின் தெற்காசியப் பிராந்தியத்துக்கான உதவித் தலைவர் ஹார்ட்விக் ஸ்காபர் இலங்கை வருகை.

15.2.2019
- போரில் நடந்ததை மறப்போம் மன்னிப்போம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கிளிநொச்சியில் வைத்து முதன் முறையாகத் தெரிவிப்பு.

17.2.2019
- இறுதிப் போரில் இராணுவத்தினர் போர்க் குற்றமிழைத்தனர் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு.

20.2.2019
- சில சந்தர்ப்பங்களில் இறுதிப் போரில் இராணுவத்தினர் போர்க்குற்றங்களில் ஈடுபட்டனர் என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவிப்பு.

21.2.2019
- இறுதிப் போரில் இராணுவத்தினர் போர்க் குற்றம் புரிந்திருந்தாலும் அவர்களைத் தண்டிக்கேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு.

22.2.2019
- காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்க வலியுறுத்தும் வகையில், முன்னெடுக்கப்பட்ட முழு அடைப்புப் போராட்டத்தால், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் முழுவதும் இயல்பு நிலை பாதிக்கப்பட்டது.

26.2.2019
- போர்க்குற்றத்தில் ஈடுபட்டவர்களுக்கு பொதுமன்னிப்பளிக்கும் அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சர் சம்பிக்க சமர்ப்பிப்பு.

### மார்ச்

1.3.2019
- இலங்கைக்கு மேலும் இரண்டு ஆண்டுகள் அவகாசம் வழங்கியது ஐ.நா மனித உரிமைகள் சபை.

2.3.2019
- காணாமல் போனோருக்கான பணியகத்தின் முதலாவது பிராந்திய கிளைச் செயலகம், மாத்தறையில் திறக்கப்பட்டது.

3.3.2019
- திருக்கேதீச்சர அலங்கார வளைவு கத்தோலிக்கர்களால் இடித்தழிப்பு.

7.3.2019
- மன்னார் மனிதப் புதைகுழியில் இருந்து கிடைக்கப்பெற்ற என்புகள் 15 - 18ஆம் நூற்றாண்டுக்கு உட்பட்டவை என்று தகவல்.

9.3.2019
- போர்க்குற்றம் தொடர்பில் பேச்சு என்ற பேச்சுக்கே இடமில்லை. உள்நாட்டு, வெளிநாட்டு அறிக்கைகளை மூடும்படி மைத்திரி அறிவிப்பு.

11.3.2019
- நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. பேச்சு.

12.3.2019
- இலங்கைத் தமிழன் இருக்கும் வரையில் தமிழ் அழியாது என்று தெரிவித்தார் தென்னிந்திய திரைப்பட நடிகர் விவேக்.

**திருக்கேதீச்சர அலங்கார வளைவு இடித்தழிப்பு**



13.3.2019
- ஐ.நா மனித உரிமைகள் பேரவையில், இலங்கை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள தீர்மான வரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

14.3.2019
- காணாமல் போனோரின் மனைவியர் மீது அரச அதிகாரிகளால் பாலியல் துர்நடத்தை என்று அமெரிக்கா குற்றச்சாட்டு.





# குண்டு வெடிப்பு 2019

15.3.2019
- போர்க் குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை வேண்டும் என்று குடாநாட்டில் எழுச்சிப் பேரணி.

9.3.2019
- ஐ.நா சபையின் பிடியில் இருந்து இலங்கை தப் பாது என்று சம்பந்தனுக்கு ஜெப்ரி வாக்குறுதி.
- காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக கிழக்கில் பெரும் எடுப்பில் கடையடைப்பு.


21.3.2019
- இலங்கை அரசை 30/1 தீர்மானத்தை நிறை வேற்றும்படி வலியுறுத்தி 40/1 தீர்மானத்தை நிறைவேற்றியது ஐ.நா.

22.3.2019
- இலங்கையில் முதல்முறையாக செயற்கை முறை யில் மழை பெய்யும் திட்டம் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டது.

25.3.2019
- தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையை நிறுத்துவ தற்குத் திட்டம் என்று ஜனாதிபதி மைத்திரி தெரி விப்பு.

30.3.2019
- குடாநாட்டின் குடிதண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அமைக்கப்பட்ட மாற்றுக் குடி தண்ணீர் திட்டத்துக்காக 2000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

## ஏப்ரல்



04.4.2019
- நிலத்தடி நீரில் கழிவு ஒயில் பரவ நொதேர்ன் பவர் நிறுவனமே காரணம் என்று உயர் நீதிமன்று தீர்ப்பு. பாதிக்கப்பட்ட மக்களுக்கு 2 கோடி இழப்பீடு வழங்கவும் உத்தரவு.

05.4.2019
- கூட்டமைப்பின் ஆதரவுடன் நிறைவேறியது பாதீடு.

08.4.2019
- யாழ்ப்பாண மாணவன் அலைபேசி செயலி வடிவமைத்துச் சாதனை.

10.4.2019
- யாழ். பல்கலைக்கழகத்தில் இந்து கற்கைகள் பீடம் ஆரம்பிக்க அரசிதழ் வெளியீடு.

12.4.2019
- யாழ்.பல்கலையில் பகிடிவதை மாணவன் இடைநிறுத்தம்.

16.4.2019
- சுன்னாகத்தில் மின் தாக்கி மூவர் சாவு.
- கிளிநொச்சி கரந்தாய்க் காணிக்குள் அதிரடி யாகச் சென்று தங்கின 66 தமிழ்க் குடும்பங்கள்.

17.4.2019
- கந்தளாயில் பொலிஸ் உட்பட 10 பேரைத் தாக்கி பெண் வன்புணர்வு.

18.4.2019
- இலங்கையின் முதலாவது செய்மதி ராவணா1 விண்வெளிக்கு அனுப்பப்பட்டது.

21.4.2019
- ஐ.எஸ் அமைப்பு உயிர்த்த ஞாயிறு அன்று 5 இட
- ங்களில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல். 321 பேர் சாவு. 300 இற்கும் மேற்பட்டோர் காயம்.
- குண்டு வெடிப்பு அச்சுறுத்தல் ஏற்கனவே எச்சரிக்கப்பட்டதென்று ஜனாதிபதியின் செயலர் தெரிவிப்பு

22.4.2019
- கொச்சிக்கடையில் குண்டுவெடிப்பு
- அவசர காலச் சட்டம் நடைமுறை
- சாய்ந்தமருதில் குண்டுகள் வெடித்த வீட்டில் 15 சடலங்கள் மீட்பு.
- கிழக்கில் பெரும் பதற்றம்.

23.4.2019
- பொறுப்பேற்றது ஐ.எஸ்.ஐ.எஸ்.
- தேசிய துக்கதினம் அனுஷ்டிப்பு.
- செப்புத் தொழிற்சாலை என்ற பெயரில் குண்டு தயாரிப்புத் தொழிற்சாலை.

24.4.2019
- குண்டுத் தாக்குதலுடன் தொடர்பென்று கைதான வர்த்தகர் மஹிந்த ராஜபக்ஷவுடன் தொடர்புடையவர்.

- 26.4.2019
- அம்பாறை சாய்ந்தமருதில் பொலிஸ் ஆயுதக் குழு மோதல் மூவர் சாவு.
- பார்த்தால் தெரியும் வகையிலான புத்தகப் பைகளை மாணவர்கள் கொண்டுசெல்லுங்கள்; கிளிநொச்சிக் கூட்டத்தில் மாவட்டச் செயலர் தெரிவிப்பு.

27.4.2019
- இரு இஸ்லாமிய அமைப்புகளுக்குத் தடை.
- காத்தான்குடியில் தாக்குதல் ஒத்திகை பார்த்த ஐ.எஸ்.ஐ.எஸ்.

28.4.2019
- தற்கொலைக் குண்டுதாரிகளென்று 34 பேர் கைது.
- தற்கொலைக் குண்டுத் தாக்குதலால் 30 வீதம் பொருளாதார இழப்பு.

29.4.2019
- யாழ். தீவகத்தில் 5 பேர் கைது. ரவைகள் மீட்பு.
- கனகராயன்குளம் பகுதி உணவகத்தில் வெடிப்பொருள்கள் மீட்பு.
- இரசாயனத் தாக்குதலுக்கும் ஐ.எஸ். திட்ட மிட்டதா பொலிஸார் விசாரணை.

## மே

01.5.2019
- ஈஸ்டர் தாக்குதலால் மேதின பேரணிகள் எதுவும் முன்னெடுக்கப்படாமல் அமைதியான முறையில் அனுஷ்டிக்கப்பட்டது தொழிலாளர் தினம்.

02.5.2019
- இஸ்லாமிய மதப் போதகரான சாகிர் நாயக்கின் தொலைக்காட்சி அலைவரிசைக்கு இலங்கையில் தடை
- தற்கொலைதாரிகளின் விவரங்களை பொலிஸ் வெளியிட்டது

03.5.2019
- யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கைது (பிரபா கரனின் புகைப்படம் இருந்தது என்ற குற்றச்சாட்டில்)
- தௌகீத் ஜமாத் அமைப்பின் நிதி கட்டுப்பாட்டாளர் கைது

05.5.2019
- மாகந்துர மதுஷை நாடுகடத்தியது டுபாய் - மடக்கிப் பிடித்தது சிஐடி.
- நீர்கொழும்பு நகரில் ஏற்பட்ட பதற்ற நிலையைத் தொடர்ந்து அங்கு காவல்துறை ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.
- ஸஹ்ரானின் பயிற்சி முகாம் காத்தான்குடியில் கண்டுபிடிப்பு

06.5.2019
- முகத்தை மூடும் ஆடைகளுக்குக் கொழும்பு சாஹிராக் கல்லூரியில் தடை.
- சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு பயங்கரவாத அமைப்பின் பெயரில் மிரட்டல் கடிதம் அனுப்பி வைப்பு

07.5.2019
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு தகுதி வாய்ந்த அதிகாரியாகக் கதிர்காமநாதன் கந்தசாமி நியமிக்கப்பட்டுள்ளார்.
- அமைச்சர் ரிஷாத் பதியுதின் வீட்டில் பாதுகாப்புத் தரப்பு சோதனை (குண்டுத் தாக்குதல் தொடர்பில்)
- தாக்குதலுக்குப் பின்னர் மீண்டும் கொச்சிக்கடை தேவாலயத்தில் வழிபாடுகள் ஆரம்பம்
- தௌஹீத் ஜமாத் அமைப்பைச் சேர்ந்த நன்கு பயிற்சி வழங்கப்பட்ட 7 தற்கொலைதாரிகள் கைது

10.5.2019
- ஹிஸ்புல்லாவை பதவி நீக்குமாறு திருகோண மலையில் கடையடைப்பு
- வவுனியா மருத்துவமனைக்கு வெடிகுண்டு மிரட்டல்



ரத்ன தேரர் உண்ணாவிரத போராட்டம்.

11.5.2019
- வவுனியாவைச் சேர்ந்த மௌலவி ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத் துக் கைது செய்யப்பட்டார் (குண்டுத்தாக்கு தல் தொடர்பாக முகநூலில் பதிவேற்றம் செய்தார் என)
- புதிய சட்டமா அதிபராக தப்புல டி லிவேரா அரச தலைவர் முன்னிலையில் பதவியேற்றார்.

14.5.2019
- குளியாப்பிட்டிய, மினுவாங்கொட பகுதிக ளில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை களை தூண்டி விட்டனர் என்ற குற்றச்சாட்டில், ஊழல் எதிர்ப்பு படையணியின் பணிப்பாளர் என கூறிக் கொள்ளும் நாமல் குமாரவும், மகாசோன் படையணியின் தலைவர் என கூறிக் கொள்ளும் அமித் வீரசிங்கவும் கைது.
- நவ சிங்ஹலே அமைப்பின் தலைவர் டேன் பிரியஸாத் கற்றத் தடுப்புப் பிரிவால் கைது (முஸ்லீம்களுக்கு எதிரன வன்முறை தொடர்.)

15.5.2019
- ரிஷாட் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை, நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரரால் சபாநாயகரிடம் கையளிப்பு.

17.5.2019
- வெளிநாட்டு ஏதிலிகள் வடக்கை வந்தடைந்தனர்.

21.5.2019
- ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலான, அர சாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேர ணையை ஜேவிபி , சபாநாயகரிடம் கையளித்தது.

23.5.2019
- நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் தண்டனை அனுப வித்து வந்த பொதுபல சேனா அமைப்பின் தலை வர் கலகொடஅத்தே ஞானசார தேரர் ஜனாதிபதி பொதுமன்னிப்பின்கீழ் விடுதலை.

24.5.2019
- அவசரகாலச் சட்டம் நிறைவேறியது.

26.5.2019
- மறவன்புலவில் காற்றாலை அமைப்பதற்கு எதிராக மக்கள் போராட்டம்.

27.5.2019
- வடக்கு மாகாண பனை நிதியம் ஆரம்பம்.

31.5.2019
- அமைச்சர் ரிஷாட் பதியுதீன், மேல் மாகாண ஆளு நர் அசாத் சாலி, கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ் புல்லா ஆகியோரை பதவி விலகுமாறு வலியுறுத்த ரத்ன தேரர் உண்ணாவிரதப் போராட்டம்.

# விட்டுச் செல்லும் நினைவுகள் 2019



நாவற்குழியில் விகாரை

## ஜூன்

03.6.2019
- முஸ்லிம் அமைச்சர்கள் கூட்டாகப் பதவி துறப்பு

05.6.2019
- நீராவியடி ஆலய பகுதி பௌத்த மதத்துக்கே சொந்தம் பிக்குகள் தலைமையில் சிங்கள மக்கள் போராட்டம்.

16.6.2019
- கல்முனைப் பிரதேச செயலகத்தைத் தரம் உயர்த்த பேராட்டம் ஆரம்பம்

20.6.2019
- கிழக்கு மாகாணத்தில் கடையடைப்பு- கல்முனை பிரதேச செயலகத்தை தரமுயர்த்த கோரி.

21.6.2019
- கோத்தா முன்னிலையாகாததால் லலித் குகன் வழக்கு ஒத்திவைப்பு

22.6.2019
- கல்முனை போராட்டம் தற்காலிகமாக நிறுத்தம்

சிங்கள மக்கள் போராட்டம்.



23.6.2019
- 14 ஆண்டுகள் சிறையில் இருந்த அரசியல் கைதி மு.சகாதேவன் சாவு.

25.6.2019
- பாரதிபுரத்தில் தொடருந்து மோதி 5 இராணுவத்தினர் சாவு

27.6.2019
- இலங்கை வந்தார் ரமபோஷா

28.6.2019
- தெரிவுக்குழு முன் ரிசாத் சாட்சியம்

29.6.2019
- தமிழரசுக் கட்சி தலைவராக மாவை மீண்டும் தெரிவு

## ஜூலை

01.7.2019
- ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களைத் தடுக்கத் தவறிய குற்றச்சாட்டு தொடர்பாக ஹேமசிறி பெர்னாண்டோ, பூஜித ஜயசுந்தர கைது செய்யுமாறு சட்டமா அதிபர் உத்தரவு.

03.7.2019
- திருமலை மாணவர்கள் படுகொலை வழக்கிலிருந்து 13 படையினரும் விடுதலை

05.7.2019
- பலாலி வானூர்தி நிலைய அபிவிருத்திகள் ஆரம்பித்து வைப்பு

11.7.2019
- ஐக்கிய தேசியக்கட்சி அரசுக்கு எதிராக ஜேவிபியினால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணை 27 மேலதிக வாக்குகளால் தோற்கடிப்பு.

13.7.2019
- யாழ்ப்பாணம் நாவற்குழியில் விகாரை திறப்பு

16.7.2019
- கன்னியாவில் பௌத்தர்கள் குழப்பம்.
- தென்கயிலை ஆதீன குரு முதல்வர் மீது எச்சில் தேநீர் ஊற்றப்பட்டது

17.7.2019
- நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில் நந்திக் கொடியைக் கிழித்து பௌத்தர்கள் அடாவடி

20.7.2019
- மானிப்பாயில் பொலிஸாரால் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொலை

21.7.2019
- சம்பள உயர்வு கோரி நாடு முழுவதும் தபால் ஊழி யர்கள் வேலை நிறுத்தம்

22.7.2019
- கன்னியாவில் விகாரை அமைக்க நீதி மன்றம் இடைக்காலத் தடை



29.7.2019
- அமைச்சுப் பதவிகளை மீண்டும் ஏற்றனர் முஸ்லிம் எம்.பிக்கள்.

## ஓகஸ்ட்

01.8.2019
- 48 நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளுக்கு, கட்டணமில்லா வருகை நுழைவிசைவு வழங்கும் திட்டத்தை ஆரம்பித்தது இலங்கை அரசு.

03.8.2019
- இலங்கையைச்சேர்ந்த இரண்டு ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கிய செய்மதியான ராவணா, விண்வெளியில் இருந்து எடுத்த முதலாவது படம் வெளியீடு.

05.8.2019
- வரலாறு காணாத பாதுகாப்புடன் நல்லூர் திருவிழா.
- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் குருநாகல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சாலிந்த திசநாயக்க (வயது61) கொழும்பில் காலமானார்.



06.8.2019
- இலங்கைக்கான அமெரிக்கர் தூதுவராக கெலி நியமனம்

13.8.2019
- நடிகை சுகன்யா யாழ்ப்பாணம் வந்தார்.

15.8.2019
- மயிலிட்டி துறைமுகம் திறக்கப் பட்டது.
- சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் மாநாடு. ஜனாதிபதி வேட்பாளராக கோத்தாபய ராஜபக்ஷ மஹிந்தவால் அறிவிப்பு.


18.8.2019
- தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராக அனுரகுமார திஸாநாயக்க அறிவிப்பு.

19.8.2019
- பளை மருத்துவமனை பொறுப்பதிகாரி சின்னையா சிவரூபன் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது.
- இலங்கை இராணுவத் தளபதியாக, லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா நியமனம்.

22.8.2019
- இஸ்லாமியத் திருமணச் சட்டத்தைத் திருந்த அமைச்சரவை அனுமதி

23.8.2019
- மருத்துவர் சிவரூபனைத் தொடர்ந்து ரி.ஐ.டியால் வடக்கில் 3 பேர் கைது.

30.8.2019
- திருவள்ளுவர் முத்திரை யாழ்ப் பாணத்தில் வெளியீடு.




## செப்ரெம்பர்

01.9.2019
- பகிடிவதையில் ஈடுபடுவோருக்கு 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை - உயர் கல்வி அமைச்சு எச்சரிக்கை

12.9.2019
- வெடுக்குநாறி மலையில் பொங்கல் படிக்கட்டால் பொலிஸார் கடுஞ் சினம்.

16.9.2019
- எழுக தமிழ் யாழில் நடைபெற்றது.
- தெற்காசியாவின் மிக உயர்ந்த கோபுரமாகக் கருதப்படும் கொழும்பு தாமரைக் கோபுரம் திறக்கப்பட்டது ஜனாதிகதி மைத்திரிபால சிறிசேனாவால் திறக்கப்பட்டது.

18.9.2019
- 144 பட்டதாரிகளுக்கு நியமனம் அலரி மாளிகையில்

23.9.2019
- பிக்குவின் உடலைத்தகனம் செய்வது தொடர்பாக முல்லை நீராவியடியில் பதற்றம்

24.9.2019
- முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் தேரின் உடலைத் தகனம் செய்வதற்கு நீதிமன்று விதித்திருந்த தடையை மீறி ஆலய வளாகத்துக்கு அருகில் தேரரின் உடல் தகனம் செய்யப்பட்டது கொழும்பில் இருந்து வந்த பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலர் ஞானசார தேரர் தலைமையிலான பௌத்த பிக்குகள் இதை நிறைவேற்றினர்.



தேரரின் உடல் தகனம்

# 2019



## ஒக்ரோபர்

04.10.2019
- கோத்தாபயவின் குடியுரிமையை கேள்விக்கு உட்படுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தள்ளுபடி.

06.10.2019
- 41 வேட்பாளர்கள் ஜனாதிபதி தேர்தலில் கட்டுப் பணம் செலுத்தினர்.

08.10.2019
- 35 பேர் களத்தில் தேர்தல் சமர் ஆரம்பம்.

10.10.2019
- விசுவமடு கூட்டு பாலியல் வல்லுறவு - 3 படையின ரும் விடுதலை.

11.10.2019
- எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தல்.

13.10.2019
- வாகன தண்டனைச் சீட்டு இனி மும்மொழியில்

14.10.2019
- கோண்டாவிலில் 15கிலோ கிளைமோர் மீட்பு

15.10.2019
- 41 ஆண்டுகளின் பின்னர் பலாலியில் இறங்கியது இந்திய வானூர்தி
- ஜனாதிபதி தேர்தல் ஐந்து தமிழ்க் கட்சிகள் பொது உடன்பாட்டில் கைச்சாத்து.

17.10.2019
- 25,000 பனை விதை நடுகை
- யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் திறப்பு

19.10.2019
- யாழ்ப்பாணத்தில் விக்கிப்பீடியர்களின் மாநாடு



## நவம்பர்

1.11.2019
- சஜித்துக்கு சந்திரிகா ஆத ரவு - 28 கட்சிகளுடன் புதிய கூட்டணி உடன்பாடு கைச் சாத்து.

3.11.2019
- சஜித்துக்கு ஆதரவளிக்க தமிழ் அரசுக் கட்சி மத்திய குழு முடிவு.

7.11.2019
- 2019 ஜனாதிபதித் தேர்த லில் அன்னம் சின்னத்தில் போட்டியிடும் சஜித் பிரேமதாசவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரித்தது.

10.11.2019
- தேர்தல் பரப்புரைகளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்தார் சிவாஜிலிங்கம்.
- 2005 இல் சுவீடன் நாட்டு பதின்ம வயதுப் பெண் ஒருவரைக் கொலை செய்த குற்றத் துக்காக மரணதண்டனையை எதிர்நோக்கி சிறை வைக்கப்பட்டிருந்த ஜூட் ஜெயமகா என்பவரை அரசுத்தலைவர் மைத்திரி பால சிறிசேன பொது மன்னிப்பளித்து விடுதலை செய்தார்.

14.11.2019
- தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒரு வர் தொடர்பான நூலொன்றை வெளி யிட்ட ஊடகவியலாளர் மீது கத்திக்குத்து.

15.11.2019
- ஒருவித வைரஸ் காய்ச்சலால் யாழ்ப் பாண மாவட்டத்தில் மருத்துவ நெருக்கடி

16.11.2019
- 8ஆவது ஜனாதிபதி தேர்தல் நடைபெற் றது. 35 வேட்பாளர்கள் போட்டி.

17.11.2019
- இலங்கையின் 7ஆவது நிறைவேற்றதி காரம் கொண்ட அரசுத்தலைவராக கோட் டாபய ராஜபக்ச 52.25% வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார் என அதிகாரபூர் வமாக அறிவிக்கப்பட்டது.
- தோல்விக்கு பொறுப்பேற்று சஜித் பதவி விலகல்.
- பாதுகாப்பு அமைச்சின் செயலராக மேஜர் ஜெனரல் கமால் குணரத்னவை முதலா வது நியமனமாக நியமித்தார் கோத்தாபய

18.11.2019
- ஜனாதிபதியாக கோத்தபாய ராஜபக் ஷ அனுராதபுரத்தில் பதவியேற்பு

19.11.2019
- முன்னாள் பிரதமர் டி.எம்.ஜயரட்ண (வயது88) கண்டியில் காலமானார்.
- ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தனது செயலக கொடியை நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தினார்.
- கோத்தபாய தனது கடமைகளை ஜனாதி பதி செயலகத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

20.11.2019
- ரணில் பிரதமர் பதவியிலிருந்து விலகி னார்.

21.11.2019
- ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இலங் கையின் புதிய பிரதமராக மஹிந்த ராஜ பக்சவை நியமித்தார். மஹிந்தவின் தலைமையில் 15 அமைச்சர்கள் கொண்ட இடைக்கால அமைச்சரவை நியமிக்கப் பட்டது.

27.11.2019
- எழுச்சியுடன் தாயகத்தில் மாவீரர்களுக்கு அஞ்சலி.

29.11.2019
- கோத்தாவின் இந்திய வரவுக்கு எதிர்ப்பு தெரிவித்து சென்னையில் உள்ள இலங்கை தூதரகம் முற்றுகை போராட்டம்.



வடக்கு மாகாண ஆளுநராக
திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் நியமனம்

## டிசெம்பர்

02.12.2019
- 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடை முறைப்படுத்தும் இந்தியாவின் கோரிக்கையை தூக்கிக் கடாசினார் கோத்தா மோடி கோரி 24 மணி நேரத்திலேயே இந்தியாவில் வைத்தே நிரா கரிப்பு

03.12.2019
- தேர்தல் முடிவுகளில் ஈழநாட்டு வரைபடம் பிரச்சி னையைக் கிளப்புகின்றார் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல

05.12.2019
- கோத்தாவை கொல்லச் சதி 4 தமிழர்கள் ஒரு முஸ் லிம் கைது

09.12.2019
- நேர்மைத்திறன் விருது 2 ஆம் இடம் மருத்துவர் சத்தியமூர்த்திக்கு 9 ஆம் திகதி வழங்கப்பட்டது.

10.12.2019
- நீதிமன்றில் முன்னிலையாக மைத்திரிக்கு அழைப்பாணை.

12.12.2019
- யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களின் மேலதிக செயலர்களுக்கு இடமாற்றம்.

13.12.2019
- வர்ணமயமாகும் யாழ்ப்பாணம்.

15.12.2019
- சிறீகாந்தா தலைமையில் உருவானது தமிழ்த் தேசியக் கட்சி.

16.12.2019
சுவிஸ் தூதரகப் பணியாளர் சிஐடியினரால் கைது.

17.12.2019
தேர்தலில் இனி போட்டியிடார் என சம்பந்தன் தெரி விப்பு.

18.12.2019
முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க கைது.

19.12.2019
வேலணை பிரதேச சபையில் கோத்தாவின் கட்சியினர் அராஜகம்.
மருத்துவ சான்றிதழ் "டோக்கன் சிஸ்டம்" நிறுத்தம்

20.12.2019
கடன் அறவீடு உடன் நிறுத்தம் (சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறையின் பெற்றுக்கொண்ட கடனை மீள அறவிடுவது இடைநிறுத்தப்பட்டது)

21.12.2019
யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு முன்பாக அமைக்கத் திட்டமிடப்பட்ட பௌத்த சின்னங்கள் அகற்றப்பட்டன.
10 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஏற்படும் சூரிய கிரக ணம் இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் தோன்றியது.

27.12.2019
முன்னாள் அமைச்சர் ராஜித கைது

30.12.2019
வடக்கு மாகாண ஆளுநராக திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் நியமனம்

# விட்டுச் செல்லும் நினைவுகள் 2019

## உலக பதிவுகள்

### ஜனவரி
1.1.2019
- புத்தாண்டில் சோகம். பிலிப்பைன்சில் வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி 68 பேர் பலி

9.1.2019
- 3 குமரி மீனவர்களை சிறைபிடித்த ஈரான் கடற்படை.

4.1.2019
- நிலவின் 'இருண்ட' பக்கத்தில் வெற்றிகரமாக தரையிறங்கிய சாங் இ4.. வரலாற்றுச் சாதனை படைத்த சீனா!

6.1.2019
- ஆப்கானிஸ்தானில் பயங்கரம். தங்கச்சுரங்கத்தில் திடீர் நிலச்சரிவு. மண்ணில் புதைந்து 30 பேர் பலி.

### பெப்ரவரி
2.2.2019
- இந்தோனேசியா, பாகிஸ்தானில் அடுத்தடுத்து நிலநடுக்கம்.

3.2.2019
- பிரேசிலில் அணை உடைந்து விபத்து.. 121பேர் பலி. 200க்கும் அதிகமானோர் மாயம்

5.2.2019
- பொலிவியாவில் கொட்டித் தீர்த்த கன மழை. நிலச்சரிவில் சிக்கி 14 பேர் பலி
- பெருவில் சுரங்க விபத்து. 4 தொழிலாளர்கள் உயிருடன் மீட்பு
- அரபு நாட்டுக்கு முதல் முறையாக சென்றுள்ள போப் பிரான்சிஸ்..



### ஏப்ரல்
3.4.2019
- அழிவை நோக்கி செல்லும் சவுதியின் "கே ஜிஎவ்". முடிவை நெருங்கும் பிரம்மாண்ட எண்ணெய் சுரங்கம்.

10.4.2019
- பா.ஜ.க ஆட்சிக்கு வந்தால் காஷ்மீர் பிரச்சினையில் தீர்வு ஏற்படும்.

12.4.2019
- தெற்கு சூடான் தலைவர்கள் காலில் விழுந்து முத்தமிட்ட போப் பிரான்சிஸ்

### மே
6.5.2019
- தீப்பற்றி எரிந்த ரஷ்ய விமானம்.
- ஹமாஸ் இயக்கத்தின் டிஜிட்டல் போராளிகள் மீது வெற்றிகரமான தாக்குதலை நடத்தி முடித்த இஸ்ரேல்

7.5.2019
- 500 நாள் சிறைவாசம் முடிந்தது. 2 ரொய்ட்டர்ஸ் செய்தியாளர்களும் விடுவிப்பு. மியன்மார் அரசு அதிரடி!

### ஜூன்
2.6.2019
- அமெரிக்காவுக்குப் போர் எச்சரிக்கை கொடுத்த சீனா. அது உலகத்துக்கே பேரழிவு என்றும் எச்சரிக்கை

5.6.2019
- பட்ஜெட் நிதியை குறைத்துக் கொள்வதாக பாகிஸ்தான் ராணுவம் அறிவிப்பு. இம்ரான்கான் பாராட்டு!



### ஜூலை
3.7.2019
- உலகம் முழுவதும் திடீரென முடங்கிய பேஸ்புக், இன்ஸ்டாகிராம், வாட்ஸ் அப்.
- சீனாவில் 7 மணிநேரம் மழை. சாலைகளில் தண்ணீரே தேங்கவில்லை.
- ரஷ்ய நீர்மூழ்கி கப்பலில் தீ விபத்து. ஆராய்ச்சியில் ஈடுபட்ட போது சோகம்.!
- லாகூர் விமான நிலையத்தில் திடீர் துப்பாக்கிச் சூடு.
- லிபியாவில் பயங்கரம்.. இடம்பெயர்ந்தோர் முகாம் மீது திடீர் விமான தாக்குதல்.

### ஓகஸ்ட்
2.8.2019
- இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் பயங்கர நிலநடுக்கம். சுனாமி எச்சரிக்கை!

4.8.2019
- தென்மேற்கு பகுதியில் கொட்டித் தீர்க்கும் கனமழை. அல்லாடும் சீன மக்கள்
- அமெரிக்காவில் பயங்கரம். 9 பேரை சுட்டுக்கொன்ற மர்மநபர்.

### செப்டெம்பர்
2.8.2019
- வன்முறை ஸ்பொட்டான ஹொங் கொங். உக்கிரமாகும் போராட்டம். நாடாளுமன்றம்மீதுபெற்றோல்குண்டுவீச்சு
- காஷ்மீர் பிரச்சினைக்கு போர் தீர்வாகாது. காஷ்மீர் உள்நாட்டு பிரச்சினை அல்ல. பாக். திடீர் பல்டி

### ஒக்ரோபர்
2.10.2019
- திடீரென செயலிழந்த பாராசூட்.. 20,000 அடி உயரத்தில் இருந்து கீழே விழுந்த சுற்றுலாப் பயணி பரிதாபப் பலி

3.10.2019
- சீனாவில் ஊழல். முன்னாள் மேயர் வீட்டின் பாதாள அறையில் 2 லட்சத்து 31 ஆயிரத்து 341 கோடி பறி" முதல்.

4.10.2019
- வேலையின்மை.. ஊழல்.. ஈராக்கில் அரசுக்கு எதிராக மக்கள் போராட்டம்: 34 பேர் பலி, 1500 பேர் காயம்



'தாய்' மொழியில் திருக்குறள் மொழி பெயர்ப்பை வெளியிட்ட மோடி

### நவம்பர்
2.11.2019
- தென்கிழக்கு ஆசியாவின் நுழைவாயிலாக வட கிழக்கு இந்தியா மாற்றப்படும்: தாய்லாந்தில் மோடி அதிரடி
- 'தாய்' மொழியில் திருக்குறள் மொழி பெயர்ப்பை வெளியிட்ட மோடி. தாய்லாந்தில் கோலாகலம்
- இம்ரான்கான் பதவியிலிருந்தால் பாகிஸ்தானே இல்லாமல் போய்விடும். போராட்டக்காரர்கள் ஆவேசம்

3.11.2019
- மாலி பயங்கரவாத தாக்குதலில் 54 பேர் பலி ஐ.எஸ். இயக்கம் பொறுப்பேற்பதாக அறிவிப்பு

## இந்திய பதிவுகள்

### ஜனவரி
4.1.2019
அருணிமா சின்கா அண்டார்டிகாவின் வின்சன் மலையில் ஏறிய உலகின் முதல் பெண்ணாக சாதனை படைத்தார்.

7.1.2019 -
இந்திய அரசு பொருளாதாரத்தில் பின் தங்கிய பொதுப்பிரிவு சமூகத்தினர்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் 10% இடஒதுக்கீடு வழங்கப்பட்டது.

### பெப்ரவரி
14.2019
இந்தியத் துணை இராணுவப்படையினர் மீது புல்வாமாவில் ஜெய்ஸ் முகமது தீவிரவாதக் குழுவினர் நடத்திய தாக்குதலில் 40 பேர் இறந்தனர்.

### மார்ச்
27.3.2019
செயற்கைக்கோள் எதிர்ப்பு ஏவுகணைகள் தயாரிப்பதில் உலகின் 4ஆவது நாடாக இந்தியா தகுதி பெற்றது.

### ஏப்ரல்
11.4.2019
இந்தியப் பொதுத் தேர்தல்கள் முதற்கட்டமாக தொடங்கியது.

### மே
3.5.2019
போனி புயல் ஒடிசாவின் கடற்கரைப் பகுதிகளைத் தாக்கியது.

30.5.2019
உலகளவில் பிரபலமான 'நேசமணி'.

### ஜூலை
23.7.2019
சந்திரயான்2 ஏவப்பட்டது.

30.7.2019
இந்தியாவில் முத்தலாக் முறை தடை செய்யப்பட்டது.

### செப்ரெம்பர்
5.9.2019
74 வயதான எர்ராமட்டி மங்கம்மா என்ற ஆந்திர மாநில மூதாட்டி இரட்டை குழந்தைகளை ஈன்று உலக சாதனை படைத்தார்.

6.9.2019
சந்திரயான்2 இலக்கை நிறைவு செய்யவில்லை.

16.9.2019
ஜம்மு காஷ்மீர் தேசிய மாநாட்டு கட்சியின் தலைவர் பரூக் அப்துல்லா ஜம்மு காஷ்மீர் பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டார்.

### ஒக்ரோபர்
31.10.2019
நள்ளிரவில் ஜம்மு காஷ்மீர் (ஒன்றியப் பகுதி) மற்றும் லடாக் ஒன்றியப் பகுதிகள் நிறுவப்பட்டது. ஜம்மு காஷ்மீர் மாநிலம் கலைக்கப்பட்டது. இவ்விரண்டு ஒன்றியப் பகுதிகளுக்கு துணைநிலை ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர்.

### டிசெம்பர்
9.12.2019
இந்தியக் குடியுரிமை (திருத்தச்) சட்டம் 2019 நாடாளுமன்றத்தின் இரு அவைகளில் நிறைவேற்றப்பட்டு, சட்டமாக்கப்பட்டது. இச்சட்டத் திருத்தத்தின் படி, பாகிஸ்தான், வங்காளதேசம், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து இந்தியாவில் குடியேறிய இந்துக்கள், சீக்கியர்கள், சமணர்கள், பௌத்தர்கள், பார்சிகள் மற்றும் கிறித்தவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டது



# துன்புறுவோர்களுக்காக செயலாற்றுவோம் வாரீர்!

*யாழ். ஆயர் அழைப்பு*

மலர்ந்துள்ள இந்த ஆண்டில் துன்பப் படுவோர், துயருறுவோருக்காக நாம் அனைவரும் செயலாற்ற உறுதிபூணு வோம் இவ்வாறு தனது வாழ்த்துரையில் குறிப்பிட்டுள்ளார் யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை.


அவரின் வாழ்த்துரையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

இப்புதிய ஆண்டில் உங்கள் அனைவரின் உள்ளத்து எண்ணங்களும் எதிர்பார்ப்புக்களும் நிறைவுபெற வேண்டுமென இறையாசி வேண்டி புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

கத்தோலிக்க திருச்சபையானது 2020ஆம் ஆண்டின் முதல்தினத்தை ஆண்டவர் இயேசுவின் தாய் அன்னை மரியாவின் தினமாக அறிவித்து அன்னையின் பாதுகாவலில் புத்தாண்டை தொடங்கி அன்னையின் வழிகாட்டலில் ஆண்டு முழுவதும் பயணிக்க எமக்கு அழைப்பு விடுக்கிறது. ஆண்டவர் இயேசுவின் தாய் அன்னை மரியா உங்கள் அனைவரையும் தாய்க்குரிய அன்புடன் பாதுகாத்து வழிநடத்துவாராக.

யாழ் மறைமாவாட்டம் மலர்ந்துள்ள புத்தாண்டை 'துயருறுவோர் ஆண்டாக' பிரகடனம் செய்கின்றது. வாழ்வில் பல்வேறு நிலைகளில் துன்பப்படுகின்ற எல்லோரையும் எம் கண்முன் நிறுத்தி அவர்களுக்காகவும் செபிக்கவும், அவர்களின் துன்பங்களில் உதவிக்கரம் கொடுத்து, அவர்களைத் தாங்கிக் கொண்டு, வாழ்வை முன்னெடுக்க முன்வர வேண்டும்.

சிறப்பாக காணாமல் போனோர் விடயம், அரசியல் கைதிகள் விவகாரம், மீள்குடியேற்றம், வேலையற்றோர் பிரச்சனை, போதைப்பொருள் பிரசினை போன்றவற்றை முன்வைத்து செயற்பட அனைவரையும் வேண்டி நிற்கின்றேன் - என்றுள்ளது.



# புதிய வளங்களைப் பெற்றுத்தரும் ஆண்டாக அமையட்டும் புத்தாண்டு

*மன்னார் ஆயர் வாழ்த்து*

இந்தப் புத்தாண்டு பல புதிய வளங்களைப் பெற்றுத்தரும் ஆண்டாக அமைய வேண்டும் என மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மனுவல் பெர்னாண்டோ ஆண்டகை தனது வாழ்த்துரையில் தெரிவித்தார்.


எங்களுக்குப் புதிய ஆண்டு பிறந்து விட்டது. 2020ஆம் ஆண்டிலே நாங்கள் கால் பதித்து விட்டோம். இந்த வருடம் என்ன விதத்திலே 'அமையுமோ? சரியாக அமையுமா அல்லது வெவ்வேறு சவால்களுக்கு நாங்கள் முகம் கொடுக்க வேண்டுமா? என்று சிந்திக்கலாம்.

ஆனால் எமது கிறிஸ்தவ அடிப்படை நம்பிக்கையின் மட்டில் நாங்கள் இந்த ஆண்டிலே இறைவன் எங்கள் அனைவரையும் ஆசிர்வதித்து புனிதப்படுத்தி பாதுகாத்து வழிநடத்துவார் என்கின்ற எதிர்நோக்குடன் வாழுவோம்.

இறைவன் உங்கள் அனைவருக்கும் அவருடைய அளப்பரிய அன்பினால், நீங்கள் எதை நோக்கி முயற்சித்துக் கொண்டு இருக்கின்றீர்களோ அந்த நல்ல விடயங்கள் எல்லாம் கிட்டுவதற்கு அருள்பாலிக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன் என்று மேலும் குறிப்பிட்டுள்ளார்.



அனைவருக்கும் IIS இன் இனிய நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்கள்



Pearson BTEC

# HND

Higher National Diploma

COMPUTING

BUSINESS MANAGEMENT

CIVIL ENGINEERING

NEW INTAKE JANUARY 2020

பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் பயணித்த
இவ் வெற்றிப்பாதையில் உங்கள் காலடியையும் பதித்தக் கொள்ளுங்கள்

Lowest Investment · Easy Payment Schemes · Bank Loan Facilities · Experienced Lecture Panel · State Of The Art Facilities

More Details | Hot Line : 077 757 0038 | Web : www.iis.edu.lk

2020 ஆம் ஆண்டு 25வது ஆண்டில் காலடி பதிக்கும் உங்கள் IIS உடன் இணைந்து வாழ்வை வழப்படுத்திக் கொள்ளுங்கள்

25 வருட கல்விச் சேவை அனுபவம்

## IIS CITY CAMPUS

441, CLOCK TOWER ROAD, JAFFNA

வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய புதுவருட வாழ்த்துக்கள்

# மாபெரும் பண்டிகைக்கால சலுகை!!!

நீர் சுத்திகரிப்பு துறையில் முன்னோடியும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான
**Everpure Hi-Tec (Pvt) Ltd.** இடமிருந்து 10% - 40 % வரையிலான விலைக்கழிவும்
மற்றும் பரிசுப் பொருட்களும்

## வீட்டிற்குரிய RO Water System - 24,999/= லிருந்து




## காரியாலயம், தொழிற்சாலைகளுக்கான RO Water Filters



மணிக்கு 25 - 30 Lits - **54,400/=**
மணிக்கு 50 - 60 Lits - **115,400/=**
மணிக்கு 125 - 150 Lits - **275,000/=**
மணிக்கு 250 - 300 Lits - **375,000/=**

## உங்கள் வீட்டில் கல்சியம், காவிபடிதல் பிரச்சனையா?!!!




உங்கள் வீடுகளில் பொருத்தப்பட்டிருக்கும்
விலையுயர்ந்த Tiles, Bathroom Fittings, Washing Machine களை
*கல்சியம், மக்னீசியம், மற்றும் காவிப் படிவு* களிலிருந்து
பாதுகாக்க
**EVRO WATER SOFTENER**ஐ
பொருத்தி பயன்பெறுங்கள்

## HYBRID கழிவுநீர் சுத்திகரிப்பு இயந்திரம்




அனுகூலங்கள்:
- குறைந்த செலவு
- சிறிய இட பரப்பு போதுமானது (6' X 4')
- நிலத்துக்கு அடியில் வைக்கக்கூடியது
- நிரம்பி வழியாதது
- துர்நாற்றம், கிருமிகள் அற்றது

உங்களின் வீடு மற்றும் தொழிற்சாலை (Toilet, Kitchen, Bathroom, Washing Machine) கழிவுகளை மீள்சுழற்சி முறையில் சுத்திகரித்து மீண்டும் பாவனைக்கு உகந்த நீராக மாற்றித்தரும்

**Everpure Hi-Tec (Pvt) Ltd.**
No.581, K.K.S Road, Jaffna. (மனோகரா சந்திக்கு அருகாமையில்)
HOTLINE: 075 331 3310 ☎ 021 222 6888


Yarl Smart Water Solution
Yarl Smart
Water Solution (Pvt) Ltd
"Smart Water , Smart Life"
10 வருடங்கள்
நீர் சுத்திகரிப்பு துறையில் திறமை வாய்ந்த தொழில்நுட்பவியலாளர்கள்
உங்கள் வீடுகளில் உள்ள கிணற்று நீர் பிரச்சினைகளில் இருந்து விடுபட வேண்டுமா?
வீடுகளில் பொருத்தப்பட்டிருக்கும் விலையுயர்ந்த Tiles,Bathroom Fittings,Washing machines என்பன கல்சியப்படிவுகளிலிருந்து விடுபட வேண்டுமா?
தொழிற்சாலைகள்,உணவகங்கள், வாகன service station போன்ற இடங்களில் வெளியாகும் கழிவு நீர் பிரச்சினைகளிலிருந்து விடுபட வேண்டுமா?
Life Time Service Warranty.
Free water testing.
Freely available spare parts.
24 hours breakdown service.
நீரில் உள்ள பிரச்சினைகளின் தீர்வாக நாங்கள்....
SPECIAL OFFER
Smart RO
Rs.27,999/-
Dust Cover RO
Rs.27,999/-
Aqua RO
Rs.29,999/-
Nova RO
Rs.34,999/-
Hot & Normal RO
Rs.37,999/-
Industrial Water Treatment Plants
12 MONTHS WARRANTY
30LPH RO
Rs.52,999/-
60LPH RO
Rs.109,999/-
150LPH
Rs.239,999/-
250LPH
Rs.364,999/-
Water Treatment Chemicals and Equipments.
Design, Construction And Maintenance of Swimming Pool & Spa
Design, Construction and Maintenance of Wastewater Treatment Plants
Head Office:-No.341,K.K.S Road, Jaffna.
021 430 0044,076 666 5267
Branch:-Karadippokku Junction, Kilinochchi.
021 430 0045
Hotline:- 077 057 3684 , 077 473 9802

HONDA
மீண்டும் மானிப்பாயில்
ரஞ்சிற் மோட்டோர்ஸ்

யாழ் மக்களுக்காக
ரஞ்சிற் மோட்டோர்ஸ்
HONDA இணைந்து
வழங்கும் பண்டிகைக்கால
மாபெரும் சலுகைகள்

01.12.2019 – 15.01.2020 வரை எம்மிடம் மோட்டார் சைக்கிளினை கொள்வனவு செய்து குலுக்கல் முறையில் சோபா செற்றினை பெற்றிடும் வாய்ப்பினை பெற்றிடுங்கள்

(ரஞ்சிற் ரிப்பியரிங் & சேவிஸ் சென்டர்)

01.12.2012 முதல் கொண்டாவுடன் சேவை முகவராக இணைகின்றார்கள்
ரஞ்சிற் மோட்டார்ஸ் நிறுவனத்தினர்

எமது சேவைகள்
- HONDA மோட்டார் சைக்கிள் விற்பனை
- HONDA அசல் உதிரிப்பாக விற்பனை
- HONDA சேவிஸ் & மெக்கானிக்

[மோட்டார் சைக்கிள் விற்பனைக்குப் பிந்திய சிறப்பு சேவைகள், இலவச சேவைகள் மற்றும் உத்தரவாத சேவைகள்]



பண்டிகைக் கால சலுகைகள்

விலைக்கழிவு
தெரிவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்களுக்கு 15000/- வரை

லீசிங் மூலம் விசேட சலுகைகள்
- SLS தலைக்கவசம்
- ஜக்கெற்
- காப்புறுதி
- பதிவுக் கட்டணம்
- இலவச சேவைகள் 05
- இரண்டு வருட உத்தரவாதம்

காசு மூலமான சலுகைகள்
- SLS தலைக்கவசம்
- காப்புறுதி (3ம் நபர் காப்புறுதி)
- இலவச சேவைகள் 05
- இரண்டு வருட உத்தரவாதம்
- சிறப்பு பரிசில்கள்

சிறப்பு சலுகைகள்
எம்மிடம் பழைய மோட்டார் சைக்கிளைக் கொடுத்து புதிய மோட்டார் சைக்கிளினைப் பெற்றிடும் வசதி
(நிபந்தனைக்குட்பட்டது)

Ranjit Motors
(RRSC Motors Engineers)

Sales & Parts
No- 311/A, Jaffna Road, Manipay.
இல- 311/A, யாழ் வீதி, மானிப்பாய்.
021 492 7627, 021 225 5228

Service & Parts
No- 14 Suthumalai Road, Manipay
இல- 14 சுதுமலை வீதி, மானிப்பாய்.
021 492 7337, 021 222 3111

Mobile: 077 310 7549, 076 833 9898
E.Mail: rrscmanipay@gmail.com
F.Book: Honda Ranjit Motors

AJA2272(16/17)

அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

நியூரோன்
எலக்ரிக்கல்
NEWTONE ELECTRICAL

KEVILTON
Power to Innovate
S-lon
ORANGE ELECTRIC
KELANI CABLES
Fire Shield
Safety Forever...

மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.



இல.169,
சேர்.பொன் இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.

021 222 2037
021 222 2016

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இனிய புதுவருட நல்வாழ்த்துக்கள்




புதுப்பொலிவுடன்
உதயா
ஜுவல்லர்ஸ்

HAPPY
NEW YEAR
2020

அசல் 22 கரட்
தங்க நகைகளின்
தங்க மாளிகை



நகைப்பிரியர்களின் நந்தவனம்

உதயா ஜுவல்லர்ஸ்

79 G. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 222 4434, 021 221 6877

## பிறக்கும் புதுவருடம் அனைவருக்கும் சௌபாக்கியமாய் அமைய பிரார்த்திக்கின்றோம்

Reg.No.DS 882

# சசிகா லேணர்ஸ்

THE SASIKA DRIVING SCHOOL

Happy New Year 2020

## THE SASIKA LEARNERS

அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை

முறைமையான சாரத்தியத்தைக் கற்றுக்கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்

**தலைமைக் காரியாலயம்**
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

077 722 6247
021 221 7678
077 614 0361
sasikaLearners
sasikadrivingschool@gmail.com



**கிளைக் காரியாலயங்கள்:**

| | |
|---|---|
| வேலணை<br>வங்களாவடிச் சந்தி | 021 221 5472<br>070 301 3012 |
| மல்லாகம்<br>கே.கே.எஸ் வீதி. | 021 224 3393<br>070 301 3014 |
| சங்கானை<br>ஓடக்கரை வீதி. | 021 225 1664<br>070 301 3016 |
| பண்டத்தரிப்பு<br>கீரிமலை வீதி. | 021 225 2333<br>071 255 4135 |
| காரைநகர்<br>பழைய கண்டி வீதி. | 021 225 2454<br>070 510 2484 |
| பருத்தித்துறை<br>பருத்தித்துறை வீதி.<br>நெல்லியடி. | 021 226 0999<br>071 775 0999 |

**இப்பொழுது யாழ்.நகரின் மத்தியில்**
இல.821 C,
மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.
070 301 5004
021 222 8004

(முழுமையான சாரதி பயிற்சிகள் வழங்கப்படும்)



வாகன பயிற்சியாளர்களுக்கு நேர தாமதம் இன்றி பயிற்சி வழங்கப்படும்.
(கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியினை மேற்கொள்ளலாம்).

வாகன விபத்தைத் தவிர்ப்போம் உயிர்களைக் காப்போம்.

---

அனைவருக்கும் இனிய நத்தார் நல்வாழ்த்துக்கள்

கிளிநொச்சி, பரந்தனில்......

விசேட விலைக்கழிவு

# Star Rest 10%

## திருமண மண்டபம்

- இன்றில் இருந்து சகல விதமான வைபவங்களுக்கும் 10% விசேட விலைக்கழிவு 14.01.2020 வரை முற்கூட்டிய பதிவுகளுக்கு வழங்கப்படும்
- தங்களின் சகலவிதமான வைபவங்களுக்கும் தேவையான இலங்கை, தென்இந்திய, மற்றும் சைனிஸ் உணவு வகைகளை ஓடர்செய்து பெற்றுக்கொள்ளலாம்
- X Mas பண்டிகையை முன்னிட்டு "ஸ்பெசல் பிரியாணி" குடும்பமாக உண்டு மகிழ்ந்திட எம்மால் வழங்கப்படும் கீழ்க்காணப்படும் சிட்டையினைப்பெற்று தங்கள் வரவை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
(மதியம் 12.00 - பி.ப 3.00 மணி வரை)






- அதிநவீன வசதிகளுடனான Rooms மற்றும் kitchen வசதிகளுடன் கூடிய Apartment அத்துடன் Honeymoon packege உண்டு
- Rooftop & Garden தங்களது சகலவிதமான மாலை, இரவு வைபவங்களை கிளிநொச்சியின் எழில்மிகு மாலைக்காட்சியினை இரசித்தபடி உங்கள் மனதிற்கேற்றபடி கொண்டாடுவதிற்கான ஏற்ற இடம்

**T.P: 021 228 0555 / 077 231 5521**
**160th Mile Post, 5th Canal Lane, A9 Road, Paranthan**

## இன்றில் இருந்து விசேட விலைக்கழிவு... 14.01.2020 வரை

# இறையருள் நிறைந்த ஆண்டாக அமையட்டும்

மௌலவி சுப்யான் வாழ்த்து



இன்று மீண்டும் ஒரு புதிய ஆண்டினை வரவேற்கும் வாய்ப்பை இறைவன் நம் அனைவருக்கும் வழங்கியுள்ளான்.

இந்தப் புதிய 2020 ஆம் ஆண்டு நம் எல்லோருக்கும் சுபிட்சமும், மகிழ்ச்சியும், அமைதியும், சமாதானமும் நேர்வழியும் இறைஅருளும் நிறைந்த ஆண்டாக வேண்டும் என்பதே எனது பிரார்த்தனையாகும் இவ்வாறு தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் யாழ்ப்பாணம் கிளிநொச்சி அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபைத் தலைவரான மௌலவி சுப்யான்.

மலர்ந்திருக்கும் இவ்வாண்டில் இனமத வேறுபாடுகளைக் களைந்து மனிதன் என்ற ரீதியில் எல்லோரும் நாம் ஒருதாய் மக்கள் என்ற கண்ணோட்டத்தில் ஒற்றுமையுடனும் புரிந்துணர்வுடனும் விட்டுக் கொடுப்புடனும் சாந்தி சமாதானத்துடன் சகலசௌபாக்கியத்தையும் பெறுபேற்றுக்களையும் பெற்று வாழ்வதற்கு வாழ்த்துகின்றேன் என்று தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளார் அவர்.

# புது வாழ்வு உதயமாகட்டும்



மலரும் இந்தப் புத்தாண்டாவது எமக்கு வளமான நிம்மதியான வாழ்வை வழங்கும் என்ற ஒரு நம்பிக்கையில் அதை எதிர்கொள்கின்றோம். அது நிச்சயம் எம் அனைவருக்கும் நலத்தையம் வளத்தையும் வழங்கும் என்று நம்புவோம். இவ்வாறு தனது வாழ்த்துரையில் குறிப்பிட்டுள்ளார் சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணிகதேசிகர் குருக்கள்.

புவியின் சுற்றுவட்டப் பாதையில் ஒருசுற்று முடிந்து மறுசுற்று ஆரம்பமாகிறது. புத்தாண்டு நம் எல்லோர்க்கும் நலமும் வளமும் பெருக உதயமாகின்றது. ஒவ்வொரு ஆண்டும் பிறக்கும்போது நம் நம்பிக்கைகளும் உயர்ந்து கொண்டே வருகின்றன.

ஆனால் கழிந்து போகும் வருடம் எமக்கு ஏமாற்றத்தையே பரிசாக வழங்கி மறைகின்றது. எம் பெருமாட்டியின் பேரருட்திறத்தால் மலரும் இந்தப் புத்தாண்டில் புது வாழ்வு உதயமாகும் என்றும் எம் அனைவர்க்கும் நல்வாழ்வு மிளிரும் என்றும் அம்பிகையின் திருப்பாதங்களைச் சேவித்து ஆசி கூறி நிறைகின்றேன் என்று தனது வாழ்த்துரையில் மேலும் குறிப்பிட்டுள்ளார் வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தின் பிரதம குருவும், புற்றளை சித்தி விநாயகர் தேவஸ்தானத்தின் தலைவருமான சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணிகதேசிகர்.

# என் சமூகம் உனக்கு முன்பாகச் செல்லும்



'மோசே முனிவர், எகிப்திலே வேதனைப்பட்டுக் கொண்டிருந்த இஸ்ரவேல் மக்களைப் பாலும் தேனும் ஓடுகின்ற கானான் தேசத்துக்கு அழைத்துச் செல்கிறார்.

பாதித் தூரம் வந்தவுடன் பெரிய பிரச்சினைகளை அவர் எதிர் நோக்க வேண்டியிருந்தது.

இறைவனோடு முகம் முகமாய்ப் பேசினார். மக்கள் என்னை மதிக்க வேண்டுமென்றால் தேவரீர் உமது மகிமையைக் காண்பியும் என்றார். இறைவனோ அதற்குப்பதிலாக எனது நன்மைகளை உனக்குப் போதிப்பேன் என்றார். கடந்தகாலத்தில் நான் உனக்குக் காட்டிய அன்பையும் கிருபையையும் எண்ணிப்பார் எனது மகிமை விளங்குமென்றார்.

மோசே முனிவர் இரண்டாவதாக இறைவனை நோக்கி உமது வழிகளைக் காண்பியும்- என்றார்.

இறைவனோ எனது வழிகளை அதாவது நான் என்ன செய்யப் போகின்றேன் என்பதைக் கூற மாட்டேன். ஆனால் எனது சமூகம் உனக்குமுன்பாகச்செல்லும் என்ற வாக்குறுதியை அளிக்கிறார்.

மூன்றாவதாக மோசே முனிவர் இறைவனின் முகத்தைப் பார்க்க ஆசைப்பட்டார். இறைவனோ என் முகத்தை எவரும் பார்க்க முடியாது. நான் கிரியை செய்து போனபின் நானே அதைச் செய்தேன் என்று உணர்வாய் என்றார். இதனையே இயேசு பிரானும் ஒரு சந்தர்ப்பத்தில் நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய். இனிமேல் அறிவாய் என்றார்

2020 ஆம் ஆண்டுக்குள் பிரவேசித்துவிட்டோம் புதிய வருடத்தில் என்னென்னவெல்லாம் நமக்கு நடக்கப் போகின்றன என்று நாம் அறியோம்.

2019ஆம் ஆண்டில் பலவிதமான அனுபவங்களுக்கூடாக இறைவன் நம்மை வழிநடத்தினார். புத்தாண்டிலும் அவரின் அன்புக்கரங்கள் நம்மைத் தாங்கிச் செல்லும். இந்த நம்பிக்கையோடுபுதியவருடத்துக்குள்பிரவேசிப்போம்.

**கலாநிதி எஸ்.ஜெபநேசன்**
முன்னாள் பேராயர்
தென்னிந்தியத் திருச்சபை







# மலர்ந்துள்ள புத்தாண்டு சுபிட்சத்தின் ஆண்டாகும்

## ஜனாதிபதி வாழ்த்து



பொருளாதாரம், அரசியல், சமூக கலாசாரம் மற்றும் தொழிநுட்பம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் புதியதோர் யுகம் எமது தாய் நாட்டில் மலர வேண்டும் என சகல இலங்கையர்களும் எதிர்பார்த்திருக்கின்ற தருணத்திலேயே இந்தப் புத்தாண்டு பிறந்திருக்கின்றது.

அந்த வகையில் மலர்ந்துள்ள இந்தப் புத்தாண்டை புதிய அரசு 'சுபிட்சத்தின் ஆண்டாக' ஆக்கும் திடவுறுதிப்பாடு மற்றும் அர்ப்பணிப்புடனேயே வரவேற்கின்றது. இவ்வாறு தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ.

எமக்கே உரித்தான தொலைநோக்கினை கொண்டவொரு தேசமாக கடந்த காலத்தில் நாம் அடைந்த வெற்றிகள் ஏராளமானவை. அத்தகைய எமது தனித்துவ அடையாளங்களையும் திறன்களையும் நவீன தொழிநுட்பத்துடன் ஒன்றிணைத்து வெளிப்படுத்துவதன் ஊடாக சுபீட்சத்தை அடையும் அபிலாசையுடனேயே ஓர் அரசு என்ற வகையில் நாம் புத்தாண்டில் தடம் பதிக்கின்றோம்.

அத்தோடு தேசிய உணர்வுகளுக்கு முன்னுரிமையளிக்கும் பலமானதொரு பொருளாதாரம் நாட்டுக்குத் தேவையாகும். அதுவே சுயாதீனத்தை நோக்கிய எமது பயணத்தை மேலும் உறுதிப்படுத்தும். அதேபோன்று ஒழுக்கப் பண்பாடான சமூகத்தினால் பலப்படுத்தப்படும் பாதுகாப்பானதொரு தேசமே மக்களின் முதன்மையான எதிர்பார்ப்பாகும் என்பதையும் நான் அறிவேன். அத்தகையதொரு சமூகத்திலேயே தற்கால மற்றும் எதிர்கால இளம் தலைமுறையினரின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படும். வளர்ந்தவர்கள் என்ற வகையில் நாமும், பிறந்துள்ள இப்புத்தாண்டில் அந்த இலக்கினை நோக்கிப் பயணிப்பதற்கு உறுதியுடன் கைகோர்த்துக் கொள்வோம்.

நாட்டை நேசிக்கும் மக்களின் ஐக்கியத்துக்குக் கிடைத்த வெற்றியே இந்த புதிய அரசாங்கமாகும். புத்தாண்டு பிறப்புடன் மக்களின் மனங்களில் ஏற்பட்டுள்ள புத்துணர்ச்சியானது, புதியதோர் தேசத்தைக் கட்டியெழுப்பும் 'சுபீட்சத்தின் நோக்கு' செயற்திட்டத்தை இலகுபடுத்தும் என்பது எனது உறுதியான நம்பிக்கையும் பிரார்த்தனை யுமாகும். மலர்ந்துள்ள இந்த புத்தாண்டு அனைத்து இலங்கையர்களுக்கும் எனதன்பிற்குரிய பிள்ளைகளுக்கும் வளமான எதிர்காலத்தை உறுதிசெய்யும் ஆண்டாக அமைய எனது உளப்பூர்வமான நல்வாழ்த்துக்கள் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.








# நல்விடியல் பிறக்கட்டும்

## சரா எம்.பி வாழ்த்து

பிறந்துள்ள புத்தாண்டு அரசியல், பொருளாதாரம், வாழ்வாதாரம், கலை, கலாசாரம் மற்றும் ஆன்மிகம் என்று அனைத்துத் துறைகளிலும் நல்விடியலைத் தரட்டும் இவ்வாறு தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

தமிழர் தாயகம் பெரும் எதிர்பார்ப்புடன் 2020ஆம் ஆண்டை வரவேற்றது.

அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தில் காத்திரமான தீர்வு, காணி விடுவிப்பு, புதிய அரசமைப்பு நிறைவேற்றம், ஜனாதிபதித் தேர்தல் என்று எண்ணற்ற எதிர்பார்ப்புக்கள் கடந்த வருடத்தில் நிலவின.

ஆனால் அவ்வப்போது ஒருசில விடயங்களில் சாதகமான பதில்கள் இருந்தாலும் ஒட்டுமொத்தமாக நோக்கினால் திருப்தியடையும் வகையில் கடந்த வருடம் அமையவில்லை.

இந்த நிலையில் மாறாத எம் எதிர்பார்ப்புக்களுடன் புத்தாண்டை வரவேற்றுள்ளோம்.

இந்தப் புதிய வருடமாவது தமிழர்களின் எண்ணங்களையும், எதிர்பார்ப்புக்களையும், வேணவாக்களையும் நிறைவேற்றும் வகையில் அமையட்டும்- என்றுள்ளது. (ம)

HOTLINE 0777 17 35 17
IT மற்றும் ஆங்கிலம் இரட்டை டிப்ளோமா
TVEC APPROVED CENTRE
புதிய பிரிவுகள் ஆரம்பம்
28-12-2019 - (Sat)
2-1-2020 - (Thu)
9 am or 3pm
O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான
IT Courses
Dip.in Information Teachnology
Office Automation
PC Application
Microsoft Office
Web Designing
Hardware,Mulitmedia,
Auto CAD,Java,C++,PHP
DMI COMPUTER EDUCATION
TVEC Reg.No.:P25/0056
NVQ COURSES
ICT -Full Time (Level 4)
CAA -Full/Part Time
புதிய பிரிவுகள் 2/1/2020 ஆரம்பம்
● இலங்கை மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டது.
● NVQ சான்றிதழ்களை வழங்கிவரும் ஒரேஒரு தனியார் கணினி நிறுவனம்
யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்
DIPLOMA IN ENGLISH
SPOKEN ENGLISH
Reading Writing Listening Speaking
Foundation ENGLISH
Diploma in Fluent English Part-I
Diploma in Fluent English Part-II
சர்வதேச ஆங்கிலப்பரீட்சைகள்
IELTS
# Unique Test Tips
# 40 hrs with free 4mock exam
# Latest course Material ( Book 12)
IELTS Life Skills
திருமணம் செய்து UK செல்வோருக்கானது
* DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, கன்னாதிட்டி வீதி (சயன்ஸ்ஹோல் அருகாமை) 021 222 4403
நெல்லியடி 021 226 2470 0777577333
சாவகச்சேரி 021 227 0775 0777227074
சுன்னாகம் 021 224 1970 0776032300
சண்டிலிப்பாய் 021 225 6665 0761354503
கிளிநொச்சி 021 228 5655 0776398096

அனைவருக்கும் புதுவருட நல்வாழ்த்துக்கள்
செல்வி நகைஅகம்
CHELVI Nakai Agam
தங்கப்பவுண் நகை வியாபாரம்
Manufacturers of Gold Jewels
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்துகொடுக்கப்படும்.
T.P: 021 222 9441
1/3 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Kasthuriar Road, Jaffna.

YAMAHA காட்சியறை
Fascino Scooter
FZ-S V.3
பிறக்கும் புதுவருடம் அனைவருக்கும் சௌபாக்கியமாய் அமைய பிரார்த்திக்கின்றோம்
2020 Happy new year
காட்சியறை:
62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
077 554 5843 | 077 662 3824

# அமைதியும் அன்பும் சிறந்து விளங்கட்டும்

## ஆறு.திருமுருகன் வாழ்த்து



எங்கள் நாட்டில் அமைதியும், அறமும், அன்பும் சிறக்க வேண்டும் என்று மலர்ந்துள்ள இந்தப் புதிய ஆண்டில் வாழ்த்துகிறேன் இவ்வாறு தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர்கலாநிதிஆறு.திருமுருகன்.

புத்தாண்டை முன்னிட்டு அவர் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இறையருளால் அனைவரும் புதிய ஆண்டில் சிறப்பாக வாழவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திப்போம். எம்மை வாழ்விக்கும் நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகிய பஞ்சபூதங்கள் இவ்வுலகத்துக்குச் சாதகமாக அமையவேண்டும் என்று பிரார்த்திப்போம். மக்களை வேதனைப்படுத்தும் சகல நோய்களுக்குமான மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு, அனைவரையும் காப்பாற்றுவதற்கு வாய்ப்பு ஏற்படவேண்டும் என வேண்டிப் பிரார்த்திப்போம். உலகம் முழுவதும் போர் இல்லாத மனிதநேயம் சிறக்க வேண்டிப் பிரார்த்திப்போம்.

கடவுள் எமக்குத் தந்த ஆறறிவைப் பயன்படுத்தி நாமும் வாழ்ந்து, பிறரையும் வாழவைப்போம். கோபத்தை வளர்ப்பதை நிறுத்தி அனைவரிடத்திலும் அன்பைப் பெருக்குவோம். பிறரை குறைகாண்பதை விட எம்மிடம் உள்ள தவறுகளை உணர்ந்து நாம் திருந்துவோம். இந்த அழகான உலகத்தில் பிறந்த நாங்கள் அழகாக வாழக் கற்றுக் கொள்வோம். ஆலயங்கள் தோறும் அறச்சிந்தனைகளைப் பரப்புவோம். வீடுகளில் இரக்கத்தையும், கருணையையும் வளர்ப்போம். பள்ளித்தலங்களில் எதிர்காலச் சந்ததிக்கு கல்வியோடு பண்பையும் வளர்ப்போம். வீண்விரயங்களைத் தவிர்ப்போம். ஆடம்பரங்களை குறைத்து ஆக்கபூர்வமான காரியங்களுக்குச் செலவுசெய்வோம். கடந்து செல்லும் ஆண்டில் நமக்குக் கிடைத்த நன்மைகள் குறித்து கடவுளுக்கு நன்றி சொல்வோம். கடந்து செல்லும் ஆண்டில் எம்மை விட்டு இயற்கை எய்தியவர்களுக்காக நன்றியோடு பிரார்த்தனை செய்வோம். நாம் விட்ட தவறுகள் புதிய ஆண்டில் தொடராமல் இருக்க திட்டமிடுவோம். புதிய ஆண்டு எம்மண்ணில் அனைவருக்கும் மகிழ்ச்சிக்குரிய ஆண்டாக அமைய, இறைவனை வேண்டி, அனைவருக்கும் இதயபூர்வமான நல்லாசிகளையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்து அமைகிறேன்- என்றுள்ளது.

அனைவருக்கும் வீனஸ் விஷேட வைத்தியசாலையின்
" புதுவருட நல்வாழ்த்துக்கள் "

HAPPY NEW YEAR 2020

**வீனஸ்**
**விசேட வைத்தியசாலை**
**Venus Speciality Hospital (Pvt) Ltd**
136, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 4172 / 021 222 8470

**2020 ஆம் ஆண்டு புதுவருடத்தை முன்னிட்டு "வீனஸ் இன் விசேட சலுகைகள்"**

- 01.01.2020 இல் இருந்து எமது மக்களுக்கான விசேட சலுகையாக அனைத்து வைத்திய நிபுணத்துவ சேவைகளுக்கும் யாழ் நகரிலேயே மிகக் குறைந்த கட்டணமாக **1100/=** மட்டுமே அறவிடப்படும்.
- தற்போது எம்மால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட சர்வதேச தரம் வாய்ந்த (International Standard) மொடியுலர் சத்திர சிகிச்சைக் கூடத்தில் (Modular Operation Theatre) அனைத்து சத்திர சிகிச்சைகளுக்கும் **விசேட சலுகைக் கட்டணம் (Discount) வழங்கப்படும்.**
- வார்ட் (Word) அனுமதிகள், சத்திர சிகிச்சைகள் அனைத்திற்கும் **Admission Fees இலவசம்.**
- வார்ட் (Word) அனுமதிக்கான அறை வாடகைகள் (Room Charges), AC, Non AC, Luxury Room என்பவற்றுக்கு **விசேட கழிவுகள்** வழங்கப்படும்.

**மேற்குறித்த சலுகைகள் "2020" புதுவருட சலுகைகளாக குறிப்பிட்ட காலத்திற்கு எமது நிர்வாகத்தால் வழங்கப்படும் என்பதனை அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.**

**வைத்திய நிபுணத்துவ சேவைகள் (Channel Specialist Services)**

| | |
|---|---|
| 01. பொது வைத்தியம் | 12. நரம்பியல் சிகிச்சை |
| 02. பொது சத்திர சிகிச்சை | 13. புற்று நோயியல் சிகிச்சை |
| 03. கண் வைத்தியம் | 14. நீரிழிவு நிபுணத்து வைத்தியம் |
| 04. என்பு முறிவு நெரிவு வைத்தியம் | 15. சிறுநீரக, சனனி தொகுதி வைத்தியம் |
| 05. நரம்பியல் அறுவை சிகிச்சை | 16. ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை |
| 06. தோல் வைத்தியம் | 17. சுவாச நோய் சிகிச்சை |
| 07. மன நல சிகிச்சை | 18. குழந்தை இருதய நோய் சிகிச்சை |
| 08. மூட்டு வாதவியல் வைத்தியம் | 19. அகஞ்சுரப்பியல் வைத்தியம் |
| 09. காது, மூக்கு, தொண்டை வைத்தியம் | 20. முக சீரமைப்பு வைத்தியம் |
| 10. மகப்பேற்று பெண் நோயியல் வைத்தியம் | 21. இரைப்பை, குடல் வைத்திய சிகிச்சை |
| 11. இதய நோய் வைத்தியம் | |

**அடிப்படை மற்றும் நவீன மருத்துவ சேவைகள்**

| | |
|---|---|
| 01. 24 மணிநேர வெளிநோயாளர் பிரிவு OPD | 07. இயன் மருத்துவ பிரிவு |
| 02. 24 மணிநேர வார்ட் அனுமதி | 08. அவசர சிகிச்சைப் பிரிவு E.T.U |
| 03. நவீன "மொடியுலர் (Modular)" சத்திர சிகிச்சைக் கூடம் | 09. என்டஸ் கோப், கொலனஸ்கோப் பிரிவு |
| 04. மருத்துவ ஆய்வுகூட வசதி | 10. பற்சிகிச்சை நிலையம் |
| 05. "X" கதிர் பட பிரிவு | 11. ஈ.சி.ஜி |
| 06. அதி தீவிர சிகிச்சைப் பிரிவு ICU | 12. ECHO Cardiogram |
| | 13. E.T.T |

British BUSINESS COLLEGE
Where Students Come First

**BBCஇன் புதிய அனுமதிகள்**

BBC பாலர் பாடசாலையின்
20ஆவது வருடத்தில் சிறந்த கல்விச்சேவையுடன்
2020ஆம் ஆண்டிற்கான அனுமதிகள்

BBC Early Learning Schools

சர்வதேச தரத்தினாலான **Canada** கல்லூரியின்
பயிற்றுவிப்பாளர்களினால்
பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்கள்

20வது ஆண்டை நோக்கி BBC

- சர்வதேச அங்கீகாரம் பெற்ற நவீன கல்வித்திட்டம்
- ஆங்கிலமொழி மூல கற்கை வகுப்புக்கள்
- தமிழ் கட்டாய பாடம்
- மாதந்தோறும் செயற்பாட்டுத் திறனையும் அறிவையும் வெளிக்கொணரும் விஷேட சமூகம் சார் நிகழ்வுகள்
- விளையாட்டுடன் கூடிய கற்கைநெறிகள்

**2 முதல் 5 வயது குழந்தைகளுக்கான கற்கைநெறிகள்**

| பிரிவு | Play Group | Montessori | Pre School |
|---|---|---|---|
| வயது | 2+ முதல் 3 வரை | 3+ முதல் 4 வரை | 3+ முதல் 5 வரை |
| காலம் | 1 வருடம் | 1 வருடம் | 1 வருடம் |




- வருடத்தின் எந்த மாதத்திலும் குழந்தைகளை சேர்க்கமுடியும்
- கற்கை முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

வளாகங்கள்
நல்லூர் | யாழ்ப்பாணம் | மானிப்பாய் 1 | மானிப்பாய் 2 | சங்கானை
அளவெட்டி | மல்லாகம் | கோப்பாய் | பருத்தித்துறை | சாவகச்சேரி

British Business College
077 408 3656 / 077 468 2951

**congratulations!**

**British Business College confralates our Pre - School & NUrsery Students who have successfully completed the Pre - School - 2019**



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/நெ.மெ.மி.த.க.பாடசாலை மாணவனும்,
யோகேஸ்வரன் - பகீரதி தம்பதிகளின்
தவப்புதல்வனுமான

Congratulations **யோ.ஜசிந்தன்** Congratulations



**2019 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 176 புள்ளிகளைப்** பெற்ற இவரது கல்விப் பயணத்தில் துணையாக இருந்து வெற்றியிட துணைபுரிந்த மண்டலாய் பிள்ளையாரையும், நெல்லண்டை வட பத்திரகாளியையும் வேண்டிக் கொண்டு ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய பாடசாலை சமூகம், தனியார் கல்விச் சமூகத்தினருக்கும் எமது பாராட்டுக்களும் நன்றிகளும்.

*வாழ்த்துவோர்: மாமிமார், சித்தப்பாமார், சித்தி, தங்கை, அப்பா, அம்மா*

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

மண்ணில் 22 - 11 - 1954



விண்ணில் 04 - 12 - 2019

## அமரர் சித்தன் பரமகுரு

கடந்த 04.12.2019 புதன்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் (03.01.2020) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வு அன்று நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடை பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*குறிப்பு : அழைப்பு கிடைக்கப் பெறாதவர்கள் தயவு செய்து இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு மிகவும் அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.*

**குடும்பத்தினர்.**

**முரசொலி வீதி,**
**கதிரிப்பாய்,**
**அச்சுவேலி.**

**மகன் பரமகுரு சுபேந்திரன்**
**077 844 5239 (தொம்மை)**
**மருமகன் (வதன்) 077 0537883**

(CS 30271)(04.17)


# BCAS CAMPUS

BRITISH COLLEGE OF APPLIED STUDIES

After A/L's

PLATINUM PARTNER No.1 BTEC Centre in Sri Lanka

இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

2020

நிறைமிகு வளம்,
மிகுந்த சந்தோசம்,
தரமிகு கல்வி,
சிறந்த வேலை,
வாழ்க்கையில் வெற்றி,
இவையெல்லாம்
இப்புத்தாண்டில் உங்களுக்கு
நல்குவன ஆகுக...

MATHU 0777 102131
THANU 0777 692318

INTAKE NOW ON

Pearson · BTEC Approved Centre · Southampton SOLENT University · University of East London · University of WOLVERHAMPTON · RICS · CIOB

| | | |
|---|---|---|
| HND — **BUSINESS MANAGEMENT MARKETING \| HRM** — Leading to **BA (Hons)** from the UK Universities | HND — **QUANTITY SURVEYING** — Leading to **BSc (Hons)** from the UK Universities | HND — **COMPUTING** — Leading to **BSc (Hons)** from the UK Universities |
| HND — **BIOMEDICAL SCIENCE BIOTECHNOLOGY** — Leading to **BSc (Hons)** from the UK Universities | HND — **CIVIL ENGINEERING** — Leading to **BEng / BSc (Hons)** from the UK Universities | LLB — **LAW** — Leading to **LLB (Hons)** from the UK Universities |

UGC Recognized · TVEC Approved

021 221 9910 · www.bcas.lk · BCAS Jaffna Campus, #. 16, Point Pedro Road, Jaffna.

2  20

# நூற்றாண்டின் மேன்மையுடன் புத்தாண்டை ஆரம்பிப்போம்

நூறாண்டு காலமாக இலங்கை மக்களின் நம்பிக்கைக்குரிய வங்கியாக
திகழ்ந்த நாம், மேலும் பல நூறாண்டு காலத்திற்கு
உங்கள் எதிர்காலத்தை வளமாக்க
அர்ப்பணிப்புடன் செயற்படுவது,
உங்கள் நலனே எங்கள் நோக்கம் என்பதனால் ஆகும்.

**அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!**


நூற்றாண்டு கால நம்பிக்கையுடன் வளமான எதிர்காலத்தினை நோக்கி

100 YEARS

COMMERCIAL BANK

உங்கள் நலனே எங்கள் நோக்கம்

# மரண அறிவித்தல்



## மயில்வாகனம் தனபாலசிங்கம் (ரக்ரர் ராசா)

கோண்டாவிலை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் தனபாலசிங்கம் (ரக்ரர் ராசா) நேற்று (31.12.2019) செவ்வாய்க்கிழமை காலை 10.45 மணியளவில் இயற்கை எய்திவிட்டார். அன்னாரின் பூதவுடல் இன்று (01.01.2020) புதன்கிழமை காலை 8.30 - 12.30 மணிவரை கோம்பயன்மணல் இந்துமயானத்திற்கு அருகில் இன்பன் அந்தியகால மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்படும். அவரது ஈமக்கிரியைகள் கனடாவில் நடை பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : மனைவி (தவம்)

## பச்சிலைப்பள்ளி பிரதேசசபை பளை கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2020

பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் அதிகாரத்திற்குட்பட்ட கீழ்க்காணும் கடைகளை 15.01.2020 முதல் 31.12.2020 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் எம்மால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி:- 01.01.2020 முதல் 14.01.2020 நப 12.00 மணி வல்ரயான அலுவலக நேரம்.

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி :- 14.01.2020 நண்பகல் 12.00 மணி வரை

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி:- 14.01.2020 நண்பகல் 12.00 மணி.

**இயக்கச்சி சந்தை வளாக கடைகள்**

| இல | கடை இல | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்விவைப்புபணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | VS- 03 | 15,000.00 | 3,000.00 | 2000.00 |
| 02 | VS - 04 | 15,000.00 | 3,000.00 | 2000.00 |
| 03 | PS -04 | 30,000.00 | 3,000.00 | 2000.00 |
| 04 | PS -06 | 24,000.00 | 3,000.00 | 2000.00 |
| 05 | PS -07 | 24,000.00 | 3,000.00 | 2000.00 |
| 06 | PS -08 | 21,000.00 | 3,000.00 | 2000.00 |
| 07 | PS -09 | 21,000.00 | 3,000.00 | 2000.00 |
| 08 | PS -10 | 21,000.00 | 3,000.00 | 2000.00 |
| 09 | PS -11 | 19,200.00 | 3,000.00 | 2000.00 |
| 10 | PS -12 | 19,200.00 | 3,000.00 | 2000.00 |
| 11 | PS -13 | 19,200.00 | 3,000.00 | 2000.00 |
| 12 | PS -14 | 19,200.00 | 3,000.00 | 2000.00 |

**நிபந்தனைகள்**

01. கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை/ செல்லுபடியான கடவுச்சீட்டு/ செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் சமூகமளித்தல் வேண்டும்.
02. கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "செயலாளர் பச்சிலைப் பள்ளி பிரதேசசபை பளை" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி" என்ற முகவரிக்கு 14.01.2020 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
03. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் படிவம் வழங்கப்படமாட்டாது.
04. கேள்வி நிபந்தனை அறிவுறுத்தலுக்கமையாத கேள்விக் கோரிக்கையை நிராகரிக்கவும் எந்த ஒரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ செயலாளருக்கு பூரண அதிகாரமுண்டு.
05. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்
06. கேள்விப்பத்திரங்களை கீழ்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணமும் செலுத்தி பிரதேச சபையின் தலைமைக் காரியாலயத்தில் மேற்குறித்த காலத்திற்குள் பெற்றுக்கெள்ளல் வேண்டும்.
07. தெரிவு செய்யப்படும் கேள்விக்தாரர் கேள்வித்தொகையின் 1/3 ஒரு பகுதியை முழுமையாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.
08. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கெள்ளலாம்

VS-03 , VS-04 ஆகிய கடைகள் மரக்கறி வியாபாரத்திற்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.

**சுப்பிரமணியம் சுரேன்**
**தவிசாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை – பளை.**

**01.01.2020**

## டிராக்டர் தடம்புரள்வு: எண்மர் படுகாயம்

தார்ப் பரல்கள் மற்றும் தொழிலாளர்களை ஏற்றிச்சென்ற உழவியந்திரம் ஒன்று பொன்னாலைச் சந்தியில் தடம் புரண்டதில் 8 பேர் காயமடைந்தனர். அவர்களில் இருவர் கடும் காயங்களுக்கு உள்ளாகினர். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை நடந்துள்ளது.

காரைநகரில் வீதி திருத்தும் பணியில் ஈடுபடும் தொழிலாளர்கள் உழவியந்திரத்தில் 10 தார் பரல்களை ஏற்றுக் கொண்டு சென்றுள்ளனர். உழவியந்திரப் பெட்டியில் தொழிலாளர்களும் இருந்துள்ளனர்.

வேகமாகப் பயணித்த உழவியந்திரம் பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய வீதியூடாகச் சென்று பொன்னாலைச் சந்தியால் காரைநகர் வீதிக்கு திரும்ப முற்பட்டபோது உழவியந்திரப் பெட்டி உழவியந்திரத்தை விட்டு தனியாகக் கழன்று தடம் புரண்டது. அதில் பயணித்தவர்கள் தூக்கி வீசப்பட்டதுடன், உழவியந்திரப் பெட்டிக்குள்ளும் சிக்கிக் கொண்டுள்ளனர். பெட்டிக்குள் சிக்கியவர்கள் கடும் முயற்சியின் பின்னர் மீட்கப்பட்டனர். காயமடைந்தவர்கள் உடனடியாக மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் இருவர் காரைநகர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். மூளாய் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டவர்கள் பின்னர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

(எ-50)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு | தோற்றம் | மறைவு |
|---|---|---|---|
| 06.10.1994 | 01.01.2018 | 25.07.1983 | 01.01.2018 |

**அல்பிரட் ரவிராஜ்** **ராசு சுதன்**

உங்களது அன்பான பேச்சும் குறும்புத்தனமான செயலும்
என்றும் உங்கள் நினைவுகளைத் தந்து கொண்டிருக்கின்றன
காலத்தின் செயல்களாய் கண்சிமிட்டும் நொடிக்குள்
எம்மை விட்டுச் சென்று விட்டீர்கள்.
காலங்கள் கடந்து சென்றாலும் கடைசி வரை உம் நினைவு தொடரும்.

கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 10 . 10 . 1951



ஆண்டவன் திருவடியில் 30 . 12 . 2019

## திருமதி இந்திராணி அருந்தவராஜா

யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வவுனியா ஹொறவப்பொத்தான வீதி சின்னப்புதுக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திராணி அருந்தவராஜா அவர்கள் கடந்த (30.12.2019) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜகோபாலசாமி ருக்குமணி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும் இளவாலையை சேர்ந்த க. அருந்தவராஜா (மேழிக்குமரன்) வின் அன்பு மனை வியும் திருமதி கமலாவதி காலஞ்சென்ற நவரட்ணம் மற்றும் திருமதி சரோஜினி, செல்வராசா, ரகுபதி, ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராசா, மற்றும் திருமதி ஜெயராணி, திருமதி கலாராணி, மோகனராசா, திருமதி லதாராணி ஆகியோரின் அண்ணியும், தியாகராசா, அருணகிரிநாதன், திருமதி கலைவாணி, (இராசாத்தி), ஜீவநாதன், ஜெயநாதன், திருமதி சீதாதேவி, கமலநாதன், லீலாவதி, ஆகி யோரின் ஒன்றுவிட்ட சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.01.2020) வியாழக்கிழமை காலை 8.00மணியளவில் அன்னாரின் வவுனியா இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வெளிக்குளம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல21 ஹொறவப்பொத்தான வீதி
சின்னப்புதுக்குளம், வவுனியா
077 424 8262

தகவல் : க.அருந்தவராஜா (மேழிக்குமரன்)
கணவர்

# ஓராண்டு நினைவஞ்சலி



## அமரர் சபாரட்ணம் சிறீகரன்

BSc (Agriculture) Peradeniya.
P.G.D.E (Jaffna)

இளைப்பாறிய ஆசிரியர் (உயிரியல்)
யா/ பரியோவான் கல்லூரி

தோற்றம் 04.01.1953 — மறைவு 12.01.2019

எக்கெல்லாம் நல்வழி காட்டி நல் ஆலோசனை வழங்கி
நல் ஆசிரியராக சிறந்த மாணவர்களை உருவாக்கிய
எம் அன்பு குடும்ப விளக்கே!
நீங்கள் எம்மை விட்டு நீங்கி ஓர் ஆண்டு போனதை
நம்ப முடியவில்லை நீங்கள் மறையவில்லை
இன்றும் எம் கூடவே இருக்கின்றீர்கள்
என்றென்றும் எம்முடனே வாழ்கின்றீர்கள்
உங்கள் நினைவுகளோடு நாம்...
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

(CS/30270)(11,17) **குடும்பத்தினர்.**

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை – பளை
## பளை பேருந்து தரிப்பிடத்திற்கு மேலுள்ள கடைகளை நீண்ட கால குத்தகைக்கு வழுங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2020

பளை பஸ் தரிப்பிடத்திற்கு மேலே அமைந்துள்ள கீழ்வரும் கடைகளினை 01.02.2020 ஆம் திகதியி லிருந்து நீண்டகால குத்தகைக்கு வழுங்குவதற்கு எம்மால் கேள்விகள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி | :- | 01.01.2020 தொடக்கம் 13.01.2020 பிற்பகல் 2.00 மணிவரை (அலுவகை நேரம்) |
| கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி | :- | 13.01.2020 பிற்பகல் 2.00 மணி |
| கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி | :- | 13.01..2020 பிற்பகல் 2.00 மணி |
| கேள்வி திறக்கப்படும் இடம் | :- | பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம். |

பளை பேருந்து தரிப்பிடத்திற்கு மேலுள்ள கடைகள்

| இல | கடை இல | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்விவைப்புபணம் (மீளளிக்கக்கூடியது | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | BUS - 01 | 336,000.00 | 33,600.00 | 2000.00 |
| 02 | BUS - 02 | 336,000.00 | 33,600.00 | 2000.00 |
| 03 | BUS - 03 | 570,000.00 | 57,000.00 | 2000.00 |

**நியந்தனைகள் :-**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச் சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமூகமளிக்கவேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை பளை" என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிரந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிரந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி" என்ற முகவரிக்கு 13.01.2020 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
04. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.
05. மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்தவேண்டும் குறித்த மாத வாடகைப்பணத்தினை அடுத்த மாதம் 05 ஆம் திகதிக்குள் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளவேண்டும் தவறும் பட்சத்தில் அதற்கான மாதக் கட்டணத்துடன் மாதாந்தக் கட்டணத்தின் 10% தண்டமாக அறவிடப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும். டிசம்பர் மாதத்திற்குரிய வாடகை பணத்தினை டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தவேண்டும்.
06. கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித் தொகையினை முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகொள்ளவேண்டும்.
07. சித்திரகுத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
08. சித்திரக குத்தகைதாரர் பாதுகாப்பு வைப்புபணமாக 03 மாத கால வாடகை தொகையினை முற்பணமாக செலுத்தவேண்டும்.
09. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
10. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளர்/செயலாளருக்கு உண்டு.
11. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**சுப்பிரமணியம் சுரேன்**
**தவிசாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை – பளை.**
**01.01.2020** (in.12151) (13.17)

## பொது மக்களுக்கான அறிவித்தல்

யாழ் மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் வாழும் பொது மக்கள் தங்கள் அன்றாட பயன்பாட்டில் சேகரிக்கப்படும் உக்கமுடியாத பிளாஸ்ரிக், பொலித்தீன், கண்ணாடிப்பொருட்கள் மற்றும் இலத்திரனியல் கழிவுகளை உரிய முறையில் வகைப்படுத்தி கீழ்வரும் விபரங்கள் அடங்கிய நிலையங்களில் ஒப்படைக்கமுடியும்.


| இடம் | நாட்கள் | நேரம் |
|---|---|---|
| சங்கிலியன் வீதியில் உள்ள நல்லூர் பிரட்டு அலுவலகம். | திங்கள் - வெள்ளி<br>சனிக்கிழமை | 6.00-14.00<br>6.00-11.00 |
| கனகரத்தினம் வீதியில் உள்ள அரியாலை பிரட்டு அலுவலகம். | திங்கள் - வெள்ளி<br>சனிக்கிழமை | 6.00-14.00<br>6.00-11.00 |
| கே.கே. எஸ் வீதி தட்டாதெரு சந்தியில் உள்ள வண்ணார் பண்ணை பிரட்டு அலுவலகம். | திங்கள் - வெள்ளி<br>சனிக்கிழமை | 6.00-14.00<br>6.00 - 11.00 |
| கடற்கரை வீதியில் உள்ள பாசையூர் பிரட்டு அலுவலகம். | திங்கள் - வெள்ளி<br>சனிக்கிழமை | 6.00-14.00<br>6.00-11.00 |
| கடற்கரை வீதி நாவாந்துறை சந்தையில் உள்ள நாவாந்துறை பிரட்டு அலுவலகம். | திங்கள் - வெள்ளி<br>சனிக்கிழமை | 6.00-14.00<br>6.00-11.00 |
| கஸ்தூரியார் வீதியில் உள்ள பசார் பிரட்டு அலுவலகம். | திங்கள் - வெள்ளி<br>சனிக்கிழமை | 6.00 - 14.00<br>6.00 - 11.00 |
| பிரதான வீதி மடத்தடியில் உள்ள குருநகர் பிரட்டு அலுவலகம். | திங்கள் - வெள்ளி<br>சனிக்கிழமை | 6.00 - 14.00<br>6.00 - 11.00 |
| காரைநகர் வீதி காக்கைதீவு மீள் சுழற்சி நிலையம். | திங்கள் - வெள்ளி<br>சனிக்கிழமை | 6.00 - 14.00<br>6.00 - 11.00 |

**கௌரவ முதல்வர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021 493 1111

## மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 02 . 1947



மறைவு 29 . 12 . 2019

## வல்லிபுரம் கைலேஸ்வரன்

**(ஓய்வு நிலை அதிபர்- யா/ சாவகச்சேரி இந்து ஆ.பாடசாலை)**

நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கைலேஸ்வரன் (ஓய்வுநிலை அதிபர்- யா/ சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை) 29.12.2019 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் -கண்மணி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - ஞானம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், கருணாகரன், காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் இந்திரஜோதி, சந்திரஜோதி,மங்களஜோதி, குமரேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், வனிதாதேவியின் அன்புக் கணவரும், சந்திரலதா (ஆசிரியை - யா/கைதடி நுணாவில் G.T.M.S), நிர்மலன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிமலராங்கன் (ஆசிரியர் - கிளி/ பளை மத்திய கல்லூரி), பிரதீபா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹரிதர்சன்,கவினேஸ், கவிநயா ஆகியோரின் அன்புப் பேரனும், இந்திராதேவி, சோமாவதி, மல்லிகா, காலஞ்சென்ற சிவகோசரி மற்றும் சண்முக நாதன், அற்புதநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், தயானந்தசோதியின் சகலனும், மனோகரன், நிரஞ்சன், கோபிகாயதுர்சனா ஆகியோரின் பெரியப்பாவும், கிருபாகரன், கிருபாகினி ஆகியோரின் சித்தப்பாவும், சோபனா, அனுஷா, ஜனகன், தேவகி, சஜேந்திரன், கிரிஷாந்தன், நிவேதா, அருணேஸ் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.01.2020) வியாழக்கிழமை முற்பகல் 8 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 11 மணியளவில் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**A9 வீதி,**
**நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.** (IN/12150)(11,17)

**தகவல்:-**
**குடும்பத்தினர்.**

# நினைவஞ்சலி

மறைவு 01 • 01 • 1985



மறைவு 24 • 04 • 1987

## திரு. திருமதி ஏபிரகாம் மாணிக்கம்

(6/1 மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம்)
(முன்னை நாள் சிறைச்சாலைகள் மேற்பார்வையாளர் - வெலிக்கடை/ போஹம்பரை / யாழ்ப்பாணம்)

தெய்வங்களே உங்கள் பாதம் பணிந்து ஆசி வேண்டுகின்றோம்.

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(CS/30272)(11,17)

# 77 ஆவது பிறந்ததின வாழ்த்து

அமரர்

## ஆறுமுகம் இராஜகோபால்

(செம்பியன் செல்வன்)

மண்ணில் 01.01.1943 மண்ணுள் 20.05.2005



மண்ணில் தமிழ் தளைக்க பசளையாய் வாழ்ந்து
மனிதத்தை நேசித்த நாட்டுப்பற்றாளனை
- மண்ணுக்குள் சென்று
மண்ணுக்குள் சென்றும் உன்சாம்பலை
- உரமாக்கி இருப்பீர்
பதினைந்து வருடங்களாய் உங்கள் கனவு
- நினைவுகளை சுமந்து நிற்கும்

இ. புவனம், இ.இராகுலன்.
No. 10, புதுவீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.

# வேலையாள் தேவை

திருநெல்வேலிப் பகுதியில் அமைந்துள்ள கடல் உணவுகள்(மீன் வகைகள்) விற்பனை நிறுவனத்துக்கு

1) விற்பனை செய்வதற்கு அல்லது காசாளர் ஆண்/பெண் தேவை
2) மீன் வகைகள் வெட்டி பொதி செய்வதற்கு ஆண்/பெண் தேவை

**075 36 19 618** (J/10982)

தூர இடம் இருப்பவர்களுக்கு தங்குமிட வசதி மற்றும் உணவு வழங்கப்படும்

# அறிவித்தல்

01.01.2020 ஆம் திகதி நடத்தவிருந்த தெல்லிப்பழை பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தின் மாபெரும் அதிர்ஷ்ட லாபச்சீட்டு 2019 இன் அதிர்ஷ்டம் பார்க்கும் நிகழ்வானது தவிர்க்க முடியாத காரணத்தினால் 05.02.2020 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனை சகலருக்கும் அறியத் தருகின்றோம்.

(J/10981)

தலைவர்,
நலன்புரிச் சங்கம்

# அறிவித்தல்

**முல்லைத்தீவு மாவட்ட பொதுவைத்தியசாலை(மாஞ்சோலை) அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவும் - 2020**

**காலம் : 04.01.2020 காலை 09.00 மணி**
**இடம் : மாவட்ட பொது வைத்தியசாலை கேட்போர்கூடம்**

மேற்படி விடயதானத்தில் ஆர்வம் உள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர்
வைத்தியசாலைஅபிவிருத்திச் சங்கம்
மா.பொ.வை. முல்லைத்தீவு

# வாடகைக்கு

யாழ்ப்பாணம் கண்டி வீதி. அரியாலையில் 2AC Rooms உட்பட 9Rooms A/Bathrooms 4 வாகனத்தரிப்பிட வசதிகளுடன் வாடகைக்குண்டு. (IN 14138)(14.17)

**077 712 6859**

# ஆங்கில மொழி மூலம் வீடுகளுக்கு வந்து கற்பித்தல்

ஆங்கிலம் - சகல தரங்களுக்கும்
கணக்கீடு - Gr 10,11,12,13
புவியியல் / குடியுரிமை - Gr 6,7,8,9,10,11

**077 331 6402**

# நாகபூஷணி திருமண சேவை

இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

மணமக்கள் ஜாதகங்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளன. நீங்கள் விரும்பும் மணமக்களை உடன் பொருத்தம் பார்த்துத் தெரிவு செய்து தரப்படும்.

257, பலாலி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
021 222 9306, 077 138 7596,
071 999 9306 (CS/10978)(11,17)

# மோட்டார் வாகன உதிரிப்பாக விற்பனையாளர் தேவை

K.K.S வீதியில் தட்டாதெருவுக்கு அருகாமையில் ஜனவரி மாதம் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள கடை ஒன்றுக்கு இரு சக்கர மோட்டார் (MOTOR BIKES) உதிரிப்பாகங்கள் தொடர்பான சிறந்த அறிவும் அனுபவமுடைய விற்பனையாளர் ஒருவர் தேவை.
(யாழ் நகரை சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.)

(CS 30055)(4,17)

தொடர்பு: **077 330 4225**
**077 555 8574**

இனிய புதுவருட வாழ்த்துக்கள்.

# காரைநகர் பிரதேச சபை
# பொது அறிவித்தல் - 2020

பின்வரும் அறிவித்தல்கள் 01.01.2020 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைக்கு வரும் என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.

**01. பட வரைஞராகப் பதிவு செய்தல்**

2020ம் ஆண்டு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2020ம் ஆண்டு ஜனவரி 31ம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகள். புதுப்பித்தல்களை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**02. வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2020**

இப்பிரதேச எல்லைக்குள் நிரந்தர வியாபாரம் செய்வோர். நடமாடும் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குப் பொருட்களை விநியோகிப்போர் உரிய விண்ணப்பப்படிவத்தை வடக்கு. தெற்கு ஆகிய உப அலுவலகங்களில் 2020ம் ஆண்டு ஜனவரி 20ம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி அப்பகுதி உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2020ம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப்பத்திரத்தை (Trade License ) பெற்றுக் கொள்ளவும். 31.03.2020ம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**03. சூழல் பாதுகாப்பு உரிமம் (EPL - 2020)**

இப்பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் சிறிய மற்றும் நடுத்தர வியாபார / தொழில் முயற்சிகளில் ஈடுபடும் சகலரும் தலைமை அலுவலகத்துடன் தொடர்புகொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தை 31.01.2020ற்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு சூழல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெறத் தவறுபவர்கள் 2020ம் ஆண்டு மேற்குறிப்பிட்ட வியாபார / தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதையும் அறியத் தருகின்றேன்.

**04. துவிச்சக்கர வண்டி, மிருகங்களின் உரிமம்**

மேற்படி துவிச்சக்கர வண்டிகள். வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 2020.03.31ம் திகதிக்கு முன் அப்பகுதி உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களை செலுத்தி 2020ம் ஆண்டிற்கான வாகன. மிருக உரிமங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**05. வீடுகள், கட்டடங்கள், மதில்கள், மலசலகூடங்கள், அமைத்தலும், புதுப்பித்தல் / திருத்த வேலைகள் செய்தலும்**

5.1 எமது நிர்வாகத்திற்குட்பட்ட பிரதேசத்தில் மேற்படி அமைப்பு வேலைகளை அனுமதியின்றி மேற்கொள்ளல் வீடமைப்பு நகர சீர்திருத்தக் கட்டளைச் சட்டம் பிரிவு - 268 இன் பிரகாரம் தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே உரிய விண்ணப்பப்பத்திரங்களை அப்பகுதி உப அலுவலகங்களில் பெற்று சபையின் முன் அனுமதி பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு முன் அனுமதி பெறப்படாத கட்டடங்கள் யாவும் எதுவித நட்டஈடும் வழங்கப்படாது சபையினால் அகற்றப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

5.2 ஏற்கனவே அனுமதி பெற்று ஒருவருட காலத்தில் கட்டட வேலைகள் பூர்த்தியாகாதவிடத்து அவ்விண்ணப்பதாரிகள் அனுமதியினைப் புதுப்பித்துக்கொள்வதோடு கட்டிடத்தை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் உரிய அமைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என அறியத் தருகின்றேன்.

5.3 சபைஎல்லைக்குள் குழாய்க்கிணறுகள் அமைப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

5.4 அனுமதியற்ற கட்டடங்களுக்கு பின்வருமாறு தண்டப்பணம் அறவீடு செய்யப்படும்.

| தொ. இல | அனுமதியற்று கட்டப்பட்ட கட்டட விபரம் | வதிவிடம் (குடியிருப்பு) ஒரு சதுர மீற்றருக்கு | வர்த்தக மற்றும் ஏனைய தேவைக்கான கட்டடங்கள் ஒரு சதுர மீற்றருக்கு |
|---|---|---|---|
| 01 | அத்திவார வேலை மட்டும் பூர்த்தி (தூண் பீட மட்டம்) | ரூபா 10.00 | ரூபா 15.00 |
| 02 | கூரை மட்டம் வரை (கூரை நீங்கலாக) | ரூபா 20.00 | ரூபா 25.00 |
| 03 | கூரை உட்பட நிர்மாணம் | ரூபா 30.00 | ரூபா 35.00 |
| 04 | நிர்மாணம் பூர்த்தி செய்யப்படல் | ரூபா 50.00 | ரூபா 55.00 |
| 05 | எல்லைச்சுவர் (மதில்) / அணைச்சுவர் நிறுவுதல் (நீளஅடிக்கு) | ரூபா 10.00 | ரூபா 15.00 |
| | | | |
| 07 | தொலைத் தொடர்பு மற்றும் வானலை வங்கிக் கோபுரங்களை நிறுவுதல் | உயரத்தில் ஒவ்வொரு 5 மீற்றருக்கும் ரூபா 10,000.00 | |

**06. வீதி ஒழுங்கைப் பேணல்**

காரைநகர் நகர மையப்பகுதியில் அதிகரித்த போக்குவரத்து காரணமாக. விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ளும் முகமாக வியாபார நிலையங்களிற்கு முன்னால் பொருட்களை வெளியே வைத்து விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களிற்கு அறியத்தருகின்றேன்.

**07. விளம்பரங்களை அமைத்தல் / காட்சிப்படுத்தல்**

இப்பிரதேச சபையின் நிர்வாகப் பிரிவிலுள்ள பொது வீதிகளின் இரு மருங்கும் அத்துடன் வர்த்தக நிலை யங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்படும் / காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களை 31.01.2020ம் திகதிக்கு முன் உரிய கட்டணத்தைச் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இவ்வாறு அனுமதி பெறப்படாத முகவர்கள் / நிறுவனாங்கள் / வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு சகல விளம்பரங்களும் உரிய நிலையங்களிலிருந்து 31.03..2020ம் திகதிக்கு பின் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**கட்டண விபரம் பின்வருமாறு.**

| தொ. இல | விபரம் | ஒளியூட்டப் பட்டது | ஒளியூட்டப் படாதது | துணி (1சதுர அடி) |
|---|---|---|---|---|
| 01 | தனியார் வளவுகளில் நிர்மாணிக்கப்படும் அல்லது காட்சிக்கு வைக்கப்படும் பிரச்சார பலகைகள் | ரூபா 100.00 | ரூபா 50.00 | ரூபா 25.00 |
| 02 | பிரதான பாதைக்கு தெரியக் கூடிய விதத்தில் உள்ள இடத்தைப் பயன்படுத்தி பிரதான பாதைக்கு அருகில் நிர்மாணிக்கப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரப் பலகைகள் | ரூபா 100.00 | ரூபா 50.00 | ரூபா 30.00 |
| 03 | உள்ளூராட்சி மன்றங்களின் வளவுகளை பயன்படுத்திய வண்ணம் நிர்மாணிக்கப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரப் பலகைகள் | ரூபா 100.00 | ரூபா 50.00 | ரூபா 50.00 |

**08. பொது இடங்களில் கழிவுகள் போடுதல் தொடர்பான அறிவித்தல்**

காரைநகர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் திண்மக்கழிவுகளை பிரதேசசபைக்கு ஒப்படைக்கும் போது அவை தரம் பிரித்து வழங்கப்படவேண்டும் என்பதுடன் திண்மக்கழிவுகள் பொது இடத்தில் கொட்டுதல் தடை செய்யப்படுவதோடு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**09. அபிவிருத்தி செய்யப்படாத பற்றைகள் காணிகள் தொடர்பான அறிவித்தல்**

அபிவிருத்தி செய்யப்படாத காணிகளில் உள்ள பற்றைகள் துப்பரவு செய்யப்பட வேண்டும். தவறின் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**10. உணவு கையாளும் நிலையங்கள் தொடர்பான அறிவித்தல்**

உணவு கையாளும் நிலையப் பணியாளர்கள் மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு அனுமதி பெற்றிருத்தல் வேண்டும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**11. தரகர் முறை நீக்கல்**

எமது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சந்தைகளில் தரகர் மூலமான நடைமுறை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு சந்தைக் குத்தகையாளர் வேண்டப்படுகின்றனர்.

**12. நீர் வழங்கல் சேவை**

பொது மக்கள் மற்றும் வியாபார நிலையங்கள் அரச தனியார் நிறுவனங்கள் தமது விசேட நிகழ்விற்கு குடிநீர் தேவைப்படின் பிரதேச சபையில் கட்டணம் செலுத்தி குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**13. உழவியந்திரம் , உருளை , பக்கோ சேவை**

பொது மக்கள் மற்றும் வியாபார நிலையங்கள் அரச தனியார் நிறுவனாங்கள் தமது தேவையின் பொருட்டு உருளை. பக்கோ சேவையினைப் பெறுவதற்கு பிரதேச சபையின் உப அலுவலகங்களில் கட்டணங்களை செலுத்தி சேவையினை பெற்றுக் கொள்ளலாம் என்பதனையும் அறியத் தருகின்றேன்.

**14. கட்டாக்காலி கால்நடைகள் (ஆடு,மாடு)**

பொது மக்கள் தமது கால் நடைகளை கட்டி வைத்து வளர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். மீறும் சந்தர்ப்பத்தில் பிரதேச சபையால் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

மேற்கூறிய விடயங்கள் தொடர்பில் பொதுமக்கள் மற்றும் தொழில்செய்வோர் கவனம் ஈர்க்கப்படுகின்றது. குறித்த அறிவித்தலின் பிரகாரம் செயற்படத் தவறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலதிக விபரங்களுக்கு அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**திரு. விஜயதர்மா கேதீஸ்வரதாஸ்**
**தவிசாளர்**
**பிரதேசசபை,**
**காரைநகர்.**
**31.01.2019**

## தமிழ்...

வடக்கு மாகாணத்துக்குள் வெவ்வேறு மாவட்டங்களுக்குள்ளேயே இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன. வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு உள்ள விசேட அதிகாரத்தைக் கொண்டு இந்த இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது.

வேறு மாவட்டங்களில் கடமையாற்றி அண்மையில் இடமாற்றம் பெற்றிருந்தவர்களும் தற்போது இடமாற்றப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அதேவேளை 10 ஆண்டுகளுக்கு மேலாகக் கடமையாற்றும் பெரும்பான்மையின உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படவில்லை.

இந்த இடமாற்றம் ஒரு சாதாரண இடமாற்றம்தான். இதுவரை கிடைத்த முறைப்பாடுகளைக் கருத்தில் கொண்டு இந்த இடமாற்றல்கள் வழங்கப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார். எனினும் தமிழ் பொலிஸார் மட்டும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் அவர் எதுவும் தெரிவிக்கவில்லை.

கடந்தவாரம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. ஈ.பி.டி.பி. கட்சியைச் சேர்ந்த யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினரும், சட்டத்தரணியுமான மு.ரெமீடியஸ் யாழ்ப்பாணத்தில் நடக்கும் மணல் கடத்தலில் தமிழ் பொலிஸாருக்குத் தொடர்பு உண்டு என்று குற்றஞ்சாட்டியிருந்தார்.

யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் கடமையில் உள்ள அனைத்துப் பொலிஸாரையும் இடமாற்றம் செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தார். (எ-26)

## தமிழ் மக்களை...

கையில் இறங்கியுள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் தமக்கு வாக்களிக்கவில்லை என்பதற்காகத் தமிழ் மக்களை இனவாத, மொழிவாத, மதவாத ரீதியில் பழிவாங்குவதை இந்த அரசு உடன் நிறுத்த வேண்டும். இவ்வாறு வலியுறுத்தினார் முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க.

'தேசிய கீதம்' இரு மொழிகளிலும் இசைப்பது குறித்து எழுந்துள்ள சர்ச்சை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இனவாத, மொழிவாத, மதவாத செயற்பாடுகளை முன்னோக்கிக் கொண்டு சென்று தமது அரசியல் இருப்பைத் தக்க வைத்துக்கொள்ள ராஜபக்ச அரசு முயற்சிக்கின்றது. அதில் ஒன்றுதான் 'தேசிய கீதம்' இரு மொழிகளிலும் இசைப்பது தொடர்பான விவகாரம்.

இலங்கையின் அரசமைப்பின் பிரகாரம் சிங்களம், தமிழ் ஆகிய மொழிகள் தேசிய மொழிகளாகும். இலங்கையின் அரசமைப்பின் பிரகாரம் சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் தேசிய கீதத்தைப் பாட முடியும்.

2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர் 2016, 2017, 2018 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற அனைத்து சுதந்திர தின நிகழ்வுகளிலும் தேசிய கீதம் தமிழ்மொழியிலும் பாடப்பட்டு வந்தது. 2020ஆம் ஆண்டு சுதந்திர தின நிகழ்விலும் தேசிய கீதம் சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளும் இசைக்கப்பட வேண்டும்-என்றார். (எ-22)

## வெட்டுக்...

முன்தினம் நள்ளிரவு மீட்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மலையாளபுரத்தைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான முனியாண்டி விக்னேஸ்வரன் (வயது-38) என்பவரே உயிரிழந்துள்ளார்.

சடலத்தில் வெட்டுக் காயங்கள் காணப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கிளிநொச்சிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (எ-35)

## சுடு...

ள்ளது.

யாழ்ப்பாணம் மணியம்தோட்டத்தைச் சேர்ந்த யசிந்தன் கஜலக்சி (வயது-2) என்ற குழந்தையே உயிரிழந்துள்ளது.

கடந்த 23ஆம் திகதி குழந்தையின் தாய் குக்கரில் சோறு சமைத்துள்ளார். அப்போது குழந்தை குக்கரில் இருந்த சோற்றுப் பானையைக் காலால் உதைந்துள்ளது. சோற்றுப் பானை சரிந்து சூடு கஞ்சி குழந்தையின் மேல் கொட்டியுள்ளது. அதில் படுகாயமடைந்த குழந்தை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் குழந்தை சிகிச்சை பயனின்றி நேற்றுக் காலை உயிரிழந்தது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (எ-26)

## கோத்தா...

ன்துறையில் உள்ள ஒருவருக்கு தொலைபேசி அழைப்பை எடுத்த ஒருவர், ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் இருந்து பேசுவதாகக் கூறி, நீங்கள் 4ஆம் மாடிக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளீர்கள். நீங்கள் விசாரணைக்கு வர வேண்டும் என்று கூறியுள்ளார். பின்னர் மனிதாபிமான அடிப்படையில் உங்களை விசாரணையில் இருந்து விலக்க முடியும். நீங்கள் 80 பள்ளிக் கூட பைகள் வாங்கித் தாருங்கள் என்று கூறியுள்ளார். அதன்பின்னர் பள்ளிக்கூடப் பைகள் வேண்டாம் அதற்குரிய பணத்தை வங்கிக் கணக்கொன்றில் வைப்பிலிடுங்கள் என்று கூறியுள்ளார்.

அதையடுத்து காங்கேசன்துறையில் உள்ளவர் 75 ஆயிரம் ரூபாவை வங்கிக் கணக்கொன்றில் வைப்பிலிட்டதுடன், இது தொடர்பாகக் காங்கேசன்துறைப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

வங்கிக் கணக்கிலக்கத்தைக் கொண்டு விசாரணை மேற்கொண்ட பொலிஸார், அது அளவெட்டியைச் சேர்ந்த ஒருவருடையது என்று கண்டறிந்துள்ளனர். அதையடுத்து அவரது வீட்டுக்குச் சென்ற பொலிஸார், விடயத்தைக் கூறாது விசாரணை ஒன்று வருமாறு அறிவித்து விட்டு வந்துள்ளனர்.

அவர்கள் அறிவித்து விட்டு வந்ததும் காங்கேசன்துறைப் பொலிஸாருக்கு தொலைபேசி அழைப்பொன்று வந்துள்ளது. கொழும்பில் இருந்து ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு உயர் அதிகாரி என்று கூறிய ஒருவர், தமது ஆளை ஏன் விசாரணைக்கு அழைத்தீர்கள் என்று கேட்டுத் தர்க்கப்பட்டுள்ளார். ஒரு சிறுவிடயமாக அவரிடம் விசாரணை செய்ய வேண்டியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதன்பின்னர் பொலிஸ் நிலையத்துக்கு வந்த அளவெட்டி நபரிடம் பொலிஸார் கடும் விசாரணைகளை மேற்கொண்டனர். அதில் அவர் வங்கிக் கணக்குக்குப் பணம் வைப்பிலிடப்பட்டதை ஒப்புக் கொண்டுள்ளார்.

கண்டிச் சிறைச்சாலையில் உள்ள தனது சித்தப்பா, வங்கிக் கணக்குக்கு ஒருவர் பணம் வைப்பிலிடுவார் அதை எடுத்துத் தன்னிடம் தருமாறு கூறினார். அதைத் தவிர தனக்கு வேறு எதுவும் தெரியாது என்று பொலிஸாரின் விசாரணையில் அளவெட்டியைச் சேர்ந்தவர் கூறியுள்ளார். அதையடுத்து அவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கண்டியில் உள்ளவர் தூக்குத் தண்டனைக் கைதி என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (எ-26)

## எலிக்...

உள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. எனவே அது தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறு சுகாதாரப்பிரிவு அறிவுறுத்தியுள்ளது.

எலிக்காய்ச்சல் அதிகளவிலுள்ள அடையாள காணப்படும் பிரதேசங்களுக்கு இலவசமாக எதிர்ப்பு மருந்துகளை வழங்கும் வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம)

## ஏட்டிக்கு..

ளனர் என்று தெரியவருகின்றது.

பரந்தன் பிரதான வீதியில் பயணிக்கும் பயணிகள் வட்டுவாகல், சப்தகன்னியர் ஆலயத்துக்கு அருகில் நிலை கொண்டுள்ள இராணுத்தினரே இவ்வாறு சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். அதே வீதியில் 100 மீற்றர் இடைவெளியில் சோதனைச் சாவடி அமைத்துக் கடற்படையினரும் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

குறுகிய தூர இடைவெளியில் இரு சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் சோதனை நடவடிக்கைகளால் பயணிகள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-222)

## முதல்.....

க்க ப்பட்டுள்ளது. அரச அலுவலர்கள், ஊழியர்கள் மட்டுமற்றி உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களையும் சத்தியம் செய்யுமாறுபணிக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலர் ஹெட்டியாராச்சி இந்த அறிவித்தலை சகல திணைக்களங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அனுப்பி வைத்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலின் பிரகாரம் ஏற்பாடுகள் இடம்பெறும் நிலையில், ஆண்டின் முதல்நாள் உறுதியுரையிலேயே மேற்படி வசனம் தொடர்பில் அரச அலுவலர்கள் மட்டுமன்றி, உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களும் கடும் சர்ச்சையைக் கிளப்பு கின்றனர். இதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

'ஒரே நாட்டில் , ஒரே கொடியில் , ஒரே இனத்தில் ஐக்கியமாக வாழ்வோம்' என்னும் பதம் நீக்கப்பட்டு அதற்குப் பொருத்தமான வசனம்அமைக்கப்பட வேண்டும். தவறின் சத்தியப்பிரமாணத்தில் கலந்துகொள்ளவே மாட்டோம் என்று உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேநேரம், “அரச ஊழியர்களான எமது கருத்து இந்த அரசில் எடுபடாத நிலையில், தொழில் நிமித்தம் விரும்பியோ விரும்பாமலோஒப்பமிட வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்” என்று அரச ஊழியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அதன்படி அரச அலுவலர்கள் மனப்பூர்வமாக, மன மகிழ்வுடன் இதைச் செய்யப்போவதில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர். (து-105)

## ராஜபக்ச...

கோத்தாபய ராஜபக்ஷ பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையிலான அரசு தமிழ் மக்களை இனியும் ஏமாற்ற முடியாது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் நேற்றிரவு 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

பிறக்கின்ற புதிய ஆண்டில் தேசிய இனப் பிரச்சினைக்கு நியாயமான நீதியான அரசியல் தீர்வை காலதாமதமின்றி ராஜபக்ச அரசு வழங்க வேண்டும்

2019ஆம் ஆண்டில் தமிழ் மக்களுக்கு திருப்தி தரக்கூடிய விடயங்கள் எதுவும் நடைபெறவில்லை. எனினும், தமிழ் மக்கள் வரித்துக்கொண்ட கொள்கையில் உறுதியுடன் ஓரணியாக நின்று உரிமைகளை வென்றெடுப்பதற்கான பயணத்தைத் தொடர்கின்றார்கள்.

நவம்பர் மாதம் 16ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலுடன் இங்கு ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. ஆனால் தமிழ் மக்களுக்கு நன்மை தரும் கருமங்கள் எதையும் இந்த அரசு இன்னமும் முன்னெடுக்கவில்லை.

தேசிய இனப் பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வை இந்த அரசு வழங்கியே தீர வேண்டும். அதற்கு முன்னர் அரசியல் தீர்வுத் திட்டத்தை இந்த அரசு முன்வைக்க வேண்டும், தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்.

இவை தொடர்பில் ராஜபக்ச அரசின் நிலைப்பாட்டை அறிய எதிர்வரும் 3ஆம் திகதி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் கொள்கை விளக்க உரையை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம்-என்றார். (எ-22)


அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 838
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.12.31
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 52,184,885/-
வெற்றி இலக்கங்கள் 02 20 60 76 K
0114 825 825

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1101
சீட்டிழுப்பு திகதி 2019.12.30 திங்கட்கிழமை
S 41 44 67 73
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 88,719,196/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1634
சீட்டிழுப்பு திகதி 31.12.2019
வெற்றி இலக்கங்கள் 18 34 44 67 W
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட் ரூ.43, 644, 928 /=

ராசி அதிர்ஷ்டம்
திகதி 31.12.2019
வெற்றி வாரம் 2724
வர்ணம் சிவப்பு
இடபம்
வெற்றி இலக்கங்கள் 27 28 50 59
புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3, 176, 880/=
01.01.2020ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்
Web: www.dlb.lk

## மரண அறிவித்தல்



## பெரியதம்பி மார்க்கண்டு

(ஓய்வு பெற்ற அதிபர்)

மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும், மீசாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பெரிய தம்பி மார்க்கண்டு கடந்த **(30.12.2019)** அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பெரியதம்பி சின்னப்பிள்ளை ஆகியோரின் அன்புப் புதல்வனும் காலஞ் சென்ற கிருஸ்ணசாமி தம்கம்மா ஆகியோரின் மருமகனும் கௌரிப்பிள்ளை (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களின் பாசமிகு கணவரும் கோகுலசிறி (சுகாதார முகாமைத்துவ உதவியாளர்- THJ), கோகுலவேணி (ஆசிரியர்- யா/ கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம்), சாந்தரூபன் (கனடா), குகரூபன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலசுந்தரம் (ஓய்வு நிலை RDO), தர்மராசா (ADE- முறைசாராக் கல்வி, தென்மராட்சி), தேவலக்சுமி (கனடா), இசைச்செல்வி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் அருண் (பொறியியலாளர்), Dr.ஆரணி, ஆதீபன் (பொறியியல் பீடம், மொறட்டுவ), சாம்பவி (தகவல் தொழில்நுட்பபீடம், மொறட்டுவ), துவேதன் (கணிய அளவியலாளர்), சாருதன் (சித்தமருத்துவத்துறை, யாழ்ப்பாணம்), சாருஜா (2019, A/L-Bio, யா/வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை), விஷ்ணு (கனடா), விஷாலி (கனடா), கோபிதன் (கனடா), வேரகன் (கனடா), வைஸ்ணவி (Demo- UOM), Dr.துளசிராம் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, மயில்வாகனம், கற்பகம், காசிப்பிள்ளை ஆகியோரினதும் சதாசிவம் (ஓய்வுநிலை வரி அளவீட்டாளர்)இனதும் அன்பு சகோதரனும் காலஞ்சென்ற ஏரம்ப மூர்த்தி, பொன்னம்பலம், பேரம்பலம், சுப்பிரமணியம், தெய்வநாயகி, யோகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை **(02.01.2020)** வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று **10.30** மணியளவில் அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி வடக்கு வீதி,
வயற்கரை, மீசாலை மேற்கு, மீசாலை.

தகவல்:-
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



## திருமதி திலகவதி நாகேந்திரன்

(ஓய்வுநிலை விஞ்ஞான ஆசிரியர் யா/விக்டோரியாக் கல்லூரி, காரைநகர் இந்துக் கல்லூரி, வட்டு இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி)

தங்கோடை காரைநகரைப் பிறப்பிடமாகவும் தற்போது 'ஷண்முக பவனம்', செட்டித் தெரு, நல்லூரை வாழ்விடமாகவும் கொண்ட திருமதி திலகவதி நாகேந்திரன் நேற்று (31.12.2019) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி இராசரத்தினம் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி துரைராஜசிங்கம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், து.நாகேந்திரன் (ஓய்வுநிலை அதிகாரி, இலங்கை வங்கி) அவர்களின் பாசமிகு மனைவியும் திருமதி சிவநயனி செல்வக்குமார் (விரிவுரையாளர், இரசாயனவியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்), ஐங்கரேசன் (இலங்கை வங்கி தலைமைக் காரியாலயம், கொழும்பு), சுந்தரேசன் (ஆசிரியர், யாழ். மத்தியகல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயும், ந.செல்வகுமார் (ஆசிரியர், வட்டு. மத்திய கல்லூரி), திருமதி ஐ.லோகவதனி (இலங்கை வங்கி, தலைமைக் காரியாலயம், கொழும்பு), திருமதி சு.சர்மிளா (ஆசிரியர், பாலிநகர் மகா வித்தியாலயம்) ஆகியோரின் மாமியும் செல்வன் செ.அனீஷ்வராவின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.01.2020) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

(J /10980)

58/13, ஷண்முகபவனம்,
செட்டித் தெரு, நல்லூர்
021 221 7228, 072 770 8040

தகவல்:
கணவர் - து.நாகேந்திரன்,
பிள்ளைகள்.

# 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் S.K. தியாகராசா (தியாகு)

(பிரபல புகையிலை வர்த்தகர்)



தோற்றம்
01.01.1943

மறைவு
01.01.2009

**திதி: சதுர்த்தி 30.12.2019**

நிஜமாக நீங்கள் மறைந்து
பதினொரு ஆண்டுகள் ஆனதோ!
நீங்கள் இல்லா மனை
பொலிவிழந்து போனதுவோ!
உங்களை நினைத்து தினம்தினம்
நாம் ஏங்கித் தவிக்கின்றோம்
காலங்கள் ஓடிக் கடந்தாலும் ஐயா உங்களை
எங்கள் உள்ளத்தில் வைத்து பூஜிப்போம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**நிரந்தர முகவரி:**
**தன்னை, களபூமி, காரைநகர்,**
**தற்காலிக முகவரி:**
**இல.58, மானிப்பாய் வீதி,**
**ஆறுகால்மடம்,**
**077 183 6625**

உங்கள் நினைவுகளுடன்
என்றும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



# நெற்கொழு கழுகுகள் கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஜன.1

குரும்பசிட்டி உதயசூரியன் விளையாட்டுக் கழகம் நடத்தும் இ.அஜந்ஞாபகார்த்த 3ஆவது ஆண்டு 21 வயதுப் பிரிவினருக்கான துடுப்பாட்டத் தொடரில் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.

ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு புலோலி இளைஞர் வி.க. மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் மைக்கல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கம்பர் மலை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழக அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மைக்கல் விளையாட்டுக் கழக அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய மைக்கல் விளையாட்டுக் கழக அணி 5.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 38 ஓட்டங்களை பெற்றது. இதில் கபிலன் 17ஓட்டங்களையும் லக்சன் 9 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப்பெற்றனர். பந்துவீச்சில்முரளிதரன். வனேயன் தலா 3 இலக்குகளையும்.சாணு2இலக்கையும்கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நெற்கொழு கழுகுகள் அணி 5.3பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

அணி சார்பில் அதிகபட்சமாக பவி 18 ஓட்டங்களையும், சஞ்ஜீவன் 17 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் தர்சிகன் 2 இலக்குகளையும், கிருசி ஓர் இலக்கையும் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழக அணி வீரர் பிரணவன் தெரிவு செய்யப்பட்டார். (23)

# இமையாணன் மத்திய வி.க. காலிறுதிக்கு முன்னேறியது

கரணவாய், ஜன.1

சூரியமஹால் அனுசரணையுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக கால் பந்தாட்டத் தொடரில் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் காலிறுதிக்கு முன்னேறியது.

குறித்த போட்டியின் ஆட்டங்கள் திக்கமுனை மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது. இதில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஆட்டத்தில் அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகமும் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகமும் மோதின.

பரப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் போட்டி தொடங்கி 12 நிமிடத்தில் நக்கீரன் அணி கோல் ஒன்றைப் பதிவு செய்ய ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது.

இந்த நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்துவதற்கு சில நிமிடங்கள் இருக்கும் போது இமையாணன் மத்திய அணி கோல் ஒன்றைப் பதிவு செய்ய முதல் பாதி ஆட்டம் சமநிலையில் காணப்பட்டது.

இரண்டாம் பாதியாட்டம் ஆரம்பித்தது இரு அணிகளும் கோல் போட முயற்சித்த போதும் அது கைகூடாமல் போக 1:1 என ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலைத் தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் 2:1 என்ற கணக்கில் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று காலிறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (108)





# சிறப்புற இடம்பெற்ற கால்பந்தாட்ட பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், ஜன.1

நெடுந்தீவு நண்பர் வட்டம் அமைப்பு ஏற்பாட்டில் தீவக கால்பந்தாட்ட அபிவிருத்திச் சங்கத்தால் கால்பந்தாட்ட பயிற்சி முகாம் அண்மையில் நெடுந்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

நெடுந்தீவு நண்பர் வட்டம் அமைப்பின் தலைவர் கு. தனேந்திரன் தலைமையில் ஆரம்பமான இந்த பயிற்சி முகாமில், நெடுந்தீவு பிரதேச செயலாளர் கு.ஊ. சத்தியசோதி, தீவக கால்பந்தாட்ட சங்கத்தின் தலைவர் இ.ஜெயால்ட் அன்ரனி, தீவக கால்பந்தாட்ட சங்கத்தின் உபதலைவர் ஜோ. அருள்ராஜ் மற்றும் நெடுந்தீவு நண்பர் வட்டம் அமைப்பின் உறுப்பினர்களும் பங்குபற்றினர்.

இந்தப் பயிற்சி முகாமில் நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட 7 விளையாட்டுக் கழகங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 15 வீரர்கள் இந்த பயிற்சி முகாமில் பங்குபற்றினர்.

இந்தப் பயிற்சி முகாம் மு. உதயராஜ் (தலைவர் தீவக மத்தியஸ்தர் சங்கம்) மற்றும் அஜித்தால் (புங்குடுதீவு நசரேத் வி.க) நடத்தப்பட்டது. இந்த பயிற்சி முகாமின் பின்னர் நெடுந்தீவு உதைபந்தாட்ட அணி ஒன்று உருவாக்கப்பட்டு, தீவக கால்பந்தாட்ட சங்கத்துடன் இணைக்கப்பட்டது.

சிறந்த 4 கால்பந்தாட்ட வீரர்களை இனங்கண்டு, 4ஆம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள தீவக கால்பந்தாட்ட அணித் தெரிவு பயிற்சி முகாமுக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்று தீவக கால்பந்தாட்ட சங்கத்தின் தலைவர் இ.ஜெயால்ட் அன்ரனி தெரிவித்தார். (23)

# ஜொலிஸ்ரார் வி.க. அணி 6 இலக்குகளால் வாகை



யாழ்ப்பாணம், ஜன.1

இலங்கை கிரிக்கட் சங்கத்தினால் நடத்தப்படும் கழகங்களுக்கு இடையிலான பிரிவு மூன்றின், இரண்டாம் சுற்றுப் போட்டித் தொடரில் இரண்டாவது ஆட்டத்தில் சந்தோஸின் சதத்தின் உதவியுடன் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 6 இலக்குகளால் வெற்றி பெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வவுனியா வட தாரகை விளையாட்டுக் கழக அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற வவுனியா வட தாரகை விளையாட்டுக் கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய வட தாரகை அணி 45.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 263 ஓட்டங்களை பெற்றது. இதில் சுகந்தன் 54 ஓட்டங்களையும் கிரிதரன் 50 ஓட்டங்களையும், தசரிதரன் 26 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் யுமேஸ் 5 இலக்குகளையும், வாமணன், கிருஷோபன், கோபிராம், ருக்ஷ்மன், கிரிஷாந் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார்ஸ் அணி 44.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. அணி சார்பில் சந்தோஸ் 113 ஓட்டங்களையும், ஜெனார்த்தனா ஆட்டமிழக்காமல் 55 ஓட்டங்களையும், ருக்ஷ்மன் ஆட்டமிழக்காமல் 24 ஓட்டங்களையும், தனுஸ்ரன் 21 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் சத்தியமூர்த்தி, சுகந்தன், அரவிந்தன் மற்றும் இளங்குமரன் ஆகியோர் தலா ஓர் இலக்குகளைக் கைப்பற்றினர். (23)

NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி
A/L DAY CLASS
கலைப் பிரிவு
தமிழ் A.K. கீர்த்திராஜன் | இ.நாகரிகம் M. செல்வா | அளவையியல் P. கஜன் / T. யோகன் | அரசியல் R. பாலகாந்தன்
புவியியல் S.P. கரன் | வரலாறு S.S. தாஸ் | நா.அரங்கியல் I. பிரபா | ஊடகவியல் M. கோவேஸ்
ICT T. தேவதர்ஷன் | கிறிஸ்தவம் K. சரோன்
ஆரம்பம்: 02.01.2020 வியாழன் காலை 9.00 மணி

# கொலின்ஸ் அரையிறுதிக்குள்



யாழ்ப்பாணம்.ஜன.1

சூரியமகால் ஆதரவுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டு கழகம் நடத்தும் 7பேர் பங்கு பற்றும் வைத்தியர் மயில்லேறும் பெருமாள் ஞாபகார்த்தமாக வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் கொலின்ஸ் அணி அரையிறுதிக்கு முன்னேறியது.

இதன் காலிறுதியாட்டம் நேற்று முன்தினம் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் குஞ்சர்கடை கொலின்ஸ் அணியை எதிர்த்து அண்ணாசிலையடி அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தின் 12ஆவது நிமிடத்தில் கொலின்ஸ் அணி வீரர் கிருஷாந்தன் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முதலாவது கோலைப் பதிவு செய்ய முதல் பாதியாட்டத்தில் குஞ்சர் கடை கொலின்ஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தனர்.

இரண்டாவது பாதியாட்டத்தின் 9 ஆவது நிமிடத்தில் அண்ணாசிலையடி அணி வீரர் சிந்துஜன் ஒரு கோலைப் பதிவு செய்ய ஆட்டம் சமநிலையானது. இதனால் சமநிலை தவிர்ப்பு உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது.

இதில் குஞ்சர்கடை கொலின்ஸ் அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்கு முன்னேறியது.

(422)

NEC
A/L DAY CLASS
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
கலைப் பிரிவு
தமிழ் T.S.குகன் | அளவையியல் S.பவன் | இ.நாகரிகம் S.சுரேஸ் | அரசியல் G.ஸ்ரீரஞ்சித்
புவியியல் S.சபரிதன் | வரலாறு R.R.ஆனந்தன் | ஊடகவியல் M.கோவேஸ் | ICT T.தேவதர்ஷன்
கிறிஸ்தவம் K.சரோன் | நாட. அரங் I.பிரபா
ஆரம்பம்: 02.01.2020 வியாழன் காலை 9.00 மணி

NEC
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி
வர்த்தகப் பிரிவு A/L DAY CLASS
கணக்கீடு K.பாலகஜன் | வணிகக்கல்வி SK.பாலசபேஷ்
பொருளியல்
S.ஜெயக்குமார் V.ஜெகதீஸ்
ஆரம்பம்: 02.01.2020 வியாழன் காலை 7.00 மணி

விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி
இல.63, சிவன் வடக்கு வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.
தொழினுட்பப் பிரிவு A/L 2019 பரீட்சையில் மாவட்ட முதல் நிலை பெற்ற எமது கல்லூரி மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



இவர்களைப் போன்றே நீங்களும் சாதனையாளர்கள் ஆக விஸ்டம் தொழினுட்பக் கல்லூரியுடன் இணையுங்கள்
புதிய வகுப்புக்கள் ஆரம்பம் "தொழினுட்பப் பிரிவில் வெற்றியை இலக்காகக் கொண்ட மாணவர்களின் ஒரே தெரிவு விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி மாத்திரமே"
A/L 2022, 2020 DAY
04.01.2020 சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு
077 248 7774 / 021 221 7860

# ரஷித் கானுக்கு மோசமான 2019ஆம் ஆண்டு நிகழ்வு

பிக் பாஷ் ரி-20 லீக்கில் நான்கு பந்துப்பரிமாற்றங்களில் 44 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து, மோசமான நிகழ்வுடன் 2019ஆம் ஆண்டை நிறைவு செய்தார் ரஷித் கான்.

ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த சுழற்பந்து வீச்சாளர் ரஷித் கான் உலக அளவில் நடைபெற்று வரும் ரி-20 லீக் தொடர்களில் ஜாம்பவானாக திகழ்கிறார். இவர் தற்போது நடைபெற்று வரும் பிக் பாஷ் லீக்கில் விளையாடி வருகிறார்.

ரஷித்கான் விளையாடி அடிலெய்டு ஸ்டிரைக்கர்ஸ் அணி சிட்னி தண்டர் அணியை எதிர்கொண்டது. இதில் இவர் நான்கு பந்துப்பரிமாற்றங்களில் 44 ஓட்டங்களை விட்டுக் கொடுத்தார். இதுவரை பிக் பாஷ் ரி-20 லீக்கில் இவ்வளவு ஓட்டங்கள் விட்டுக்கொடுத்தது இல்லை. 2019 ஆம் ஆண்டு முடிவு அவருக்கு மோசமாக அமைந்துள்ளது.

அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்
திருமணப்பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்
இந்தியன் செலக்ஷனின்
ஆடைத் திருவிழா
SPECIAL OFFER





ரூபா 1000 பெறுமதியான 03 டொப்கள் வாங்கினால் ரூபா 1000 பெறுமதியான 01 டொப் இலவசம்
02 சாறிகள் வாங்கினால் அதே சாறி 01 இலவசம்
கொட்டன் சல்வார்
பழைய விலை 3500/-
புதிய விலை 1000/-
✓ பட்டுச் சாறிகள்
✓ கொட்டன் சாறிகள்
✓ சல்வார்
✓ சல்வார் துணிகள்
✓ Top வகைகள்
✓ சேட், T சேட் ரவுசர்
இன்னும் ஏராளமான ஆடைத் தெரிவுகள்
காலம் : 01.01.2020 - 05.01.2020 வரை.
இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.

FLC FRENCH LANGUAGE CENTRE
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட
பிரெஞ்ச் Courses
V. Jegan (Trained in France) DELF A1,A2,B1,B2
40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம்: 04.01.20 சனி 10 மணி
181, பிரதான வீதி, நெல்லியடி 0779 789 456 ஆரம்பம் 26.01.20 3.30 மணி
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

Dream of Studying MBBS / MD
China | Belarus | Latvia | Malaysia | Russia
Admission open for 2020 intake



SLMC Approved
Zhengzhou University - China
Dalian Medical University - China
Grodno State Medical University- Belarus
Riga Stradins University - Latvia
MAHSA University - Malaysia
International Medical University - Malaysia
First Moscow Medical University - Russia
Duration: 6 years Medium-English
Admissions : 077 301 3060
Jaffna : 77, Clock Tower Road, Jaffna
Colombo : 107, B-1/1 Galle Road, Colombo 06
ICS Study Medicine Abroad



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.01.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.